
www.padippakam.com

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
சனவரி 2006 ■ ரூ. 6
Volume : 3 - Issue : 3



## தலித் செயல்திட்டம் 2006

www.padippakam.com

பாபாசாகேப் பேசுகிறார்

# தேசியம் : உழைக்கும் வர்க்கங்களைச் சுரண்டும் கொடிய ஆயுதம் – III

வறுமையிலும் வெறுமையிலும் அல்லலுறும் வர்க்கங்களுக்கு, இடையறாது உழைக்கும் வர்க்கங்களுக்கு, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு நன்மை செய்ய நாடாளுமன்ற ஜனநாயகம் தவறி விட்டது என்றால், அதற்கு இந்த வர்க்கங்களே முக்கியமான பொறுப்பாகும். முதலாவதாக, மனிதர்களின் வாழ்க்கையை உருவாக்குவதில் பொருளாதாரத்திற்குள்ள முக்கிய பங்கை, இந்த வர்க்கத்தினர் மிகப் பெருமளவுக்கு அலட்சியப்படுத்தி விட்டனர். பொருளாதார மனிதன் ஒரு போதும் பிறப்பதில்லை என்ற ஒரே காரணத்திற்காக, பொருளாதார மனிதனின் முடிவு பற்றி உண்மையில் நாம் எதுவும் பேச முடியாது.



‘மனிதன் ரொட்டியைக் கொண்டு மட்டுமே வாழ்வதில்லை’ என்று மார்க்சுக்கு பொதுவாக அளிக்கப்படும் மறுப்புரையில், கெட்ட வாய்ப்பாக ஓர் உண்மை பொதிந்துள்ளது என்றே கூற வேண்டும். பன்றிகளைப் போன்று மனிதர்களைக் கொழுக்க வைப்பதே நாகரிகத்தின் குறிக்கோள் அல்ல என்று கார்லைல் கூறியிருப்பதில், எனக்கு உடன்பாடு உண்டு. ஆனால், இந்தக் கட்டத்திலிருந்து நாம் வெகு தொலைவில் இருக்கிறோம். உழைக்கும் வர்க்கத்தினர் பன்றிகளைப் போல தின்று கொழுத்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் கவ்வும் குடலை இறுகப் பிடித்துக் கொண்டு, பசி பட்டினியால் வாடுகின்றனர். எனவே, முதலில் ரொட்டி மற்றவை எல்லாம் பிறகுதான் என்று அவர்கள் கூறுவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் – தற்கால சமூக, அரசாங்க ஒழுங்கமைப்பு குறித்த அடிப்படையான செயல்முறை ஆவணங்களை அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ரூசோவின் ‘சமூக ஒப்பந்தம்’, மார்க்சின் ‘கம்யூனிஸ்டு அறிக்கை’, தொழிலாளர்களின் நிலை குறித்த போப்பாண்டவர் பதின்மூன்றாம் லியோவின் சுற்றுக் கடிதம், சுதந்திரம் பற்றிய ஜான்ஸ்டூவர்ட் மில்லின் நூல் ஆகிய நான்கையும் இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஆனால், உழைக்கும் வர்க்கங்கள், இந்த ஆவணங்கள் மீது உரிய கவனம் செலுத்தத் தவறிவிட்டன. இதற்கு மாறாக, பழங்கால மன்னர்களையும் ராணிகளையும் பற்றிய கற்பனைக் கதைகளைப் படிப்பதில் – தொழிலாளர்கள் இன்பம் காணுகின்றனர்; இந்தக் கெட்டப் பழக்கத்திற்கு அவர்கள் அடிமைகளாகிவிட்டனர்.

மற்றொரு மாபெரும் குற்றத்தையும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே இழைத்துக் கொண்டுள்ளனர். அரசாங்கத்தைக் கைப்பற்றும் ஆர்வ விருப்பம் எதையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. தங்களது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாக, அரசாங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம் என்பதையும்கூட அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், அரசாங்கம் குறித்து அவர்கள் எத்தகைய அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. மனித இனத்துக்கு நேர்ந்த எல்லா அவலங்களிலும் இதுதான் மிகப் பெரியதும், மிக மிக வருந்தத்தக்கதுமாகும். அவர்கள் எத்தகையதொரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், அது தொழிற்சங்க வடிவத்தையே கொண்டிருக்கிறது.

**“ அரசாங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே தொழிலாளர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அரசாங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை தொழிற்சங்க இயக்கம் – தனது நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில், தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு அதிக நன்மை ஏதும் செய்து விட முடியாது. தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுக்குள் ஓயாது சண்டை போட்டுக் கொண்டு – பகைமை பாராட்டும் ஒரு களமாகவே அவை இருந்து வரும். ”**

இதை வைத்து நான் தொழிற்சங்கங்களை எதிர்ப்பவன் என்று எண்ணிவிட வேண்டாம். அவை மிகவும் பயனுள்ள நோக்கத்தை நிறைவேற்றுகின்றன என்பதில் அய்யமில்லை. ஆனால், தொழிலாளர்களுக்கு நேர்ந்துள்ள எல்லாக் கேடுகளுக்கும் தொழிற்சங்கங்கள்தான் சர்வரோக நிவாரணி என்று நினைப்பது தவறு. தொழிற்சங்கங்கள் என்னதான் ஆற்றல் மிக்கவையாக இருந்தாலும், முதலாளித்துவத்தை நேர்மையான வழியில் இட்டுச் செல்லும்படி – முதலாளிகளை நிர்ப்பந்திக்கும் ஆற்றல், வலிமை அவற்றுக்கு இல்லை. அவை நம்பி இருக்கும்படியான ஒரு தொழிலாளர் அரசாங்கம் – அவற்றுக்குப் பின்னால் இருந்தால், தொழிற்சங்கங்கள் கூடுதல் ஆற்றல் கொண்டவையாக இருக்க முடியும்...

உழைக்கும் வர்க்கங்களை ஆட்கொண்டிருக்கும் மூன்றாவது நோய் – ‘தேசியம்’ என்ற முழக்கத்திற்கு அவர்கள் மிக எளிதில் மயங்கிவிடுவதாகும். தொழிலாளர் வர்க்கத்தினர் எல்லா வகைகளிலும் வறியர்களாக இருக்கின்றனர்; தங்களுடைய மிகக் குறைந்தபட்சத் தேவைகளையே நிறைவேற்றிக் கொள்ள இயலாதவர்களாக இருக்கின்றனர். அப்படி இருக்கும்போது, தேசியம் என்று கூறப்படும் லட்சியத்துக்காக – தங்களிடமிருக்கும் எல்லாவற்றையும் பல நேரங்களில் தியாகம் செய்து விடுகின்றனர். தாங்கள் இவ்வளவு தியாகம் செய்யும் அந்தத் தேசியம் வெற்றி பெற்றுவிடும் போது, அது தங்களுக்கு – சமூக சுதந்திரத்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமா என்று அறிய அவர்கள் ஒருபோதும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அது மட்டுமல்ல, தேசியம் வெற்றிவாகை சூடி அதிலிருந்து உதயமாகும் ஒரு சுதந்திர அரசு, இவர்களது எண்ணற்றத் தியாகங்களால் கருவாகி உருவான அரசு, இவர்களது முதலாளிகளின் ஆதிக்கத்துக்கு உள்ளாகி, இவர்களுக்கே பகையானதாக மாறிவிடுவதைப் பல நேரங்களில் பார்த்திருக்கிறோம். தொழிலாளர்கள் தங்களை இலக்காக்கிக் கொள்ளும் மிக மிகக் கொடிய சுரண்டல் வகையைச் சேர்ந்ததாகும் இது.

– தொடரும்

*அகில இந்தியத் தொழிற்சங்கத்தின் சார்பில், 1943 செப்டம்பர் 8 முதல் 17 வரை டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், இறுதி நாள் ஆற்றிய உரையிலிருந்து...*



படிப்பகம்

www.padippakam.com



**யாழன் ஆதி**

பரிபாலனத்தின் உயரத்திலிருந்து
ஓங்கி ஒலிக்கிறது
ஆணையின் உரத்த குரல்
நிவாரணம்... நிவாரணம்

உயிர்களைப் பிடித்துக் கொண்டிருந்த
கைகளை விரித்து வாங்குகின்றனர்
நிவாரணங்களை மக்கள்

மிதிப்பட்டுச் செத்த
மக்களின் மீது சுமத்தப்படுகின்றன
குற்றச்சாட்டுகள்
'பொறுமையற்றவர்கள்'
'பணத்திற்கு அலைபவர்கள்'
'வதந்திகளை நம்புகிறவர்கள்'

மவுனத்தின் மூடிகளை
அணிந்து கொண்டு தலைகுனிகிறது
மக்களின் கோபம்

வீட்டுக்குள் நுழைந்த தண்ணீரை
இறைக்கின்றன செத்தவர்களின்
நைந்த உடல்கள்

அரசின் கைகள்
அணைத்துக் கொள்கின்றன - ஆதரவோடு
அடுத்த தேர்தலுக்காய்
உயிரோடிருக்கும் வாக்குகளை



படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்க வேரறுப்போம்

''இந்நாட்டின் உழைக்கும் மக்கள், பார்ப்பனியம், முதலாளியம் ஆகிய இரு எதிரிகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. பார்ப்பனியத்தை உழைக்கும் மக்களின் எதிரியாகப் பார்க்கத் தவறுவதால்தான் சில விமர்சகர்கள், நம் மீது குற்றம் சுமத்துகின்றனர். நாம் முறியடிக்க வேண்டிய எதிரி பார்ப்பனியமே என்று சொல்லும்போது, என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. ஒரு சமூகம் என்ற அளவில் பார்ப்பனர்கள் பெற்றுள்ள அதிகாரம், சலுகைகள் மற்றும் நலன்களைக் குறித்த பொருளில் நான் அந்த சொல்லைப் பயன்படுத்தவில்லை. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உணர்வை அது மறுக்கின்றது என்ற பொருளில்தான் பார்ப்பனியம் என்ற சொல்லை நான் பயன்படுத்துகிறேன்... பார்ப்பனியத்தை வேரறுக்காமல் - சமத்துவமற்ற தன்மையைப் போக்காமல் - தொழிலாளர்களிடையே உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.''

- டாக்டர் அம்பேத்கர்

தனியார் கல்வி நிறுவனங்களில் தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் 104ஆவது சட்டத்திருத்தத்தை, 21.12.2005 அன்று இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. அனைத்துக் கட்சிகளும் இதை ஆதரித்துள்ளன. நாமும் இதை வரவேற்கும் அதேவேளை, இந்நாட்டில் உள்ள அனைத்து தனியார் துறைகளிலும், நீதித்துறை உள்ளிட்ட முக்கிய கேந்திரங்களிலும் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்திருத்தத்தை, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விரைவில் கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். இடஒதுக்கீடு நாட்டைப் பிளவுபடுத்துகிறது என்று முன்பு கூறிய பா.ஜ.க., இன்று அதே இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையான இடஒதுக்கீட்டை, பல்லாண்டுகளாக மூர்க்கத்துடன் எதிர்த்து வந்த ஒரு கூட்டம், இன்று தங்களுக்கும் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வேண்டும் என்று மாநாடு நடத்தி, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. முதலாளிகள் அனைவரும் ஒன்றிணைந்து தொழிற்சங்கம் அமைத்து, நாங்களும் வறுமையில் வாடுகிறோம்; எங்கள் உரிமைகளும் பறிபோகின்றன என்று கோரிக்கை எழுப்பினால் - அது எந்தளவுக்குக் கொடூரமானதாக இருக்குமோ, அதற்கு ஒப்பானதுதான் - இன்றைக்குப் பார்ப்பனர்கள் தங்களுக்கும் இடஒதுக்கீடு வேண்டும் என்று முன்வைத்துள்ள கோரிக்கையும்.

சென்னையில், டிசம்பர் 24, 25 (2005) ஆகிய இரண்டு நாட்கள் 'பிராமணர் சங்க மாநாடு' என்ற பெயரில் இப்'பிறவி முதலாளி'கள் ஒருங்கிணைந்துள்ளனர். சாதியால் வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ள மக்கள், பிற்படுத்தப்பட்டோராகவும், தாழ்த்தப்பட்டோராகவும் சங்கங்களை உருவாக்கி - தங்களுக்கான உரிமைகளைக் கேட்டுப் போராடும்போது - அதைக் கண்டிப்பவர்கள், விமர்சனம் செய்பவர்கள், இன்றைக்குத் தங்களுக்கு (சாதி அடிப்படையில் அல்ல) வர்ணாசிரம அடிப்படையில் இடஒதுக்கீடு வேண்டும் என்று ஆர்ப்பரித்து அரிவாளைத் தூக்கியுள்ளனர். இதற்கு எதிராக எந்த ஏடும் தலையங்கம் தீட்டவில்லை; 'தினமலர்' இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிடுகிறது. இதையெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்கள் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மத்திய அரசுப் பணிகளில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற மண்டல் குழு பரிந்துரையின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தியதற்கே, 'இந்து ஒற்றுமை' என்ற பெயரில் நாடெங்கும் ரத யாத்திரை நடத்தி - வன்முறைகளைத் தூண்டினர்; அதன் மூலம் வி.பி. சிங் ஆட்சியையும் கவிழ்த்தனர். இன்று தனியார் துறைகளில் இடஒதுக்கீடு கோரிக்கை வலுப்பெற்று வரும் வேளையில், அதை வெளிப்படையாக எதிர்க்கத் திராணியற்று - தங்களுக்கும் இடஒதுக்கீடு வேண்டும் என்று வெட்கமின்றி மாநாடு நடத்துகிறார்கள். இத்தகைய ஆதிக்கப் போக்குகள் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இல்லை எனில், அது நம்மை மீண்டும் அடிமைப்படுத்துவதில்தான் முடியும். எச்சரிக்கை.

முதலாளித்துவ நாட்டில், முதலாளித்துவத்தையும் - முதலாளிகளையும் எதிர்ப்பது எப்படி இன்றியமையாததோ, அதேபோல இந்திய சாதிய சமூகத்தில் பார்ப்பனியத்தையும் - பார்ப்பனர்களையும் எதிர்ப்பது இன்றியமையாததாகிறது. பொருளை மூலதனமாக்கிச் சுரண்டுவது முதலாளித்துவத் தத்துவம் எனில், சாதியத்தை மூலதனமாக்கி - அதையே இந்த நாட்டின் பண்பாடாகவும் மாற்றி, அனைத்து வாழ்நிலைகளிலும் தொல்குடி மக்களை அடிமையாக்கி, இங்கு சுரண்டல் நடத்தப்படுகிறது. ஆதிக்கத்திற்கான கருவியாக அவர்கள் இந்துப் பண்பாட்டை நம் மீது திணிக்கின்றனர். எனவேதான் பண்பாட்டுப் புரட்சியை வலியுறுத்திய புத்தரும், அம்பேத்கரும், பெரியாரும் - பார்ப்பன எதிர்ப்பை முதன்மைப்படுத்தினர்.

சமத்துவ உணர்வை மறுக்கும் பார்ப்பனியத்தை வேரறுக்க, நமக்கான சமத்துவப் பண்பாட்டைத் தூக்கி நிறுத்துவதும், இந்து பண்பாட்டை ஏற்க மறுத்து, அதைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலமே இது சாத்தியமாகும். ●

தலித் முரசு

Volume : 3 Issue : 3

சனவரி, 2006

9 - 12

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்
அழகிய பெரியவன்
யாக்கன்
காவ்யா
விழி.பா. இதயவேந்தன்

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, குளமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in
www.dalithmurasu.com



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

"நம் வரலாற்றுச் சுவடுகளில் சில கறைகள் தென்படுகின்றன. தலித் மக்கள் மீதான பாகுபாடுகளையே நான் இங்கு குறிப்பிடுகிறேன். பல்வேறு அமைப்புகளும் தாங்களாகவே ஒன்றிணைந்து, தலித் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு - தலித் விடுதலைக்கு முன்னுரிமை அளிக்காதவரை, நாம் முக்கிய வெற்றிகளை ஈட்டி விட்டோம் என்று சொல்லிக் கொள்ள முடியாது. கடவுள் உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாது. கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார்; ஆனாலும் அவர் செயலற்றவராகவே இருக்கிறார். கடவுள் பலமற்றவராகவே காணப்படுகிறார். அவர் உருவாக்கிய உலகம், முழுமையற்ற உலகமாகவே இருக்கிறது. ஒரு முழுமை பெற்ற உலகத்தை உருவாக்குவது, நம் கைகளில்தான் இருக்கிறது. பெண்கள் ஆண்களைப் பார்த்து, 'தயவு செய்து நீங்கள் வெளியேறுங்கள்; எங்கள் வழியில் குறுக்கிடாதீர்கள்' என்று சொல்லும் ஓர் உன்னதமான காலத்திற்காக நானும் காத்திருக்கிறேன். பெண்கள் தலைமையிலான புரட்சி மட்டுமே முழு வெற்றியைப் பெற்றுத்தரும் என்று எண்ணுகிறேன்.

நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்மான்ட் டுட்டு, தென்னாப்பிரிக்காவில் இனவெறிக்கு எதிரானப் போராட்டத்தில் பங்கேற்றவர்களில் முதன்மையானவர், 14.12.2005 அன்று பெங்களூரில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றியபோது




Cagle.com

பார்ப்பனர்கள் இடஒதுக்கீடு கோருவது, ஒரு கொடூர நகைச்சுவை! பார்ப்பனர்கள்தான் படிநிலைப்படுத்தப்பட்ட சாதி அமைப்பின் உச்சியில் அமர்ந்துள்ளனர். அவர்களுடைய இடஒதுக்கீடு கோரிக்கை, சமூக நீதித் தத்துவத்திற்கு எதிரானது. அது, இடஒதுக்கீடு என்ற தத்துவத்தையே கேலிக் கூத்தாக்குகிறது. கோயில்களில் அர்ச்சகர் தொழிலில் உள்ள தங்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, அவர்கள் தயாராக இருக்கிறார்களா? இந்தியாவில் இரண்டே இரண்டு தொழில்களில்தான் 100 சதவிகித இடஒதுக்கீடு உள்ளது. கையால் மலமள்ளும் அனைவரும் தலித்துகள்; கோயில் அர்ச்சகர்கள் அனைவரும் பார்ப்பனர்கள். ஒரு தொடக்கமாக, பார்ப்பனர்கள் முதலில் ஒரு சில கோயில்களில், அர்ச்சகர் தொழிலைப் பிற சமூகங்களுக்கு ஏன் விட்டுத் தரக்கூடாது?

கே. சந்துரு, உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர், 'தெகல்கா' ஆங்கில இதழுக்கு அளித்துள்ள பேட்டியில்

மும்பை - 2005




'டெக்கான் கிரானிக்கல்'

பன்னாட்டு குளிர்பான நிறுவனங்கள், இந்தியாவில் 55 இடங்களில் ஆலைகளை நிறுவி உள்ளன. இவை ஒவ்வொரு நாளும் ஒரு கோடி லிட்டர் தண்ணீரை உறிஞ்சுகின்றன. இது, நிறுத்தப்படவில்லை எனில், நீர்வளம் அதிகமுள்ள பகுதிகளும் வறண்டு போய்விடும் நிலை ஏற்படும். பன்னாட்டு நிறுவனங்களின் தாகத்தைத் தணிப்பதில் அதிக கவனம் செலுத்தும் அரசு, அதை விடுத்து தன்னுடைய சொந்த குடிமக்களின் வறட்சியைப் போக்குவதற்கானப் பணிகளில் இறங்க வேண்டும். ஒரு லிட்டர் 'கோகோ கோலா' தயாரிக்கும்போது வெளியேற்றப்படும் ஏழு லிட்டர் தண்ணீர், நிலத்தை மாசுபடுத்துகிறது. தண்ணீர் தனியார்மயம் ஆகிவிட்டால், நீரை மக்கள் இழக்கிறார்கள் என்று பொருள். தற்பொழுது நடந்து முடிந்துள்ள ஹாங்காங் மாநாட்டிற்குப் பிறகு, உலக வங்கியும் - பன்னாட்டு நிதி நிறுவனங்களும் இன்னும் பெரிய கடன்களை, மேலும் சிக்கலான நிபந்தனைகளுடன் அளிக்கத் தயாராகி வருகின்றன. அதில் நீரைத் தனியார்மயப்படுத்துவதும் ஒன்று. வளமான நிலத்தை தரிசு நிலமாக்கிடும் நிறுவனத்திற்கு அரசு உதவி செய்யக்கூடாது."

வந்தனா சிவா, சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானி, நெல்லையில் 23.12.2005 அன்று நடைபெற்ற 'கோக்' எதிர்ப்புப் பட்டினிப் போராட்டத்தில் பங்கேற்றுப் பேசியதிலிருந்து




செய்தி : உ.பி. மாநிலம் மீரட்டில் உள்ள பூங்காவில் அமர்ந்திருந்த காதலர்களை, போலீஸ் கடுமையாக அடித்து விரட்டியது.

'தி இந்து'



படிப்பகம்

www.padippakam.com




# முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு

தமிழ் நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களான முஸ்லிம்களுக்கு, கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து - திண்டிவனத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 9.12.2005 அன்று நடைபெற்ற இக்கூட்டத்தை, முஸ்லிம் மக்கள் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டத்தில் கு. முகம்மது அலி, ஜா. அப்துல் பாபு, கொளத்தூர் மணி, பேரா. கல்விமணி, ரா. முருகப்பன், தி.அ. நசீர் அகமது, வழக்கறிஞர் மு. பூபால் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முஸ்லிம் மக்கள் கழகம், ஏழை எளிய முஸ்லிம்களுக்காகவும், பழங்குடி இருளர் மற்றும் தலித் மக்களுக்காகவும் - மனித உரிமைகளின் அடிப்படையில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறது. சமூக ஒற்றுமைக்காகவும், மத நல்லிணக்கத்திற்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இக்கழகத்தின் 6 ஆம் ஆண்டு தொடக்க விழாவில், முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் விகிதாச்சார அடிப்படையில் இடஒதுக்கீடு கேட்டு, தமிழகத்தில் விவாதத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

தமிழகத்தை இதுவரை ஆட்சி செய்த எந்தக் கட்சிகளும் ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட இஸ்லாமியர்களின் கல்வி, அரசு வேலைவாய்ப்புகளுக்கு எந்த முன் முயற்சியையும் எடுக்கவில்லை. 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குள் இஸ்லாமியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு அளிக்க முடியும். ஆனால், முக்கிய கட்சிகளான தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் தொடர்ந்து பொய்யான வாக்குறுதிகளையே அளித்து வருகிறது.

**❝ கல்வி நிலை உயர்ந்து கொண்டு செல்லும் நிலையில், முஸ்லிம்களின் பங்கேற்பு குறைந்து கொண்டே போகிறது. முஸ்லிம்கள் அதிகமாகப் படிக்கப் படிக்க, உயர் பதவிகளில் அவர்களுக்குத் தரப்படும் இடங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. ❞**

முஸ்லிம்கள், ஒரு சமூகக் குழு என்ற அடிப்படையில் அவர்களுக்குரிய உரிமைகளை அல்லது இடஒதுக்கீட்டை, இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டுப் பெறுவதற்கு உரிமை படைத்தவர்கள். இந்திய அரசியல் சட்டப் பிரிவு 15(4) மற்றும் 16(4)இன் வரையறைக்குள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்க்கவும், 5 சதவிகித இடஒதுக்கீட்டை கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளில் - தற்போது மாநிலத்தில் உள்ள ஏ, பி, சி, டி பிரிவுகளுடன் 'இ' பிரிவு என கூடுதலாக இடஒதுக்கீடு வழங்க - ஆந்திரப் பிரதேச பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

ஆந்திரப் பிரதேசத்தில்தான் முதன் முதலில் அரசு ஆணை ஒன்றின் மூலம் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. ஆனால், பா.ஜ.க. நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. நீதிமன்றம் முஸ்லிம்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கக் கூடாது என ஆணை பிறப்பிக்க வேண்டும் என வாதாடியது; வெளியிலும் போராடியது.

கல்வி நிலை உயர்ந்து கொண்டே செல்லும் நிலையில், முஸ்லிம்களின் பங்கெடுப்பு மற்றும் குறைந்துகொண்டே போகிறது. இந்த அறிகுறிகள் மிகவும் மோசமானது. இதற்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். ஏனெனில், கல்வித் தரம் வளர, வளர அவர்களின் பங்கு குறைந்து கொண்டே செல்கின்றது. விளக்கமாகச் சொன்னால், முஸ்லிம்கள் அதிகமாகப் படிக்கப் படிக்க உயர் பதவிகளில் அவர்களுக்குத் தரப்படும் இடங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன.

ஆந்திர மாநிலத்தின் பிற்படுத்தப்பட்டோர்குழு, முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்ணுங்கருத்துமாய் கவனித்து வந்திருக்கின்றது. மேலும், இடஒதுக்கீடு வழங்கினால் மட்டுமே முஸ்லிம்கள் உயர் பதவிகளில் அமர முடியும் என்பதையும் அது அறிவித்துள்ளது. இதைப் பிற மாநில அரசுகளும் பரிசீலிக்க வேண்டும்.

முஸ்லிம் மக்கள் தங்களுடைய கடமைகளை நன்கு புரிந்து கொண்டு, ஆதிக்க சக்திகளுக்கு பயப்படாமல் இந்திய அரசியல் சட்டத்திற்கு கட்டுப்பட்டு, தங்களுடைய பிரச்சனைகளை தாங்களாகவே தீர்த்துக் கொள்ள விழிப்புணர்வுடன் இருந்து தங்களுக்கு வேண்டிய உரிமைகளைப் பெற முயல வேண்டும். அதற்காகப் போராட்டக் களத்தில் இறங்கிப் போராட வேண்டும். ஏழை, எளிய ஒடுக்கப்பட்டோர் முஸ்லிம்களின் கல்விக்காகவும், மனித உரிமைக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என முஸ்லிம் மக்கள் கழகம், ஆறாம் ஆண்டு தொடக்க விழாவில் கேட்டுக் கொள்கிறது. •



படிப்பகம்

www.padippakam.com

## அழகிய பெரியவன்




ரொட்டியின் விலை
குறைய வேண்டும்
மனிதனின் விலை
உயர வேண்டும்

*- ரசூல் கம்சதேவ*

மனித உயிர்களின் விலை மிகவும் மலிவாகிவிட்டது. இரண்டாயிரம் ரூபாய், 1 வேட்டி, 10 கிலோ அரிசி ஆகியவற்றுக்கு ஒரு மனித உயிர் விலையாகிறது. பண வீக்கம் அதிகரித்துக் கொண்டே போவது போல, மனித மதிப்பும் வீக்க மடைந்து கொண்டே போகிறது நம் நாட்டில்!

மும்பை போன்ற பெருநகரங்களில் இயங்கிவரும் 'தாதா'க்களின் கையாட்கள், வெறும் அய்நூறு ரூபாய்க்கு ஒரு மனித உயிரை எடுப்பதாகச் செய்திகள் உண்டு. நமது அரசோ (கொஞ்சம் பெரிய மனதுடன்) இரண்டாயிரம் ரூபாய்க்கு ஓர் உயிரை எடுக்கிறது!

எதையாவது வழங்கி, தன் ஆட்சிக்கு நற்பெயரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அரசின் ஆத்திரத்திற்கும் - காவல் துறையின் அலட்சியப் போக்கு, வருவாய்த் துறையின் தடித்தனம், திறமையின்மை மற்றும் செக்கு மாட்டுத்தனம் எல்லாம் சேர்ந்து - சென்னை கே.கே. நகரில் உள்ள எம்.ஜி.ஆர். நகரில் 42 உயிர்களை எடுத்திருக்கின்றன.

மிதிபட்டு இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதிலும், அதிர்ச்சி அடைவதிலும், வெட்கப்படுவதிலும், பொறுப்பேற்பதிலும் யாரும் முன்னிற்கவில்லை. தமது தரப்பை நியாயப்படுத்துவதிலும், குற்றம் சாட்டுவதிலும், குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதிலும் எழுகின்ற கூக்குரல்கள் - அழுகுரல்களை மிதிக்கடித்துவிட்டன.

அதிகப்படியான மக்கள் ஒரே இடத்தில் கூடி, மிதிபட்டு சாகின்ற கொடூர நிகழ்வு, கடந்த நவம்பர் ஆறாம் தேதியே சென்னை - வியாசர்பாடியில் நடந்தது. அந்தக் கொடுமையிலிருந்து அரசும், நிர்வாகமும் எந்தப் பாடத்தையும் பெறவில்லை. அலட்சியத்தோடு மீண்டும் நிவாரணப் பொருட்கள் வழங்குவதை தொடர்ந்திருக்கிறார்கள். நடந்து முடிந்திருக்கும் இரு சம்பவங்களுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன.

வியாசர்பாடியில் இதே போன்ற சம்பவம் நடந்தபோது, போதிய காவலர்கள் பாதுகாப்புப் பணிக்கு வரவில்லை. நடு இரவிலிருந்தே நிவாரணம் வழங்கும் மய்யத்திற்கு எதிரே குழுமத் தொடங்கிய மக்களைத் திருப்பி அனுப்பவில்லை. மக்கள் கூட்டம் அதிகமாக, அதிகமாக புத்திசாலித்தனத்தோடு கல்லூரியின் வாயிலைத் திறந்து விடவில்லை. முதலிலேயே கல்லூரியின் வாயிலைத் திறந்து விட்டிருந்தால், ஆயிரக்கணக்கானோர் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடுவது தவிர்க்கப்பட்டிருக்கும். ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு ஓடியதால்தான் - இரு சம்பவங்களிலும் மரணங்கள் நேர்ந்திருக்கின்றன.

எம்.ஜி.ஆர். நகரிலும் இதே காரணங்களினால்தான் மரணங்கள் நேர்ந்திருக்கின்றன. இங்கும் போதிய அளவு காவலர்கள் பாதுகாப்புப் பணியில் இல்லை. மழை பெய்யத் தொடங்கியும் பள்ளியின் வாயிற் கதவுகளைத் திறந்துவிடவில்லை. வெளிச்சமே இல்லை. அந்த இடத்தில் இருந்த பொதுவிளக்குகள் எரியாமல் இருந்திருக்கின்றன. மக்களைக் கலைப்பதற்கு எந்தவிதமான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நீதிபதி ராமன் தலைமையிலான விசாரணைக் கமிஷன் அமைக்கின்ற மிகத் தாமதமான முடிவுக்குப் பதிலாக, முதல் சம்பவத்தின்போதே ஒரு வல்லுனர் குழுவினை அமைத்து ஆராய்ந்திருக்க வேண்டும். அதன் முடிவுகளின்படி செயல் பட்டிருக்க வேண்டும். ஒரு தவறு மறுபடியும் அதேபோல நடக்கிறதெனில், அதற்குக் காரணம் அதை நடக்க அனுமதிக்கும் அலட்சியமான அக்கறையற்ற மனப்போக்குதான்.

அய்நூறு நபர்களுக்கு ஒரு 'கவுன்டர்' வீதம் ஒன்பது 'கவுன்டர்'கள் அப்பள்ளியிலே அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன. இதுவே ஒட்டுமொத்தமாக ஆயிரக்கணக்கானோர் அங்கே சேர்வதற்கு காரணமாகி விட்டிருக்கிறது. நிவாரணப் பொருட்கள் பெறுவதற்கான அனுமதி அட்டை (டோக்கன்) வழங்குவதும், நிவாரணப் பொருட்கள் வழங்குவதும் - ஒரே பள்ளியிலேயே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நண்பகலுக்குள் டோக்கன் வழங்குவதை முடித்துக்கொண்டு, பிற்பகலில் நிவாரணப் பொருட்களை வழங்கிவிடலாம் என்று வருவாய்த்துறை அலுவலர்கள் காட்டிய அவசரமே - மக்களிடையே அய்யப்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டை கிளப்பியிருக்கிறது. 4,500 பேருக்கும் நண்பகலுக்குள் டோக்கன் வழங்க மாட்டார்கள் என்று மக்கள் நம்பியதால், சீக்கிரம் போய் வரிசையில் நின்று 'டோக்கனை' வாங்கிவிடலாம் என்ற எண்ணம் அவரவர்க்கும் வந்துவிட்டிருக்கிறது. சீக்கிரம் வாங்கி வந்துவிட்டால், ஓய்வெடுத்துக் கொண்டு வேறு வேலைகளைப் பார்க்கலாம் என்ற அவசரம் வேறு. தண்டோரா போட்டாலும், ஒலிபெருக்கியில் சொன்னாலும் இதுபோன்ற எண்ணங்கள்தான் மக்களை அங்கே குழும வைத்திருக்கின்றன.

வரிசையிலே முன்னால் நிற்க வைக்கவும், வரிசையில் இல்லாமல் நேரடியாகவே 'டோக்கனை' பெற்றுக் கொள்ளவும் லஞ்சமாக நூறு, இருநூறு என்று காவலர்கள் பெற்றிருக்கிறார்கள். போலி 'டோக்கன்'கள் வழங்கப்பட்டுள்ளன. நிவாரண மய்யத்திற்குப் போகாமலேயே, உணவு வழங்கு அட்டையையும், அய்நூறு ரூபாயையும் தந்துவிட்டால் - நிவாரணப் பொருட்களும் பணமும் வீடுதேடி வந்து விடும் முறைகேடுகளும் நடந்திருக்கின்றன. இந்த மாதிரியான முறைகேடான நடைமுறைகள்தான் - மக்களுக்கு அரசு நிர்வாகத்தின் மீதும், காவல் துறை மீதும் நம்பகத்தை குறைத்திருக்கிறது. நியாயமான அணுகுமுறை, உரியவர்களுக்கு நிவாரணம் என்ற செயல்பாடு இருந்திருந்தால், நிச்சயம் மக்கள் தண்டோராவையும், துண்டறிக்கையையும், ஒலிபெருக்கி செய்தியையும், அரசின் அறிக்கைகளையும் நம்பித்தான் இருப்பர். ஆனால், மக்கள் நம்புவதற்கு ஏற்ற அணுகுமுறைகள் ஏதும் (நிவாரணம் வழங்கும் நடைமுறையில்) இல்லை.

எல்லோருக்கும் நிவாரணம், ஒரே ஒரு நாள்கூட, வெள்ள நீர் சூழ்ந்திருந்தால் போதும், அவர்களுக்கு நிவாரணம் என்ற அறிவிப்பு நிச்சயம் வரவேற்கக் கூடியதல்ல. இதனால் நடுத்தர மக்கள், கீழ்த்தட்டு மக்கள் மட்டுமின்றி, பெரும் பணக்காரர்களுக்கும் நிவாரணம் போய்ச் சேர்ந்திருக்கிறது. மாறாக, பாதிப்பு அதிகம் இருப்பவர்களுக்கு அதிக நிவாரணம் என்ற நடைமுறையே சிறப்பானதாக இருக்கும். சூழ்ந்த நீர் வற்றிவிட்டால், மாடிவீட்டுக்காரர்கள் வழக்கமாக வாழத் தொடங்கிவிடுவார்கள். ஆனால், குடிசை வீட்டுக்காரர்களுக்கு அப்படியில்லை. குடிசைகளை நிச்சயம் மாற்றியாக வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இந்தக் கொடூர நிகழ்வின் இன்னொரு துன்பியல் அம்சம், 'வதந்தி' என்கிற போலியான காரணத்தின் பின்னால் அரசும், நிர்வாகமும் ஒளிந்து கொண்டிருப்பதுதான். அடுத்தடுத்து இச்சம்பவங்களுக்கானப் பொறுப்பினை ஏற்று அக்கறையுடனும், அறிவார்ந்த அணுகுமுறைகளுடனும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாறாக, ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதில் முனைப்புடன் இருக்கிறார்கள் - அரசும் எதிர்க்கட்சிகளும்.

அரசு நியமித்திருக்கும் கமிஷனின் விசாரணைக்கு உரிய அம்சங்களில் ஒன்றாக வதந்தியைப் பற்றி விசாரிப்பது முக்கியமானதாக இடம் பெற்றிருக்கிறது. இந்த கமிஷனின் விசாரணைக்குரிய இரண்டாவது அம்சமாக அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது வதந்தியைப் பற்றியதுதான். ''நிவாரண டோக்கன் வழங்குவதற்கு 18



நிவாரண நெரிசலில் இறந்தவர்களுக்காக, எம்.ஜி.ஆர். நகர் பகுதி மக்கள் நடத்திய கண்டன ஊர்வலம்

> மிதிபட்டு இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதிலும், அதிர்ச்சி அடைவதிலும், வெட்கப்படுவதிலும், பொறுப்பேற்பதிலும் யாரும் முன்னிற்கவில்லை. தமது தரப்பை நியாயப்படுத்துவதிலும், குற்றம் சாட்டுவதிலும், குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதிலும் எழுகின்ற கூக்குரல்கள் - அழுகுரல்களை மிதிக்கடித்துவிட்டன.

ஆம் தேதியே கடைசி. சீக்கிரம் போகிறவர்களுக்கே டோக்கன். காலை 9 மணிக்குதான் வழங்கப்படுகிறது என அறிவித்திருந்தாலும், அதிகாலையே டோக்கன் வழங்கிவிடுகிறார்கள்'' என்பன போன்ற வதந்திகளை விசாரிக்க அழுத்தம் தரப்பட்டுள்ளது. ஆனால், காவல் துறை மற்றும் வருவாய்த் துறையின் மெத்தனம் மற்றும் அலட்சியப் போக்கை ஆழமாக விசாரிக்க அழுத்தம் தரப்படவில்லை.

வீடு வீடாகக் கணக்கெடுப்பது சிக்கலான நடைமுறையென்று முதல்வரே சொல்கிறார். இது அரசின் நிர்வாக அலுவலர்களுக்குப் பரிந்து பேசுவது போல அமைகிறது. போலியாக நிவாரணம் பெறுவோரைத் தவிர்க்கவும், உரிய முறையில் நிவாரணங்கள் போய்ச் சேரவும் வீடு வீடாக அல்லது வீதி வீதியாக மக்களிடம் அதிகாரிகள் போயிருக்க வேண்டியதுதான் - சரியான நடைமுறையாக இருந்திருக்கும். இதற்கு பிற துறைகளையும், தேவைக்கு ஏற்ப தற்காலிக அடிப்படையில் வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகளையும் ஈடுபடுத்தியிருக்கலாம்.

காவல் துறையினரின் மெத்தனப் போக்கு மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது ஆகும். கடந்த சம்பவத்திலிருந்தும்கூட அவர்கள் எந்தப் படிப்பினையும் பெறாதது, அவர்களின் முரட்டு மனோபாவத்தை உணர்த்துகிறது. ஆயிரக்கணக்கில் மக்கள் கூடும் இடத்தில் ஒருசில காவலர்களை மட்டும் பாதுகாப்புப் பணியில் அமர்த்துவது ஏன்? காவலர்கள் வாயில் கதவைத் திறக்காததினால்தான் நெரிசலே



படிப்பகம்

www.padippakam.com

**எந்தவிதமானப் பொருத்தமும் இல்லாத சமகாலத் தலைவர்கள் சிலருடன், அம்பேத்கர் படமும் இடம் பெற்றிருந்தது. இத்தகு செயல்கள், அண்ணல் அவர்களுக்கும் அவருடைய மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதியேயன்றி வேறல்ல.**




அதிகரித்திருக்கிறது. விபத்து நடந்த பிறகு வந்த உறவினர்களின் வண்டிகளைக் கைப்பற்றி வைத்துக்கொண்டும் பணம் பறித்திருக் கிறார்கள் போக்குவரத்துக் காவலர்கள். நெரிசல் ஏற்பட்டு உயிருக் குப் போராடியவர்களை உடனடியாகக் காப்பாற்றி, மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லாமல், அரைமணி நேரத்துக்கும் மேலாக காலதாமதம் செய்திருக்கிறார்கள் காவலர்கள். இதனால் பிழைத்திருக்க வேண்டிய சில உயிர்களும் செத்திருக்கின்றன.

நெரிசல் ஏற்பட்ட இடத்தில் வெளிச்சம் இல்லாததால், சிலர் மணலை அள்ளி கூட்டத்தினரிடையே வீசி, கண்களைக் குருடாக்கி இருக்கின்றனர். சிலர் பிணங்களிடமிருந்து நகைகளையும், உடை மைகளையும் திருடியிருக்கின்றனர். ஒட்டுமொத்த தமிழகத்திலுமே இதுபோன்றுதான் நடந்து கொண்டிருப்பதாக, மனம் இவற்றை யெல்லாம் நினைக்கும்போது கற்பிதம் கொண்டு நடுங்குகிறது. மக்களுக்குத் தேவை நிவாரணமல்ல; நிம்மதியான வாழ்க்கைதான். அதற்கு உத்தரவாதம் தரும்படி அரசும், அதன் நிர்வாகமும் நடந்து கொண்டாலே மக்கள் மகிழ்ச்சியடைவர்.

●

அரசியல் கட்சிகள் தங்களின் துண்டறிக்கைகளிலும், சுவரொட்டிகளிலும், பெரிய அளவில் வைக்கப்படும் விளம்பரப் பலகைகளிலும் சில தலைவர்களின் படங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன. தமது கட்சி இத்தலைவர்களின் கொள்கைகளையும், வழிகாட்டு நெறிகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது இதற்குப் பொருள். ஆனால், உண்மையில் அப்படியெல்லாம் இருப்ப தில்லை. அந்தத் தலைவர்களின் கொள்கைகளுக்கும், சிந்தனை களுக்கும் முற்றிலும் மாறாகத்தான் நடந்து கொள்கின்றன. சில நேரங்களில் அந்தக் கட்சி செயல்பாடுகளுக்கும், அந்தத் தலைவர் களுக்கும் கொஞ்சம்கூட தொடர்பற்று - நேர் எதிர்நிலையில் இருக்கும் விபரீதமும் நடக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களை இந்தியாவில் இருக்கும் எல்லா கட்சிகளும், தலித் மக்களின் வாக்குகளைப் பெற வேண்டிப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதில் பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.சும் கூட விதி விலக்கல்ல. இப்படி இக்கட்சிகள் அம்பேத்கரின் உருவப் படத்தைப் பயன்படுத்தும்போது, அவருக்குக் கொடுக்கும் இடம் கவனத்துக்குரியது. தேசியத் தலைவராக, மூத்த தலைவர்கள் பலரின் சமகாலத்தவராக, அறிவிலும், பங்களிப்பிலும் எல்லாருக்கும் முந்தியவராகக் கருதப்பட வேண்டிய புரட்சியாளரை - மூன்றாம் நிலையிலோ, நான்காம் நிலையிலோ இடம்பெறச் செய்கின்றனர்.

இந்த வரிசைப்படுத்துதல், போகிற போக்கிலோ தவறு தலாகவோ நிகழ்ந்துவிடுகின்ற ஒன்றல்ல. இது, முற்றிலும் அக்கட்சி கள் கண்ணோட்டத்திலேயே நடக்கிறது. இக்கண்ணோட்டங்கள் சாதி அடிப்படையில், படிநிலைப்படுத்தப்பட்ட சனாதன பார்வை யை கேள்விகளின்றி ஏற்றுப் பழக்கப்பட்ட சிந்தனையின் அடிப்ப டையில் இருக்கின்றது. 17.12.2005 அன்று, வேலூர் அருகில் உள் ள கே.வி. குப்பத்தில் தி.மு.க. சார்பிலான பட்டினிப் போராட்டம் நடந்தது. இதை நடத்தியவர் அக்கட்சியின் மிக முக்கிய பொறுப்பில் இருக்கும் துரைமுருகன். இப்போராட்டத்திற்கு அனைத்து நாளே டுகளிலும் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் - அம்பேத்கரின் உரு வப் படம், ஒன்பதாவது இடத்தில் இடம் பெற்றிருந்தது. எந்தவித மானப் பொருத்தமும் இல்லாத இன்றைய அரசியல் கட்சிக்காரர்கள் சிலருடன் அவர் படமும் இடம் பெற்றிருந்தது. இத்தகு செயல்கள் அண்ணல் அவர்களுக்கும், அவருடைய மக்களுக்கும் இழைக்கப் படும் அநீதியே.

இத்தகு அமைப்புகளின் கருத்துக்கும் சிந்தனைக்கும் தொடர் பின்றி, வெகுதூரத்தில் இருக்கிறார் அம்பேத்கர். அவரை இந்த மாதிரியான சிந்தனை கொண்ட அமைப்புகள் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவரின் உருவப்படத்தைப் பயன்படுத்திக் கொள்வதாலேயே தலித்துகள் இவர்களை நம்பி விடவும் போவதில்லை. ●






படிப்பகம்

www.padippakam.com



## இந்தியத் தத்துவங்களின் அரசியல்

விலை ரூ.25

"இந்திய சூழல்களில் தத்துவங்களுக்கு அரசியல் உண்டு என்பதை அதிகம் பேசியவர்கள் பெரியாரும் அம்பேத்கரும். பார்ப்பனியம், சாதியம் என்ற இந்திய எதார்த்தங்களை மிகத் தீவிரமாக அவர்கள் உணர்ந்ததால், சமூகப் போராட்டங்களின் அவசியங்களுக்கிடையில் மரபுசார்ந்த அறிவுத் துறைகள் பற்றிய மலைப்புகள் - அவர்களிடம் எளிதில் தகர்ந்து போயின. மார்க்சிய வரலாற்றாசிரியர்கள் இந்திய சமூக வரலாற்றில் பார்ப்பனியம், சாதியம் ஆகியவற்றின் பாத்திரம் குறித்து ஏராளமாக எழுதியுள்ளார்கள். இருப்பினும், அம்பேத்கரிலும் பெரியாரிலும் பறக்கும் அனல் - மார்க்சிய எழுத்துகளில் பறக்கக் காணோமே என்பதுதான் எல்லாருடைய வருத்தமும்."

■ ஆசிரியர் : ந. முத்துமோகன் ■ வெளியீடு : பரிசல், வள்ளலார் தெரு, பத்மநாபா நகர், சூளைமேடு, சென்னை - 94 ■ பக்கங்கள் : 64

●●



## தமிழுக்கு விடுதலை தமிழருக்கு விடுதலை

விலை ரூ.90

"கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? பட்டிமன்றம் நடத்துகின்ற 'அயோக்கியன்களும்' பேசுகின்ற பகடிகளும், கேட்கின்ற முட்டாள்களும் இன்னும் உண்டா? நாட்டில், சிதம்பரம் பத்மினி, சென்னை பிரகாசமேரி, தளி கல்பனா, சுமதி, மதுரை இந்திராகாந்தி, ஆலங்குளம் உமா, முத்தாண்டிக்குப்பம் வசந்தா, வாச்சாத்தி 16 மலைவாழ் பெண்கள், அத்தியூர் விசயா. வ்ராத பட்டியலில் எத்தனை எத்தனை? உன் மனைவி? உன் மகள்? உன் தாய்? உன் தங்கை? உன் அக்காள்? ஏன் வழக்காடேன்... வாய்கிழிய முடியுமாடா... முட்டாள்களே!"

■ ஆசிரியர் : புதுவை தமிழ் நெஞ்சன் ■ வெளியீடு : தமிழ்மொழிப் பதிப்பகம், 10, இளங்கோ அடிகள் தெரு, மீனாட்சிப் பேட்டை, புதுச்சேரி - 9 ■ பக்கங்கள் : 164

●●



## ஜெஹானாபாத் சிறையுடைப்பு

சொல்லப்படாத செய்திகள் விலை ரூ.15

"ஒரு மார்க்சியர் வர்க்கப் போராட்டத்தைத்தான் தனது அடிப்படையாகக் கொள்கிறாரே தவிர, சமூக அமைதியை அல்ல. கூர்மையான பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நெருக்கடிகள் நிலவுகின்ற குறிப்பிட்ட காலகட்டங்களில் - வர்க்கப் போராட்டமானது, ஒரு நேரடியான உள்நாட்டுப் போராக - அதாவது, நாட்டு மக்களின் இரு பிரிவுக்கு இடையிலான ஆயுதப் போராட்டமாக முதிர்ச்சியடைகிறது.

■ வெளியீடு : விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் (வடக்கு), கோவை - 641 015 ■ பக்கங்கள் : 80





## மகாத்மா புலேவுக்கு முன் மகராசன் வேதமாணிக்கம்

விலை ரூ.150

"இந்துத்துவ எதிர்ப்பு எழும் அதே வேளையில் கிறித்துவ மதமாற்ற நிகழ்வுகள் வேகமாக நடைபெறுகின்றன. இந்த மதமாற்ற நிகழ்வுகள், 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற மதமாற்றத்துடன் வேறுபடுகின்றன. அன்றைய தலித்துகளின் மதமாற்றம் சமூக, பொருளாதார அரசியல் ஒடுக்குதல்களுக்கு எதிர்ப்பாகத் தோன்றியவை. எனவேதான் 1857 இல் நடைபெற்ற சிப்பாய் கலகத்தில், ஆதிக்க சாதியினர் தலித்துகளின் திருச்சபைகளை தீ வைத்துக் கொளுத்தினர். சமூகப் புரட்சியுடன் தொடர்பற்று நடத்தப்படும் மதமாற்றங்கள், பரிசீலிக்கப்பட வேண்டும்."

■ ஆசிரியர் : ஏபி. வள்ளிநாயகம் ■ வெளியீடு : தலித் ஆதார மய்யம், அரசரடி, மதுரை - 16 ■ பக்கங்கள் : 384

●●



## முஸ்லிம்களின் அரசியல் பரிணாம வளர்ச்சி

விலை ரூ.110

"1938 ஆம் ஆண்டின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது வெளிப்பட்ட திராவிட இயக்கம், சுதந்திரப் போராட்டக் காலத்தில், தமிழ்ப் பேசும் முஸ்லிம்களை இந்திய அரசியலின் முன்னணிக்குக் கொண்டு வந்தது. ஒரு தனி முஸ்லிம் தாய்நாட்டுக்கான கோரிக்கையில் வெளிப்பட்ட அவர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு, மதமும் மொழியுமே பெருமளவு காரணம் என்ற உண்மையை இது எடுத்துக்காட்டியது. தமிழ் முஸ்லிம்களின் அண்மைக்கால வரலாறு பற்றிய இந்த ஆய்வு, தமிழ் முஸ்லிம் இயக்கம் பற்றிய சமூகவியல், வரலாற்று ஆய்வுகளுக்கு ஒரு முக்கியமான பங்களிப்பு."

■ ஆசிரியர் : ஜே.பி.பி. மோரே ■ வெளியீடு : அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310 ■ பக்கங்கள் : 256

●●



## தலித்தியமும் தமிழ்த் தேசியமும்

விலை ரூ.5

"சமூக விடுதலையோடு தொடர்புபடுத்தப்படாத தேசிய விடுதலை என்பது கானல் நீரே. அதற்காக நாம் மக்களை அணி திரட்ட முடியாது. மக்களை ஈர்த்து ஆட்கொள்ளாத எந்த ஒரு கருத்துக்கும் பவுதீக வலிமை இருக்காது. அது வெற்றி பெறாது. இந்த அடிப்படையில்தான் தலித்தியத்தையும் தமிழ்த் தேசியத்தையும் உறவுபடுத்திப் பார்க்கிறேன். தமிழ்த் தேசிய சமூக நீதி என்ற கருத்தியலை முன்வைக்கிறேன். தேசிய விடுதலையும் சமூக விடுதலையும் இணைந்த - நம் முழு விடுதலைக்கான வழி இதுவே. இதைத் தவிர வேறில்லை என நம்புகிறேன்."


■ ஆசிரியர் : தியாகு ■ வெளியீடு : தமிழ் தமிழர் இயக்கம், 1220 (29/36), ராணி அண்ணா நகர், க.க. நகர், சென்னை - 78 ■ பக்கங்கள் : 40



படிப்பகம்

www.padippakam.com

# ஹாங்காங் மோசடி!




■ எஸ்.வி. ராஜதுரை

சர்வதேசவர்த்தகத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது, உலக வர்த்தக அமைப்பு - World Trade Organisation (WTO). 1947இல் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, சர்வதேச வர்த்தக அமைப்பு ஒன்றினை உருவாக்கு வதென முடிவு செய்யப்பட்டது. ஆனால், அமெரிக்க நாடாளுமன்றம் (காங்கிரஸ்), இந்த அமைப்பு தனது நாட்டின் நலன் களுக்கு ஊறுவிளைவிக்கும் என அச்சம் தெரிவித்ததால், இந்த அமைப்பு உருவாகா மலே போயிற்று. எனவே, உலக வர்த்த கமானது, 'இறக்குமதி வரிகள் மற்றும் வர்த்தகம் குறித்த பொது ஒப்பந்தம்' (General Agreement on Trade and Tariff - GATT) என்பதால், ஒழுங்குமுறைக் குட்பட்டு வந்தது. இதற்கு சட்டரீதியான தகுதியோ, நிரந்தரமான அமைப்பு என்னும் தகுதியோ இருக்கவில்லை. பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளிடையே பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

தென்அமெரிக்க நாடான உருகுவே யில் நடந்த கடைசிச் சுற்றுப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு உருவாக்கப்பட்ட 'உலக வர்த்தக அமைப்பு' - 1995 சனவரி முதல் தேதியிலிருந்து செயல்படுகிறது. இந்த அமைப்பில் உறுப்பியம் வகிக்கும் இந்தியா உள்ளிட்ட 149 நாடுகள், ஒவ் வொன்றுக்கும் ஒரு வாக்கு என்னும் விதி யிருந்தாலும், நடைமுறையில் இது வளர்ச்சியடைந்த நாடுகளின் ஆதிக்கத் தில்தான் இருக்கிறது. 'தி குவாட்' (The Quad) என அழைக்கப்படும் அமெரிக்கா, ஜப்பான், அய்ரோப்பிய யூனியன், கனடா ஆகியனவே பெரும்பாலான முடிவு களை எடுக்கின்றன. இவற்றுக்கு வளர் முக நாடுகள் கட்டுப்பட்டாக வேண்டும். இந்த வளர்ச்சியடைந்த நாடுகளை எதிர்த்து உலக வர்த்தக அமைப்பில் வழக்காட வேண்டுமானால், இவற்றிட முள்ள பொருளாதார வல்லுநர்கள், சர்வ தேசச் சட்டத்தில் திறமை வாய்ந்த வழக் கறிஞர்களின் எண்ணிக்கையையும் வலுவையும் - வளர்முக நாடுகள் பெற்றிருக்க வேண்டும்.

உலக வர்த்தக நிறுவனத்தால் நடை முறைப்படுத்தப்பட வேண்டிய முக்கிய விதிகளில் சில கீழ் வருமாறு : 1. இறக்கு மதி வரிகளை (குறிப்பாக ஜவுளிகள், வேளாண் பொருட்கள் ஆகியவற்றின் மீதான வரிகளை) நீக்குதல் 2. ஒரு நாட்டி லிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் அந்தந்த நாட்டு நாணயத் திற்கான வரம்புகளை அகற்றுதல் 3. காப் புரிமைகளை நடைமுறைப்படுத்தி, நுண் மதி உடைமைகளுக்கான (அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள், புத் தகங்கள், பதிவு செய்யப்பட்ட இசை, புதிய உற்பத்தி முறைகள், நிகழ்முறைகள், புதிய எந்திரங்கள் மற்றும் கருவிகள்) உரிமத் தொகைகள் சம்பந்தப்பட்டோருக்குச் செலுத்துவதை உத்திரவாதம் செய்தல்.

'உலக வர்த்தக அமைப்பை'யும் அதன் கொள்கைகளையும் ஆதரிப்பவர் கள், உலகம் முழுவதும் ஒரே ஒரு பொது வான பெரும் தடையற்ற வர்த்தக வலை யத்தை நோக்கிச் சென்று கொண்டிருக் கிறது ('நாட்டெல்லைகள் இல்லாத உலகம்') என்று கூறுகின்றனர். அப்படிப் பட்ட ஒரு பொதுவான, பெரும் தடை யற்ற வர்த்தக வலையம் உருவாகும் போது, பொருட்களும் சேவைகளும் தங்கு தடையின்றியும், வரம்புகள் இன் றியும், சந்தைகளின் தேவைக்கேற்ப - ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் போய்ச்சேரும். இந்தச் சூழலானது, சர்வ தேச அளவில் ஒவ்வொரு நாடும் மற் றொரு நாட்டுடன் போட்டிப் போடக் கூடிய தகுதியை உருவாக்கும்.

இப்படிப் பரந்து விரிந்த திறந்த சர்வதேசப் போட்டியின் காரணமாக, பொருட்களையும் சேவைகளையும் மிக உயர்ந்த தரத்திலும் மிகக் குறைந்த விலையிலும் உற்பத்தி செய்யும் நிறு வனங்கள் மட்டுமே இறுதியில் எஞ்சி நிற்கும். இத்தகைய போட்டியானது, உலகமெங்குமுள்ள நுகர்வோர்களுக்குப் பெரும் பயனளிக்கும். இனி இவர்கள் தரம் குறைந்த பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி யிராது. அவர்களது வாங்கும் சக்திக்கு ஏற்ப மிகச் சிறந்த பண்டங்களையும் சேவைகளையும் மிகக் குறைந்த விலைக்கு வாங்கலாம்.

ஆனால், உண்மை இதற்கு நேர்மாறா னது. தடையற்ற வர்த்தகம் என்பது, எங்கும் நடைபெறுவதில்லை. உண்மை யான, நியாயமான தடையற்ற வர்த்தகம் என்பது சாத்தியமேயில்லை (வர்த்தகம் என்றாலே அதில் லாபமும் அடக்கம் அல்லவா?) ஏற்கனவே கூறியது போல, ஒவ்வொரு நாட்டின் வர்த்தகமும் - தொழிலும் ஏதோவொரு வகையான அரசுத் தலையீட்டை எப்போதுமே பெற்று வந்திருக்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் எல்லா நாடுகளும், அதே போல ஒவ்வொரு நாட்டையும் தனித் தனியாக எடுத்துக் கொண்டால், அதி லுள்ள எல்லாத் தொழிலாளர்களும் பிற உழைக்கும் மக்களும் தடையற்ற வர்த்த கத்தால் பயனடைவதில்லை.

ஒரு குறிப்பிட்ட கனிமம், வேளாண் மைப் பயிர், உற்பத்திப் பொருள் அல்லது திறமையில் செழிப்பாக உள்ள ஒரு நாடு



படிப்பகம்

www.padippakam.com



உலக வர்த்தக அமைப்பு மாநாட்டை எதிர்த்து மக்கள் பேரணி

அவற்றைத் தனக்கு வேண்டிய இதர பொருட்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ள - தேசங்களுக்கிடையிலான வர்த்தகம் துணைபுரிகிறது. இதை ஒரு நாடு பெற்றிருக்கும் 'ஒப்பீட்டு ரீதியான அனுகூலம்' எனப் பொருளாதார அறிஞர் டேவிட் ரிக்கார்டோ கூறினார். கருத்தளவில், தேசங் களுக்கிடையிலான வர்த்தகம் எல்லா தேசங்களுக்கும் பயனளிப்பதுதான். ஆனால், நடைமுறையிலோ இத்தகைய லட்சியத்தன்மை வாய்ந்த வர்த்தகம் ஒருபோதும் நடைபெறுவதில்லை. ஒவ்வொரு தேசமும் தனது சொந்த நலன்களின் பொருட்டு, பல வர்த்தகத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துதல், இறக்குமதிப் பொருட்களுக்குக் கூடுதலான வரி விதித்தல், தனது நாட்டில் மேற்கொள்ளப்படும் வேளாண்மை, பொருளுற்பத்தி ஆகியவற்றுக்கு மான்யம் அளித்து, சந்தையில் அவற்றின் விலையைக் குறைத்தல் போன்றவற்றைச் செய்கின்றன.

உலக வர்த்தக அமைப்பில் உறுப்பியம் வகிக்கும் நாடுகளின் வர்த்தகத் துறை அமைச்சர்களின் மாநாடு, இரண்டாண்டுகளுக்கொரு முறை நடக்கிறது. இந்த மாநாட்டில் உருவாக்கப்படும் தீர்மானங்களே - இந்த அமைப்பின் செயல்பாடுகளுக்கு வழிகாட்டுகின்றன. 1996இல் சிங்கப்பூரிலும், 1998இல் ஜெனீவாவிலும், 1999இல் அமெரிக்க நகரான சியாட்டிலிலும், 2001இல் அரபு வளைகுடா நாடான கத்தாரின் தலைநகர் டோஹாவிலும், 2003இல் மெக்சிகோ நகரான கேன்கன்னிலும், 2005 டிசம்பரில் ஹாங்காங்கிலும் இந்த மாநாடு நடைபெற்றது.

டோஹா மாநாடு, உலக வர்த்தக அமைப்பைப் பொறுத்தவரை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அந்த மாநாட்டில்தான், உறுப்பு நாடுகளின் வேளாண்மை சார்ந்த மற்றும் வேளாண்மை சாராத உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்காக 'டோஹா அபிவிருத்தி செயல்திட்டம்' (Doha Development Agenda) உருவாக்கப்பட்டது. உலகளாவிய வர்த்தகத்திற்குட்படும் ஆயிரக்கணக்கான வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கும், தொழிலுற்பத்திப் பொருட்களுக்கும் விதிக்கப்படும் இறக்குமதி வரிகளை நீக்குதல் அல்லது குறைத்தல், ஏற்றுமதி - இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவுகளுக்கு இருந்த உச்சவரம்புகளை நீக்குதல் ஆகியவற்றின் மூலம் உலக வர்த்தகத்தைப் பெருக்க முடியும் என்றும், இதன் மூலம் உலகச்சந்தைக்குப் பல்லாயிரக்கணக்கான டாலர்கள் வந்து சேரும் என்றும், இது எல்லா நாடுகளுக்கும் குறிப்பாக குறைவளர்ச்சியுடைய ஏழை நாடுகளுக்கும் இந்தியா, பிரேசில், சீனா போன்ற வளர்முக நாடுகளுக்கும்கூட பயனளிக்கும் என்றும் கூறப்பட்டது.

ஆனால், 'டோஹா செயல்திட்டத்தை' நடைமுறைப்படுத்துவதில் எல்லா உறுப்பு நாடுகளுமே தயக்கம் காட்டி வந்தன. ஏனெனில், ஒவ்வொரு நாடும் தனது பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக சில பொருட்களின் இறக்குமதியின் அளவுக்கு வரம்பு விதித்தல், இறக்குமதி வரிகளை விதித்தல், ஏற்றுமதிகளை ஊக்குவிக்க மானியங்கள் வழங்குதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கின்றன. அமெரிக்காவும் அய்ரோப்பிய யூனியனில் உள்ள நாடுகளும், தமது வேளாண் துறைக்கு அளித்து வரும் மிகப் பெரும் அரசு மான்யங்களின் காரணமாக, அவற்றின் வேளாண் உற்பத்திப் பொருட்கள் உலகச் சந்தையில் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால், இந்த அனுகூலங்கள் இல்லாத தமது வேளாண் உற்பத்திப் பொருட்களை உலகச்சந்தையில் விற்க முடிவதில்லை என்றும், அவற்றைத் தமது நாடுகளில் இறக்குமதி செய்தால், தம் நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவர் என்றும், குறைவளர்ச்சி நாடுகளும் வளர்முக நாடுகளும் தொடர்ந்து புகார் கூறி வந்தன.

அமெரிக்காவும் அய்ரோப்பிய யூனியன் நாடுகளும் மேற்சொன்ன அரசு மானியங்களை நீக்க வேண்டும் என வற்புறுத்தி வந்தன. மற்றோர்புறம் வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்றவை, தமது தொழிலுற்பத்திப் பொருட்களுக்குக் குறைவளர்ச்சி நாடுகளும் வளர்முக நாடுகளும் விதித்துவரும் இறக்குமதி வரிகளைக் கணிசமாகக் குறைத்தால் தான் - தங்களது ஏற்றுமதிகளை அதிகரிக்க முடியும் எனக் கூறி வந்தன. 'புதிய பொருளாதாரக் கொள்கை'யின் காரண

**“ ஹாங்காங் மாநாட்டில், வளர்முக நாடுகளில் ஒப்பீட்டு நோக்கில் வளர்ச்சி கூடுதலாக உள்ள 'ஜி - 20 நாடுகள்' என்பன, இந்தியாவின் தலைமையில் ஒன்றுகூடி, வளர்ச்சியடைந்த நாடுகளை எதிர்கொள்ள முடிவு செய்தன. ஆனால் இந்த நாடுகள், ஏற்கனவே வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத் திறந்துவிட்டுள்ள தமது சந்தைகளை - இன்னும் அகலமாகத் திறந்து விடுவதில் அக்கறை காட்டினவேயன்றி - தமது நாட்டு சிறிய, நடுத்தர விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் அல்ல. ”**



படிப்பகம்

www.padippakam.com

மாக இந்தியாவில் உருவாகியுள்ள வசதி படைத்த பிரிவினரிடையே - வெளிநாட்டுக் கார்களுக்கான மோகம் அதிகரிப்பதிருப்ப தால், தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் கார் களுக்கு இந்தியா இறக்குமதி வரிகள் ஏதும் விதிக்கக் கூடாது என்று மேற்சொன்ன நாடுகள் விரும்புகின்றன.

எனவே, 'டோஹா செயல்திட்டத்'தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து காலச் சுணக்கம் ஏற்பட்டு வருவதைத் தவிர்க்க, ஹாங்காங் மாநாடு வழிவகுக்கும் எனப் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. வளர்முக, குறைவளர்ச்சி நாடுகளை 'தாஜா' செய்வதற் காக, ஹாங்காங் மாநாடு தொடங்குவதற்கு முன் அமெரிக்காவும் அய்ரோப்பிய யூனியன் நாடுகளும் - தமது நாடுகளில் வேளாண் உற்பத்திப் பொருட் களுக்குத் தரப்பட்டு வரும் மானியங்களை வெகுவாகக் குறைக் கப் போவதாகக் கூறின. அதாவது, வர்த்தகத்தைப் பாதிக்கும் மானியங்களுக்கான (Trade - distorting Subsidies) உச்சவரம்பு களில் அமெரிக்காவும் அய்ரோப்பிய யூனியன் நாடுகளும் முறையே 60 விழுக்காடும் 70 விழுக்காடும் குறைக்க முன் வந்தன. வளர்முக, குறைவளர்ச்சி நாடுகளுக்குத் தரப்படும் மிகப்பெரும் சலுகை போல இது தோற்றமளித்தாலும் உண்மை இதுவல்ல. இந்த 60, 70 விழுக்காடு வெட்டு, 'வர்த்தகத்தைப் பாதிக்கும் மானியங்களின் உச்சவரம்பு'களில் ஏற்படுத்தப்படும் வெட்டேயன்றி, இந்த நாடுகள் தமது வேளாண் உற்பத்திப் பொருட்களுக்குத் அளித்து வரும் மானியங்களில் ஏற்படுத்தப் படும் குறைப்பு அல்ல. அதாவது அமெரிக்காவைப் பொருத்த வரை, கடந்த ஆண்டு 'வர்த்தகத்தைப் பாதிக்கும் மானியங் களாக'த் தரப்பட்ட 74.7 பில்லியன் டாலர், இந்த ஆண்டு 73.1 பில்லியன் டாலராகக் குறைக்கப்படும்!

**“ உண்மையான, நியாயமான தடையற்ற வர்த்தகம் என்பது சாத்தியமே இல்லை. ஒவ்வொரு நாட்டையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டால், அதிலுள்ள எல்லாத் தொழிலாளர்களும் பிற உழைக்கும் மக்களும் தடையற்ற வர்த்தகத்தால் பயனடைவதில்லை. ”**



வளர்ச்சியடைந்த நாடுகள், தமது வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு தற்சமயம் ஒவ்வோ ராண்டும் வழங்கி வரும் மானியங்களின் அளவு 350 பில்லியன் டாலராகும் என்றும், உலக வர்த்தக அமைப்பு செயல்படத் தொடங்கிய 1995 சனவரி முதலாம் நாளி லிருந்து வளர்முக நாடுகளிலும் குறைவளர்ச்சி நாடுகளிலுமுள்ள விவசாயிகள், ஆண்டு தோறும் 24 பில்லியன் டாலர்களை இழந்து வருகின்றனர் என்றும் 2005 ஆம் ஆண்டுக்கான அய்.நா. மனித வளர்ச்சி அறிக்கை (UN Development Report 2005) கூறுகிறது. அதாவது இந்த நாடுகளின் அரசாங்கங்கள், வேளாண் துறைக்கு ஒதுக்கப்படும் மானியங்களைக் குறைத்ததாலும், வெளிநாட்டு வேளாண் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ததாலும் இந்த இழப்பு ஏற் பட்டது. அமெரிக்காவிலும் அய்ரோப்பிய யூனியன் நாடுகளிலும் மானியங்களாகத் தரப் படும் மிகப் பெரும் தொகையில் அங் குள்ள சிறு விவசாயிகளுக்குக் கிடைப் பது, 5 சதவிகிதத்திற்கும் குறைவு. 95 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மானியத் தொகைகளை விழுங்குபவர்கள் - அங்குள்ள பெரும் பண்ணை முதலாளிகளும், நில வுடைமையாளர்களும் கார்கில், மோன் ஸென்டோ போன்ற பெரும் வேளாண் பொருள் வர்த்தக நிறுவனங்களும்தான்.

அது மட்டுமல்ல. அந்த நாடுகளில் வேளாண்துறைக்குத் தரப்படும் மானியங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன : 1. மஞ்சள் பழுப்புப் பெட்டி 2. நீலப் பெட்டி 3. பச்சைப் பெட்டி. 'வர்த்தகத்தைப் பாதிக் கும் மானியங்கள்' மஞ்சள் பழுப்புப் பெட்டிக்குள் அடங்கும். அமெரிக்காவும் அய்ரோப்பிய நாடுகளும் செய்வதெல்லாம் 'மஞ்சள் பழுப்புப் பெட்டி'யிலிருந்து 'நீலப் பெட்டி'க் கும் பின்னர் 'நீலப் பெட்டி'யி லிருந்து 'பச்சைப் பெட்டி'க்கும் மானியத் தொகைகளை மாற்றி விடுவதுதான். முதலிரண்டு பெட்டிகளிலுள்ள மானியங்கள் வேளாண் பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு மறை முகமாகப் போய்ச் சேர்பவை; 'பச்சைப் பெட்டி'யிலுள்ளவை அவர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் தொகைகள்.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், 2002 ஆம் ஆண்டு நிறை வேற்றிய அயோக்கியத்தனமான 'பண்ணைகள் சட்ட முன் வரைவி'ன் படி 180 பில்லியன் டாலர் மானியங்கள் பத்தாண்டுக் காலத்தில் தரப்படும். இது 'மஞ்சள்பழுப்பு' பெட்டியிலிருந்து 'நீலப் பெட்டி'க்கு மாற்றப்பட்ட தொகை. 'நீலப் பெட்டி' என்பதற்கான வரையறையும்கூட, 2004 ஆம் ஆண்டில் திருத்தப் பட்டுவிட்டதால், இந்த மானியத் தொகைகள் 'பச்சைப் பெட்டி'க்குப் போய்ச் சேர்ந்துவிடும். அதாவது கார்கில், மோன்ஸென்டோ போன்ற ராட்சத நிறுவனங்கள் பயப்படத் தேவையில்லை! அய்ரோப்பிய யூனியன் நாடுகள் 2003 - 04 ஆம் ஆண்டில் தமது 'பொது வேளாண் கொள்கை' யில் ஏற்படுத்திய 'சீர்திருத்தங்க'ளின் காரணமாக, 'நீலப் பெட்டி' மானியங்களில் மிகப் பெரும் பகுதி 'பச்சைப் பெட்டி'க்கு மாற்றப்பட்டு விட்டது. எனவே, அமெரிக்காவும் அய் ரோப்பிய யூனியன் நாடுகளும் தமது வேளாண்துறைக்குத் தரப்பட்டு வரும் அரசு மானியங்களை, வெகுவாகக் குறைத்துவிட்டதாகக் கூறுவது அப்பட்ட மான மோசடி.

ஹாங்காங் மாநாட்டில், வளர்முக நாடுகளில் ஒப்பீட்டு நோக்கில் வளர்ச்சி கூடுதலாக உள்ள 'ஜி - 20 நாடுகள்' என்பன (இந்தியா, பிரேசில், அர்ஜென்டினா, சீனா போன்றவை) இந்தியாவின் தலைமையில் ஒன்றுகூடி வளர்ச்சியடைந்த நாடுகளை எதிர்கொள்ள முடிவு செய்தன. இந்தியாவின் வர்த்தக அமைச்சர் கமல் நாத் தலைமையில் நடந்த இந்த முயற்சியை - இந் தியப் பெருமுதலாளிகளும் 'இந்து' போன்ற நாளேடுகளும் நாள்தோறும் புகழ்ந்து வந் தன. ஆனால் இந்த நாடுகள், ஏற்கனவே வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத் திறந்து விட்டுள்ள தமது சந்தைகளை - இன்னும்



படிப்பகம்

www.padippakam.com




அகலமாகத் திறந்து விடுவதில் அக்கறை காட்டினவேயன்றி - தமது நாட்டு சிறிய, நடுத்தர விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் அல்ல.

ஹாங்காங் மாநாட்டில் செய்யப்பட்ட முடிவுகள் என்ன? 2006 ஆம் ஆண்டு முடிவதற்குள் 'டோஹா செயல் திட்டத்திற்கான சட்டகத்தை' முழுமைப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளுக்கு ஏப்ரல் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் தரப்பட்டுள்ளது. அய்ரோப்பிய யூனியன் நாடுகள் தமது ஏற்றுமதிகளுக்கு அளித்து வரும் மானியங்களை 2010 ஆம் ஆண்டிற்குள் ரத்து செய்துவிட வேண்டும் என 'ஜி-20 நாடுகள்' வற்புறுத்தி வந்தன. ஆனால், 2013 ஆம் ஆண்டுவரை அதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்டன அய்ரோப்பிய யூனியன் நாடுகள். இதற்கு அவசரம் அவசரமாக சம்மதம் தெரிவித்தது இந்தியா. இந்த மானியக் குறைப்பாலும்கூட, அய்ரோப்பிய யூனியன் நாடுகளுக்குப் பெரும் இழப்பு ஏதும் இல்லை. இந்த மானியங்களின் அளவு ஆண்டுக்கு 2.7 பில்லியன் யூரோக்கள். ஆனால், இந்த நாடுகள் வேளாண் துறைக்கு ஆண்டுதோறும் அளித்து வரும் மானியங்களின் அளவு 40 பில்லியன் யூரோக்கள். இதில் எந்தக் குறைப்பும் ஏற்படவில்லை.

எனவே, அமெரிக்க அய்ரோப்பிய யூனியன் நாடுகளின் வேளாண் உற்பத்திப் பொருட்கள், உலகச்சந்தையில் மலிவாகக் கிடைக்கும் என்பதாலும், அவற்றை இந்தியாவில் இறக்குமதி செய்வதற்குத் தடைகள் ஏதும் இல்லை என்பதாலும் - இந்திய விவசாயிகளுக்குப் பாதிப்பைத் தவிர வேறேதும் இல்லை. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோதுமை போன்ற வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு, கார்கில், மோன்ஸென்டோ போன்ற நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் கோதுமை போன்றவற்றுக்கு உலகச் சந்தையில் கிடைக்கும் விலையை விடக் குறைவாகவே கிடைக்கும்.

இப்படியிருந்தும் தங்களது தொழிலுற்பத்திப் பொருட்களுக்கும் சேவைகளுக்கும், வளர்முக நாடுகள் போதுமான சலுகைகள் அளிக்கவில்லை என அமெரிக்காவும் அய்ரோப்பிய நாடுகளும் குறை கூறுகின்றன. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரம், பருத்தி உற்பத்தியையே பெரிதும் சார்ந்திருக்கிறது. ஆனால் அமெரிக்கா, தனது பருத்தி உற்பத்தியாளர்களுக்குப் பெரும் தொகைகளை மானியமாகக் கொடுப்பதால், மேற்கு ஆப்பிரிக்கப் பருத்தி உற்பத்தியாளர்களால் உலகச் சந்தையில் போட்டிப் போட முடிவதில்லை. ஹாங்காங் மாநாட்டில் அமெரிக்கா அதிகபட்சம் செய்ததெல்லாம் - தனது நாட்டுப் பருத்தி உற்பத்திக்குத் தரப்பட்டு வரும் மானியங்களைக் குறைப்பது பற்றி ஆப்பிரிக்க நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டதுதான்.

உலக வர்த்தக அமைப்பின் விதிகளின்படி, ஜவுளி ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் இருந்த உச்சவரம்பு (கோட்டா முறை) 2005 சனவரி முதல் தேதியுடன் முடிவுக்கு வந்துவிட்டது. மேலும், 'தடையற்ற வர்த்தகம்' என்னும் சொல்லாடலை உரத்துப் பேசுபவை வளர்ச்சியடைந்த நாடுகள்தான். ஆனால், குறைவளர்ச்சி நாடுகள் என அய்.நா.வால் மட்டுமின்றி உலக வர்த்தக அமைப்பாலும் வரையறுக்கப்பட்டுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் அனைத்துப் பொருட்களுக்கும் கோட்டா முறை இல்லாமலோ, இறக்குமதி வரி இல்லாமலோ - தங்கள் நாட்டில் இறக்குமதி செய்வதை அமெரிக்காவும் ஜப்பானும் விரும்புவதில்லை. ஜவுளி ஆடைகளின் குறிப்பாகப் பின்னலாடைகளின் ஏற்றுமதியையே பெரிதும் சார்ந்திருக்கிறது பங்களாதேஷின் பொருளாதாரம். ஆனால் அவற்றுடன் தனது நாட்டில் உற்பத்தியாகும் ஜவுளியாடைகளால் போட்டிப் போட முடியாத அளவிற்கு விலை குறைவாக உள்ளது என்று அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்தது.

> ❝ கருத்தளவில், தேசங்களுக் கிடையிலான வர்த்தகம் எல்லா தேசங்களுக்கும் பயனளிப்பதுதான். ஆனால், நடைமுறையில் இத்தகைய லட்சியத்தன்மை வாய்ந்த வர்த்தகம் ஒருபோதும் நடைபெறுவதில்லை. ❞

அதேபோல வளர்முக, குறைவளர்ச்சி நாடுகளிலிருந்து அரிசி, பதனிடப்பட்ட தோல் போன்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தயக்கம் காட்டியது ஜப்பான். ஹாங்காங் மாநாட்டின் இறுதியில் வளர்ச்சியடைந்த நாடுகள், அம்பது குறைவளர்ச்சி நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்களில் 97 சதவிகிதத்திற்கு இறக்குமதி வரிகளை நீக்குவது என ஒப்புக் கொண்டன (இந்த நாடுகள் ஏற்று




மதி செய்பவை பெரும்பாலும் அடிப்படைப் பொருட்களே; உற்பத்திப் பண்டங்களின் எண்ணிக்கைகளும் வகைகளும் மிகக் குறைவானவை). அதே சமயம், தங்கள் நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படாமலிருக்க, குறைவளர்ச்சி நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சில வகை ஜவுளி ஆடைகள், அரிசி, பதனிடப்பட்ட தோல் முதலியவற்றுக்கு இறக்குமதி வரிகள் விதிக்கும் உரிமையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

ஆக, 'டோஹா செயல் திட்டம்' பற்றிய பேச்சுவார்த்தைகள் (பேச்சுவார்த்தைகள் மட்டுமே) இன்னும் ஓராண்டுக்கு நீடிக்கும் என்பதுதான் ஹாங்காங் மாநாட்டில் விளைந்த இறுதி விளைவு. ●



படிப்பகம்

www.padippakam.com

# ஜாதிக் கட்டுப்பாடு; ஊர் புறக்கணிப்பு

# பட்டினிச் சாவு - ஆபத்தில் பழங்குடியினர்

■ முருகப்பன்

17.12.2005 – இரவு. விழுப்புரம் மாவட்டம் கொரலூர் கிராம நாட்டாமை ஜெயபால் தலைமையில், அம்மாவட்டத்தைச் சேர்ந்த சாதி இந்துக்கள் ஊர்க் கூட்டம் கூட்டியுள்ளனர். அதில், இருளர்களுக்கு இனி யாரும் வேலை கொடுக்கக் கூடாது. அப்படி கொடுப்பவர்கள் 500 ரூபாய் அபராதம் கட்ட வேண்டும். இருளர்களின் ஆடு, மாடுகள் சாதி இந்துக்களின் இடங்களில் மேயக் கூடாது என ஊர்க்கட்டுப்பாடு போட்டுள்ளனர். அதற்குப் பிறகு நான்கு நாட்களும், அங்கு வாழ்ந்த 30 குழந்தைகள் உள்ளிட்ட 105 இருளர்களும், கஞ்சி காய்ச்சி குடிக்கக்கூட வழியில்லாமல் பட்டினியாகவே இருந்துள்ளனர். இன்னும் 4 நாட்கள் இந்நிலை நீடித்திருந்தால், சாதி இந்துக்களின் ஊர்க்கட்டுப்பாட்டால் - பழங்குடி இருளர்களும், குழந்தைகளும் பட்டினியால் இறந்திருப்பர்.


சுந்தரி


பச்சையம்மா


சித்ரா தங்கமணி


வசந்தா

மேலே குறிப்பிட்டுள்ள அதிர்ச்சியூட்டும் செய்தி, 'பழங்குடி இருளர் சங்க'த்திற்கு நான்கு நாட்கள் கழிந்து தெரிந்தவுடன் உண்மையைக் கண்டறிந்து, பட்டினிச் சாவைத் தடுத்து நிறுத்த அப்பகுதிக்கு விரைந்தோம். சங்கத்தின் முன் முயற்சியாக, இருவரிடம் 4 மூட்டைகள் அரிசி நன்கொடையாகப் பெற்று, கொரலூர் இருளர்களுக்கு அளிக்கப்பட்டது. அரிசி நன்கொடையாகக் கிடைத்த இரவு 12 மணிக்கு, அதைக் கஞ்சி வைத்து சாப்பிட்டனர்.

கொரலூர் கிராமம் - கஞ்சனூர் அருகே உள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி (படையாச்சி) என்பவரின் மகள் தனலட்சுமியின் ஆடுகள், பழங்குடி இருளரான ரமேஷ் என்பவரின் வாழை, பூந்தோட்டங்களில் மேய்ந்துள்ளது. இதைப் பார்த்த ரமேஷ், ஒரு சிறு கல் எடுத்து வீசி ஆடுகளைத் துரத்தியுள்ளார். அப்போது தனலட்சுமி, ரமேஷைப் பார்த்து, ''தொடப்பக் கட்டையால அடிப்பண்டா... சாண்டக் குடிச்சவனே... ஆட்ட ஏண்டா கல்லால அடிச்ச'' என்று திட்டியுள்ளார். அதற்கு ரமேஷ், ''தோட்டத்தில் ஆடு மேய்ந்தது. அடிக்கவில்லை துரத்தினேன்'' என்று கூறியுள்ளார். இதைக் கேட்ட தனலட்சுமி, 'இருளப் பையனுக்கு தோட்டம் ஒண்ணு வாழுதா' எனக் கேவலமாகத் திட்டியுள்ளார். பிறகு ஊருக்குள் சென்று, அவருடைய தாயார் மற்றும் அக்காவையும் கூட்டிக் கொண்டு இருளர் குடியிருப்பிற்குச் சென்று ரமேஷையும் மற்ற இருளர்களையும் தரக்குறைவாகவும், அவமானப்படுத்தியும் பேசியுள்ளார். அன்று மாலையே தனலட்சுமியின் தம்பி ராஜேந்திரன், ரமேஷை கடுமையாகத் தாக்கியுள்ளார். தடுத்த ரமேஷின் மனைவியையும் பிடித்து இழுத்து கீழே தள்ளி அசிங்கமாகத் திட்டியுள்ளார்.

மறுநாள் 4.12.2005 அன்று, இது தொடர்பாக கஞ்சனூர் காவல் நிலையத்தில், பழங்குடி இருளர் சங்கப் பொறுப்பாளருடன் சென்று ரமேஷ் புகார் கொடுத்துள்ளார். அதற்கு ரசீது கேட்டதற்கு, அங்கிருந்த தலைமைக் காவலர், ''ரசீது வாங்கி வழிச்சி நக்கப் போறியா'' என்று கேட்டுள்ளார். அன்று மாலை காவல் நிலையம் வந்த ஆய்வாளர் உஸ்மான் அலிகான், சாதி இந்துக்களுடன் சேர்ந்து கொண்டு, புகாரைத் திரும்பப் பெறும்படி இருளர்களை மிரட்டியுள்ளார். இருளர்கள் இதற்கு உடன்படாத நிலையில், காவல் ஆய்வாளர் கடும் கோபத்துடன் எழுந்து சென்று, பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்க விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிறுவாலை மு. நாகராஜன் என்பவரை, சட்டையைப் பிடித்து இழுத்து, 'உட்காருடா' என்று தள்ளியுள்ளார்.

பாதிக்கப்பட்டு புகார் கொடுக்க வந்தவர்களையே கைதி போல காவல் நிலையத்தில் உட்காரவைத்துள்ளனர். இதுமட்டுமின்றி புகாரை திரும்பப் பெற மறுத்து நியாயம் கேட்டதற்காக, 3 இருளர் பெண்கள் உள்ளிட்ட 6 பேர் மீது பொய்வழக்குப் போட்டுள்ளனர். இதில் கொடுமை என்னவென்றால், ஆடு மேய்ந்ததால் வாய்த்தகராறு நடந்த இடத்திலேயே இல்லாத ராஜவேல் என்பவரையும் - மற்ற இரு ஆண்களையும் சேர்த்து மூன்று பேரையும் காவல்துறை கைது செய்து சிறையில் அடைத்தது. ராஜவேல், இருளர் சங்கத்தின் முகாம் தலைவர். பொறுப்புடனும், திறமையாகவும் பணியாற்றுபவர். இதன் காரணமாகவே போலிசார் இவரையும் கைது செய்துள்ளனர்.

இருளர்கள் மீது போடப்பட்ட பொய்ப் புகார், போலிசாரால் இரவு முழுவதும் பலமுறை எழுதி எழுதி கிழிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டு, கடைசியாகத் தயாரிக்கப்பட்டதாகும். தனலட்சுமியை குற்றவாளியாக சேர்க்காத போலிசார், சாதி இந்துக்களிடம் 10,000 ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டு, குற்றமிழைக்காத 6 இருளர்கள் மீது பொய்வழக்குப் போட்டு, 3 பேரையும் கைதும் செய்தனர். முதலமைச்சர் கட்டுப்பாட்டில் அதிநவீன வசதிகளுடனும், அதிகளவு ஊதியத்துடனும் இயங்கும் தமிழக காவல் துறையின் லட்சணம் இப்படி சந்தி சிரிக்கிறது!

கொரலூரில் ஊர்க்கட்டுப்பாடு இப்படி என்றால், கொத்த மங்கலத்தையும் கொஞ்சம் பார்த்து விடுவோம். இதுவும் ஆடு சம்பந்தப்பட்டதுதான். திண்டிவனம் வட்டம் செ. கொத்த மங்கலம் கிராமத்தில், இருளர் குடும்பங்கள் மொத்தம் 14 தான். வன்னியர்கள் 500க்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். 2.12.2005 அன்று இருளரான அமாவாசை என்பவரின் ஆடுகள், அந்த ஊர் நாட்டாமையான லட்சுமணக் (கவுண்டரின்) கரும்பு நிலத்தில் மேய்ந்தது என்பதற்காக, அவருடைய மகன் சுந்தர்ராஜன் (கவுண்டர்), ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த அமா வாசையின் மகன் பூங்காவனம் என்கிற 18 வயது பையனை, கடப்பாரையால் அடித்துத் தள்ளியுள்ளார். இதைத் தடுத்த பூங் காவனத்தின் தாயார் பச்சையம்மாவை மாராப்பு சேலை, ஜாக் கெட்டை கிழித்து அவமானப்படுத்தி உள்ளார். மேலும், ஒரு சிறிய ஆட்டுக்குட்டியைப் பிடித்து ஓங்கி தரையில் அடித்துக் கொன்றுள்ளார். இது தொடர்பாக பெரிய தச்சூர் காவல் நிலை யத்தில் பச்சையம்மா புகார் கொடுத்தார். போலிசார் வழக்குப் பதிந்து, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் சுந்தர்ராஜன் (கவுண்டரை) கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதனையடுத்து 4.12.2005 அன்று முதல் இக்கிராமத்திலும் இருளர்கள் ஊர்ப்புறக்கணிப்புக்கு ஆளானார்கள். இருளர்கள் யாருக்கும் வேலை கொடுக்கக் கூடாது என சாதி இந்துக்கள் முடி வெடுத்ததுடன், அங்குள்ள கடைக்காரர்களிடமும், 'இருளர் களுக்குப் பொருள் கொடுக்கக் கூடாது என்றும், மீறி கொடுத்தால் ஊர்க்கட்டுமானம் போட்டு சாதியைவிட்டு நீக்கிவிடுவோம்'

**❝ இருளர்களுக்கு இனி இழப்பதற்கு ஏதுமில்லை. ஆனால், அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இழப்பதற்கு நிறைய உள்ளன. இது தேர்தல் நேரம். இருளர்கள் தேர்தல் புறக்கணிப்பு ஆயுதத்தைக் கையில் எடுப்பார்கள். அப்போது அவர்களுக்கு பதில் சொல்லியே தீர வேண்டும். ❞**

எனக் கூறி கடைக்காரர்களை பொருள் தர விடாமல் தடுத்தனர். ஆனால், வன்னியர்களின் இந்த மிரட்டலை மீறி சிறீராம் (செட்டி யார்) என்பவர், தன்னுடைய கடையில் தற்போது பொருள் கொடுத்து வருகிறார். இதுகுறித்து நடவடிக்கை கேட்டும், இருளர்களுக்குப் பாதுகாப்பு கேட்டும், கொத்தமங்கலம் முகாம் அமைப்பாளர் சங்கர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் திண்டிவனம் சார்பாட்சியருக்கு 21.12.05 அன்று புகார் செய்தார்.

இந்நிலையில், 23.12.2005 அன்று சிறையில் இருந்து பிணையில் வெளிவந்த சுந்தர்ராஜன் (கவுண்டர்), தன் உறவினர் களுடன் பழங்குடி இருளர் குடியிருப்பிற்குச் சென்று, இருளர் களை மிகக் கேவலமாகப் பேசி மிரட்டியுள்ளார். மறுநாள் 24.12.2005 அன்று காலை 6 மணியளவில் சாதி இந்துக்கள், இருளரான ஆறுமுகம், அவர் மனைவி மங்கலட்சுமி


அமாவாசை


ரமேஷ்


ராஜுவேலு


பூங்காவனம்

என்பவரைத் தூண்டிவிட்டு, கூடவே சிவ கொழுந்து (கவுண்டர்), அவர் மனைவி, மகள் அனைவரும் இருளர் குடியிருப் பிற்குச் சென்று, மாவட்ட ஆட்சியருக்கு புகார் அனுப்பிய சங்கரின் அக்கா காசி யம்மாவின் கையை, காலைப் பிடித்துக் கொண்டு கடுமையாக அடித்துள்ளனர். கீழே விழுந்த காசியம்மாளின் மார் பிலும், வயிற்றிலும் சிவகொழுந்தும், ஆறுமுகமும் ஏறி மிதித்துள்ளனர்.

இதனால் கடுமையாகப் பாதிக்கப் பட்ட காசியம்மா, திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். கொஞ்ச நேரத்தில் அதே மருத்துவ மனைக்கு ஆறுமுகம் மட்டும் வந்து சேர் கிறார். காவல் நிலையம் சென்று, சங்கர், காசியம்மாள் உள்ளிட்ட 5 பேர் மீது சாதி இந்துக்கள் தூண்டுதலின் பேரில் பொய்ப் புகார் கொடுத்துள்ளார் என்பது பிறகு தான் தெரிந்தது. அதன்பிறகு நடந்த சம் பவம் குறித்து காசியம்மாளும் புகார் கொடுத்துள்ளார். ஆனால் போலிசார், வன்னியர் தூண்டுதலின் காரணமாக ஆறுமுகம் அளித்த புகாரின் பேரில் சங் கரையும் அவரது தந்தையையும் அவசர அவசரமாகக் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். 'சங்கம் வச்சிகிட்டு எங்களப் பத்தி நோட்டீசா போடுற' என்று கூறி காவல் நிலையத்தில் சங்கரை, காவல் ஆய்வாளர் குமார் கடுமையாக அடித்துள்ளார்.

உண்மையான புகாரின் மீது நட வடிக்கை எடுக்காமல், பொய்ப்புகாரில் பாதிக்கப்பட்டவர்களையே காவல்துறை கைது செய்கிறது. சாதி இந்துக்களும் - போலிசாரும் (அரசு நிர்வாகமும்) சேர்ந்து திட்ட மிட்டுச் செய்யும் சதி இது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். காவல் துறை சாதியமயமாகி இருக்கிறது என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை.

இரண்டு கிராமங்களிலும், ஜாதிக்கட்டுப்பாடு - ஊர்ப்புறக் கணிப்பு என்ற பெயரில் இருளர்கள் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளானது குறித்து, பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டும் அதிகாரிகள் அசையாமலிருக்கிறார்கள். இருளர்களுக்கு இழப் பதற்கு ஏதுமில்லை. ஆனால், அரசியல்வாதிகளுக்கும் இவர் களுக்கு அடிவருடியாக இருந்து அடிமை சேவகம் புரியும் அதிகாரிகளுக்கும் இழப்பதற்கு நிறைய உள்ளன. இது தேர்தல் நெருங்கும் நேரம். இருளர்கள் 'தேர்தல் புறக்கணிப்பு' என்கிற ஆயுதத்தைக் கையில் எடுப்பார்கள். இதற்கு இந்த நாட்டு 'ஜனநாயகம்' பதில் சொல்லியாக வேண்டும்.

சொந்த ஊரில் இருளர்களுக்கு வாழ்வுரிமை மறுக்கப்பட்டு வரும் நிலையில், ஜனநாயகம் செத்துப் போனால்தான் என்ன?



படிப்பகம்


www.padippakam.com



## அயோத்திதாசரின் ஏங்கல்ஸ்

# எம்.ஒய். முருகேசம்

1869 - 1921



“வள்ளல் முருகேசம் ஈழமீன்ற
தர்ம பாலர் வாழ்வில் பொதுமை
மேதை ஆல்காட் உற்ற நண்ப - உம்
தெள்ளமுது கட்டுரைகள் பல
மக்களுக்கு மலிவாக அடுக்கடுக்கி
வைத்தார் சித்தார்த்தா அச்சக
முதல்வர் ராசரத்தினமென்பர்
தெளிவானார் பெரியாரும் அவை
களைப் பெற்றே - கூட்டினார் ஈரோட்
டில் ‘புத்த நெறி’ மாநாட்டை. ஈர்க்கப்
பட்டார் மேதை மல்லல்லசேகரர்
சொற்பொழிவினிலே ஏற்றமுற்றார்
அன்றைய அரசியலிலே.”

*- மறுமலர்ச்சி சிற்பி கவிராசப் பண்டிதர் க. அயோத்தி தாசர், 90 ஆம் ஆண்டு நினைவு நாளான 5.5.2005 அன்று, தங்கவயல், மாரிக்குப்பம் இந்திய பவுத்த சங்கம் வெளியிட்ட துண்டறிக்கையிலிருந்து.*

**■ ஏபி. வள்ளிநாயகம்**

மிகச்சிறப்பான தங்கம் வியாபித்த புவியியல் கட்டமைப்பைக் கொண்டது என்று சிலாகிக்கப்பட்ட தங்க வயலுக்கு - தங்களைத் தாரை வார்த்துக் கொடுத்த, தங்கள் உயிர்களைப் பற்றிச் சிறிதளவேனும் கவலை கொள்ளாத, தங்கத்தைக் கண்டெடுக்கும் மூலதன மனிதர்களாக தொல் தமிழர்களே முற்றுப் பெற்றிருந்தனர். பிற மனிதர்கள் தங்கம் எடுக்கும் தொழிலைக் கண்டு அஞ்சிப் பின்வாங்கியதில், தொல் தமிழர்களின் தங்கம் நோக்கிய அணிவகுப்பு, வாழ்க்கைப் போராட்டமாக வசப்பட்டு, தங்கச் சுரங்கத் தொழில் வாய்க்கப்பட்டு வளர்ந்தோங்கும் நிலை ஏற்பட்டது. தங்கச் சுரங்கத் தொழில் ஆரம்பமாகிய முதல் இருபதாண்டுக் காலத்தில் (1880 - 1900), தங்கவயல் உத்வேகமான வளர்ச்சி நிலையை அடைந்தபோது, தொல் தமிழர்கள் மதங்களில் மயக்கம் ஆகிவிடாதபடி - உரிய கவன ஈர்ப்போடு அவர்களை மார்க்க மனிதர்களாக்கியது பவுத்தமாகும்.

தங்கவயலில் பவுத்தம் வேரூன்ற கனவு க்ண்டு, நனவாக்கியவர்களில் பண்டிதர் அயோத்திதாசரே முன்மனிதராவார். தங்கவயலில் தாழ்த்தப்பட்டத் தமிழர்கள், கொத்துக் கொத்தாகப் பற்றிப் படர்ந்த தகவமைப்பைப் பெரும் வாய்ப்பாகக் கொண்ட அயோத்திதாசர், தங்கவயலுக்கு அடிக்க்டி வருகை புரிந்தார். பூர்வீகக் குடிகளிடம் நேர்முகத் தொடர்பு கொண்ட பண்டிதர், நாம் பிறவிப் பவுத்தர்கள் என்பதை முன்மொழிந்து, புதியதாக உருவாகி வரும் பொன்விளையும் பூமி பவுத்தமயமாகும் பொருட்டு, அந்நாளில் மைசூர் மைன்ஸ் பகுதியில் சமூக மனிதராக உயர்ந்து நின்ற எம்.ஒய். முருகேசம் அவர்களை தோழராக வாய்க்கப் பெற்றார்.

சமூக ஆளுமையான எம்.ஒய். முருகேசம், அறிவாசான் அயோத்திதாசரோடு உறவாடி, உரையாடி பவுத்தத்தை உள்வாங்குவதற்கு முன்பு, பார்ப்பனியத்தின் மீள் வடிவமான ‘அத்வைதம்’தான் - ஆன்மீகச் சுய இன்பத்தின் உச்சம் என மார்தட்டி வாழ்ந்தவர்; ‘சிவகேசவ அத்வைத சபை’யினூடே சைவ சித்தாந்த வளர்ச்சிப் பணிக்கு பறிபோய்க் கொண்டிருந்தவர்; பணம் சேரச் சேர எவருக்கும் பார்ப்பனியக் கலாச்சாரமும் வந்து சேரும் ஆபத்தில் - மீள முடியாதவராய், ஆதிசங்கரனின் பவுத்த அழிப்பு வாளும் கேடயமுமான அத்வைதத்தில் மயங்கி, ஆழ்ந்து, அடங்கி, தொல் தமிழர்களுக்கு ஒவ்வாத ஆன்மீக அளப்பரைகளில் ஈடுபட்டவர்.

அயோத்திதாசருடைய பவுத்த ஆற்றல், முருகேசம் அவர்களின் மானிட வாய்ப்பிற்கு வலுவூட்டுவதாக அமைந்தது. தனக்குள் ஒரு பூரணத்துவம் பூரித்ததை அவரால் உள்வாங்க முடிந்தது. வாழ்விலே ஒரு வெளிச்சம்; மூச்சுக் காற்றிலே ஓர் உத்வேகம் வந்து சேர்ந்தது. இந்து மதக் குப்பைகளில் மேடான அத்வைதத்தில் வீணான முருகேசம், தனிமனித, சமூக



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வின் மீதான் தீராத வேட்கைக்கு - பவுத்தத்தினுள் அர்த்தம் கண்டு, அயோத்திதாசரால் பவுத்தத்தை நோக்கி வளர்ப்பவர் ஆனார். இதன் மூலம், பார்ப்பனியத்தால் அழிபட்ட ஓர் உயரிய சமூகத்தின் எழுச்சிக்கான உந்துவிசையைப் பெற்று, தன்னை நவீனத்துவத்தோடு பொருத்திக் கொள்ளும் பாங்கில் - மானுட அழகியலை அடைந்தார். பண்டைய பவுத்த வளத்துடன் தொல் தமிழர்களை தலை நிமிரச் செய்த அயோத்திதாசர் என்ற அறிவு இமயத்திற்கு உச்சத் தோழமையாக வாய்த்தார்.

எம்.ஒய். முருகேசம் அவர்கள், எல்லோரும் நோயற்றிருக்கவே இவ்வுலகு எனும் முறைமைகளில் ஊறித் திளைத்த சிறந்த சித்த மருத்துவக் குடும்பத்தில், 1869 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றவர். முருகேசம் அவர்கள் தந்தையார் பண்டிதர் எம். ஏகாம்பரனார், மனித இனத்தை நோயிலிருந்து விடுபடச் செய்து, உயிர் வாழ்வதற்கான நம்பிக்கைகளைத் தம் மருத்துவ ஞானத்தால் கட்டியெழுப்பி வந்தவர். மனித உடல்களின் சீரான அசைவியக்கத்திற்கு சுபீட்சத்தைத் தந்து வந்தவர். முருகேசம் அவர்களுக்கு நோயிலிருந்து மீளும் புத்துயிர்ப்புக்கும், ஆரோக்கிய இளைப்பாறலுக்குமான தளமான குடும்பப் பட்டறையிலிருந்து வந்ததால், புகழ் என்பது குடும்ப வழியோடு பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

மானுடத்தில் தன் சித்த மருத்துவப் படைப்பாற்றலை நிறுவுதல், மானுடப் பெருக்கினை நோய் குறையவிடாது காத்தல் எனும் வடிவமைப்பில் பொருந்திப்போன முருகேசத்தின் தந்தையார் பண்டிதர் எம். ஏகாம்பரனார், காசுக்கு ஒரு போதும் தன்னை விற்றுக் கொண்டவர் அல்ல. மனித நேயமும், தொன்ம மருத்துவ ஆற்றலும் அவரை மருத்துவராக்கிய ஊடேதான் அவர் செல்வந்தராக உயர்ந்து நின்றார். நோயைக் கட்டிப் போடும் கலையில் தம் தந்தையார் தேர்ந்து விளங்கியதில், முருகேசத்தின் இருப்பையும் உறவையும் - செல்வமும் புகழுமே பகிர்ந்து கொண்டது.

உலகிலேயே அதிக அளவு தங்கமுள்ள, மேலும் பல படிவங்கள் தொடர்ந்து கண்டறியப்பட்டுப் பெரிய அளவினதான 'கராக்கர்ஸ்', 'ப்ளம்மர்ஸ்', 'ரிபிள்ஸ் டேல்ஸ்' போன்ற பெரிய கெணிகள் அமைக்கப்பட்டுத் தங்கச் சுரங்கத் தொழில் விரிவடைந்தது. இந்நிலையில், சுரங்கத் தொழிலுக்கான தொழிற்சாலைக் கட்டடங்கள், காரியாலயங்கள், பங்களாக்கள் முதலியனவற்றைக் கட்டும் ஒப்பந்தத் தொழில் நடத்திய எம்.ஒய். முருகேசம், பெரும் செல்வத்தைத் திரட்டினார். பெரும் செல்வந்தராக உயிர்த்து உந்தும் மேல்நிலையாக்கத்தினூடே முருகேசம் அவர்கள், தன் சொந்தச் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு விடாமல், தாழ்த்தப்பட்ட தலைமுறைகளின் கூட்டு மனங்களையே பிரதிபலித்தார். பொருளாதாரப் பகட்டுகளை அண்டவிடாமல், தன் லட்சிய மனிதர்களாய் தாழ்த்தப்பட்டோரையே கொண்டார். முருகேசம் தன் மனத்தையும் பணத்தையும் சமூகத்திற்கே செலவிட்டார். மக்களுடன் என்றுமே இணைந்து நின்ற இணை கோடாகவே ஆகிப் போனார்.

உலகம் தழுவிய தமிழ்ச் சமூகத்தில் மானுட மேன்மையை பவுத்தத்தின் மூலம் உறுதிசெய்த அயோத்திதாசர், பி. கிருஷ்ண சாமியார் அவர்களை பர்மாவுக்கும், தனது ஒரு மகனான அ. ராசாராம் அவர்களை தென் ஆப்பிரிக்காவுக்கும் அனுப்பி வைத்தார். மேலும் அவர், தங்கவயலின் அதிகூடிய மக்கள் திரள் கொண்ட தொல் தமிழர்மயமான தங்கநிலம் - உயர் பண்புக் கூறுகளால், சிறந்த விழுமியங்களால் உள்வாங்கப்பட எம். ராகவரை தேர்ந்தெடுத்தார். இவர்களில் பவுத்தத்தை நிலை நாட்டும் பணியில் ராகவர்தான் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தார்.

கோலார் தங்கவயலில் இந்து மதமும் கிறித்துவ மதமும் தொடர்ந்து நீடிப்பதற்கு, ராகவரின் சகவாசம் தீங்கு உண்டாக்கும் எனக் குலைநடுங்கிய மதவெறியர்கள், தொடர்ச்சியாக ராகவர் மேல் மூர்க்கத்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்தனர். அவர் வீட்டைத் தீயிற்கு தின்னக் கொடுத்தனர். இருந்தாலும் ராகவரின் உயிரோட்டமான பவுத்த ஈடுபாடும், விடாப்பிடியும் விரைவிலேயே பவுத்தம் படரும் முயற்சிக்கு உரிய பலன்கள் கிடைத்தது. இப்பலன்களுக்கு மூலாம்பரமாக அமைந்தவர் எம்.ஒய். முருகேசம். ராகவரின் (1903 - 1907) மொழிக்குள் இயங்கிய மானுட வழி பவுத்தம் அலாதியானது. அது, முருகேசம் அவர்களின் உணர்வாங்கியில் குவிமய்யமாகி, அவரின் மனிதத் தருணங்களை நிகழ்த்த அறைகூவல் விடுத்தது. முருகேசத்தின் திசைமுகம் பவுத்தம் ஆனதில் - அயோத்திதாசர் ஆதாரமானவர் என்றால், ராகவர் கிரியா ஊக்கியாவார்.

தங்கவயலில், மனிதகுலம் தம் சுயத்தைக் கண்டடையவும், மனிதரைச் சகமனிதரோடு இசைவிக்கவும், சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் எனும் ஆற்றல் மிகு சக்திகளைக் கொண்டு வாழ்வைக் கடக்கவும் பவுத்தம் தொழிற்படுகிறது என்பதை நிலைநாட்ட, எம்.ஒய். முருகேசம் அவர்கள், சி. குருசாமி, ஏ.பி. பெரியசாமிப் புலவர் ஆகியோருடன் சென்னை ராயப்பேட்டை தென்னிந்திய சாக்கிய பவுத்த சங்கத்திற்குச் சென்றார். சங்கத்தின் தலைவர் அயோத்திதாசரின் நல்வரவேற்புடன், 1907 அக்டோபர் 20 அன்று, பர்மாவைச் சேர்ந்த பிக்கு வி. விலாசரின் உபதேசத்துடன் பஞ்ச சீல உறுதி மொழியினை எடுத்துக் கொண்டார். முருகேசத்தைத் தொடர்ந்து சி. குருசாமியும், ஏ.பி. பெரியசாமிப் புலவரும் முறைப்படி பவுத்தரானார்கள்.

அத்வைத ஆன்மீகராய் வாழ்ந்த முருகேசத்தின் அச்சாணியை அயோத்திதாசரும், ராகவரும் மாற்றிப் போட்டதில், வாழ்தலின் வெளியை பவுத்த உன்னதங்களால் நிரப்பிய முருகேசம் அவர்கள், தன் தலைமையில் இயங்கி வந்த மாரிக்குப்பம் ஹரன் காக்ஸ் பிளாக் அருகிலிருந்த சிவ கேசவ அத்வைத சபையைத் தன் பொருளுதவியுடன் - சாக்கிய பவுத்த சங்கமாக மாற்றியமைத்தார். அத்வைதத்தை வழித்துப் போட்ட இடத்தில் புத்தரின்



ஜி. அப்பாதுரையார்



இ.நா. அய்யக்கண்ணு புலவர்

**❝ பண்டைய பவுத்த வளத்துடன் தொல் தமிழர்களை தலை நிமிரச் செய்த அயோத்திதாசர் என்ற அறிவு இமயத்திற்கு உச்சத் தோழமையாக எம்.ஒய். முருகேசம் வாய்த்தார். ❞**



படிப்பகம்

www.padippakam.com

ஞானங்களை வைத்தார். இதுவரை புழுங்கிய அத்வைதம் என்பது, மானுடத்தாகம் தீர்க்காத கானல் நீரென்று தங்கவயல் முழுவதும் பறை சாற்றப்பட்டது.

பவுத்தத்தின் முதல் நிபந்தனை 'ஞானதான'மானதால், முருகேசம் அவர்களின் பொருளாதார பலத்துடன் 18.11.1907 அன்று, தென்னிந்திய கவுதம பவுத்த தொடக்கப் பள்ளி நிறுவப்பட்டது. இந்த தமிழ்ப் பள்ளியோடு, 'வித்யாபிவர்த்தினி' என்ற பெயரில் பொதுப் படிப்பகமும் திறக்கப்பட்டது. 1908 இல் இ.நா. அய்யாக்கண்ணு புலவர் ஓர் ஆசிரியராக அமர்த்தப்பட்டதும், பள்ளியானது பவுத்த மார்க்க கல்வி நடவடிக்கைகளின் செயலூக்கமான மய்யமாக ஆயிற்று. இங்கு பள்ளிநேரம் முடிந்த பிறகும் சரியாகப் படிப்பு வராத மற்றும் ஏழைக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து கல்வி கற்பிக்கப்பட்டது. இ.நா. அய்யாக்கண்ணு புலவரின் கல்விசார் முயற்சிகளின் ஒரு கிளையாக, முருகேசம் அவர்களின் உதவியுடன் பவுத்த இசை சபாவும் நிறுவப்பட்டது.

கோலார் தங்கவயலில் நடந்த இந்தப் பண்பு மாற்றமும், இன்னும் குறிப்பாக முருகேசம் பவுத்தம் தழுவியதும், பொதுவாக இயக்கம் வளர - உறுதிப்படி பரவ மிகுந்த உதவியாயிற்று. சாக்கிய பவுத்த சங்கத்தின் மாரிக்குப்பம் கோலார் கிளையானது, மிகுந்த ஈடுபாடும் அதே அளவுக்கு கொடைவள்ளலாகவும் இருந்த எம்.ஒய். முருகேசம் மற்றும் சி.குருசாமி, ஏ.பி. பெரியசாமிப் புலவர், எம். ராகவர் ஆகியோரை மய்யக் குழுவாகப் பெற்றிருந்தது - உண்மையாகவே அதன் நற்பேறு ஆனது.

பவுத்தத்திற்கு வேரும் வேரடி மண்ணுமாய் பொறுப்பேற்க வேண்டியவர்கள், தாழ்த்தப்பட்ட முதற்குடிகள் என்பதால் முருகேசம் அவர்கள், 1908 ஆம் ஆண்டு பிக்கு யு. விசுத்தா அவர்களைத் தங்கவயலுக்கு வரவழைத்து, ஏறத்தாழ ஆயிரம் பேர்களுக்குப் பஞ்சசீல உபதேசம் செய்வித்து - தங்கவயலில் பவுத்தம் தழைத்தோங்க வழியமைத்தார். பிக்குகள் யு. விசுத்தா, யு. தேஜோ வன்சா ஆகியோரைக் கொண்டு முறையான வகை

## சாசன தாயகா

❝ தங்கச் சுரங்கத்தில் ஒப்பந்ததாரர் ஆக இருந்த எம்.ஒய். முருகேசம் மிகுந்த செல்வம் ஈட்டி இருந்தார். அதை விவரமாக வணிக முதலீடுகளில் ஈடுபடுத்தி மேலும் பெருக்கியிருந்தார். பவுத்தத்தில் தனக்கு புதிதாக ஏற்பட்ட நம்பிக்கையுடன், விளிம்பு நிலை மக்களின் சமுதாய விடுதலை என்னும் தீவிர உணர்வும் இணைய, கோலார் தங்கவயலிலிருந்த இயக்கத்துக்காக மட்டுமல்ல, மற்ற கிளைகளுக்காகவும் – தன் வருவாய் அனைத்தையும் அவர் ஒப்புக் கொடுத்து விட்டதாகவே தோன்றுகிறது.

தமிழ்ப் பவுத்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு எம்.ஒய். முருகேசத்தின் பங்களிப்பை, அயோத்திதாசப் பண்டிதரின் பங்களிப்புக்கு ஈடாகவே சொல்ல முடியும். வெகு மக்களின் நன்மைக்காக அவர் வெளிப்படுத்திய அளவற்ற பெருந்தன்மையும் - அனைத்தளாவிய அக்கறையும், அவருக்கு மிகத் தகுதியான பட்டமாகிய 'சாசன தாயகா' பட்டத்தை அவருக்குப் பெற்றுத் தந்தன. ❞

– ஞான. அலாய்சியஸ், தொகுப்பாசிரியர், 'அயோத்திதாசர் சிந்தனைகள்'



புத்தர்



பண்டிதர்

யில் போதனைகளை ஏற்படுத்தினார். அயோத்திதாசப் பண்டிதர் அவர்களையும், இலங்கை, பர்மா பவுத்த சங்கங்களின் பிக்குகளையும், மார்க்க அறிஞர்களையும் அழைப்பித்து - பவுத்த சங்கக் கூட்டங்கள், பவுத்த கருத்துப் பொழிவுகளை நடத்தித் தொண்டாற்றினார்.

மாரிக்குப்பம் ஹான்காக்ஸ் பவுத்த சங்கத்தில் 1907 ஆம் ஆண்டு முதல் 1917 ஆம் ஆண்டு வரையில் பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து முருகேசம் அவர்களின் ஏற்பாட்டால் தங்கவயலுக்கு வந்து பவுத்த தொண்டாற்றிய 'குருமார்கள்' என்றழைக்கப்பட்ட பிக்குகளில் - யு. விசுத்தா (அயரீஷ்குரு), யு. விலாசா (பர்மா), தேஜோவன்சா, ஜெயந்தா, இந்திரவன்சா, பிங்கா, வன்னா, டீஜி, சில்வன்சா, மாலா, சூளசுமணா(சிங்களம்) மற்றும் அரியா, ஜன்னா, சுந்திரா, அபிவன்சா ஆகியவர்களை முக்கிய மானவர்களாகக் குறிப்பிடலாம். தமிழ்நாட்டிலிருந்து தங்கவயலுக்கு அடிக்கடி வந்து புத்த தம்ம சேவையில் பங்கேற்றவர்களுள் - அயோத்திதாசப் பண்டிதர், தன்ம பிரவர்த்தனர் எம். ராகவர், பவுத்த அறிஞர் பி. லட்சுமிநரசு, வி. முத்துக்குமாரசாமி, டி. வகுளாபரணம் பந்தலு ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

1911 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு முன்பு 'தாய் சங்கத்' துடையவும் குறிப்பாக அயோத்திதாசருடையவும் முதன்மையான முழுக் கவனம் - பவுத்தர்களுக்கு ஒரு தனி அடையாளத்தை நிறுவுவது மற்றும் அது அதிகாரப் பூர்வமாக ஏற்கப்படும்படிச் செய்வது என்பதாகத் தோன்றியது. இந்த நோக்கத்துக்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையரிடம் பேசுவதற்காக, சங்கத்தின் வெவ்வேறு கிளைகளின் பிரதிநிதிகளை அழைத்தார். இக்கூட்டத்தில் கோலார் தங்கவயல் சார்பாக முருகேசம் பங்கேற்றார். தம்மை இந்துக்களிடமிருந்து பிரித்து, இந்திய பவுத்தர்கள் எனக் காட்டுமாறு இக்கூட்டத்தின் தீர்மானம் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கோலார்தங்கவயல் கிளையில் அங்கம் வகித்த சி. லிங்கையா, முருகேசம் அவர்களின் உதவியால், மாலிக கண்ட வித்யோதயா கல்லூரியில் சேர்ந்து பாலிமொழி படிக்கவும், பிக்குஆகவும் சங்கத்தால் 1914 ஆம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டார். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு பிக்கு ஆவதற்காக, பவுத்தம் பிறந்த நாட்டிலிருந்து ஒருவர் இலங்கைக்குச் சென்றது இதுவே முதல் நிகழ்வாகும். மாரிக்குப்பம் பவுத்த சங்கத்தில் 1917 இல் எம்.ஒய். முருகேசம், சாசன தாயகர் சபாநாயகராகவும், சி. குருசாமி காரியதரிசியாகவும், ஜி. அப்பாதுரையார் உதவி சபாநாயகராகவும், ஆர்.எல். உமாபதியார் உதவிக் காரியதரிசியாகவும் தொண்டாற்றிய காலத்தில் பவுத்தம் உன்னத நிலையிலிருந்தது.

1918 இல் தங்கவயலில் கொடிய நோயான பிளேக் பரவியது. இந்நோயைத் தடுக்க எம்.ஒய். முருகேசம் அவர்களின் தந்தையார் பண்டிதர் எம். ஏகாம்பரனார் கடும் முயற்சி செய்து, நூற்றுக்கணக்கான



படிப்பகம்

www.padippakam.com



> **“ அயோத்திதாசரின் அனைத்து எழுத்தோவியங்களும் கவுதம சித்தார்த்தா அச்சகத்தில் பிரசுரித்து வெளிக்கொணரக் காரணமானவர் எம்.ஒய். முருகேசம் ஆவார். அவரது கருத்துப் பரவல் வேட்கையால்தான் ‘தமிழன்’ - தங்கவயலிலிருந்தும் தமிழ் நாடு, இலங்கை, பர்மா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. ”**

உயிர்களைக் காப்பாற்றினார். அவருக்கு மாரிக்குப்பம் பவுத்த சங்கத்தின் சார்பில் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. எம்.ஒய். முருகேசம் அவர்களை மூலவராகவும் புரவலராகவும் கொண்ட கோலார் தங்கவயல் கிளைத் தலைமை யானது, பிற கிளைகளுக்கும் உதவிக் கரம் நீட்ட மிக ஆவலாகவும் ஆயத்த மாகவும் இருந்தது. இதற்காக 1910 இல் ஒரு ‘தம்ம ஆதரவு நிதி’ அமைக்கப்பட் டது. இதற்கும் முன்பே அயோத்தி தாசரின் ‘தமிழனு’க்கு அச்சு எந்திரம் வாங்குவதற்காக சென்னைக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பி வைக்கப்பட்டது. சாக் கிய ப்வுத்தர்களின் வாழ்வில் முக்கிய மான நிகழ்வை 1912 ஆம் ஆண்டு கண் டது. அதுதான், கடந்த காலத்தைப் புதிய முறையில் கட்டமைப்பதன் பகுதியாக, புத்தரின் வாழ்வையும் பணியையும் செய்தியையும் பெயர்த்துரைத்த அயோத்தி தாசரின் ‘ஆதிவேதம்’ வெளியிடப்பட்ட தாகும். கோலார்தங்கவயலின்தம்ம ஆதரவு நிதியில் கிடைத்த தாராளமான பொருளு தவியால் இந்நூல் வெளிவந்தது.

அயோத்திதாசரின் அனைத்து எழுத் தோவியங்களும் கவுதம சித்தார்த்தா அச் சகத்தில் பிரசுரித்து வெளிக்கொணரக் காரணமானவர் எம்.ஒய். முருகேசம் ஆவார். அவரது கருத்துப் பரவல் வேட் கையால்தான் ‘தமிழன்’ தங்கவயலிலிருந் தும் தமிழ் நாடு, இலங்கை, பர்மா, மலே சியா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடு களுக்கு அனுப்பப்பட்டது. மற்றும் கோலார் தங்கவயல் பவுத்த சங்கத்தின் பெருமுயற்சியாலும், பண உதவி யாலும் 1909 இல் திருப்பத்தூரிலும், 1913 இல் ஜோலார்பேட்டையிலும், 1915 இல் சாம் பியன் ரீபிலிலும் - பெங்களூர், குடகு, கள்ளிக்கோட்டை, செகந்திராபாத், ஊப்ளி, புனா, வன்னிவேடு, அழிஞ்சிக்குப்பம், பள்ளிகொண்டா முதலிய இடங்களில் பவுத்த கிளைச்சங்கங்கள் நிறுவப்பட்டன.

அயோத்திதாசர் காலம் தொடங்கி, ‘தமிழன்’ ஏடு அயோத்திதாசரின் குமாரர் பட்டாபிராமன், ஜி. அப்பாதுரையார், இ.நா. அய்யாக்கண்ணு புலவர் ஆகி யோர் வெளிவந்ததற்கு, முருகேசம் அவர் களின் பொருளாதாரப் பின்புலமே முக் கியக் காரணம் ஆகும். அயோத்திதாசர் நூல்கள் மட்டுமின்றி, பவுத்த ஆளுமை களான ஜி. அப்பாதுரையார், இ.நா. அய் யாக்கண்ணு ஆகியோரின் நூல்கள் வெளி வருவதற்கும் முருகேசம் அவர்களே உதவி செய்தார். அயோத்திதாசருக்குப் பிறகு 1917இல் தென்னிந்திய சாக்கிய பவுத்த சங்கங்களின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட எம்.ஒய். முருகேசம், தன் பொருள் செல்வத்தைத் தேவைப்படு வோருடன் பகிர்ந்து கொள்வதே - பவுத் தத்தின் ஓர் அடிப்படையான நெறி என் பதை நிறைவேற்றுபவராகவே தன் பவுத்த வாழ்க்கையைத் தொடர்ந்தார். தன் சக மனிதர்கள் மீதான தீராத அவரின் பிடிப்பே அவரை பவுத்தராக உயிர்த் தெழச் செய்தது.

முருகேசம் தன் மன, மொழி, மெய் களால் பவுத்தத்திற்கு வலுவூட்ட தன் வாழ்க்கையை சுவாசப்படுத்தினார். பவுத்தத் தளத்திலேயே தன் இருப்பைத் தீவிரமாய் நிலைப்படுத்தியதோடு மட்டு மல்லாமல், உள் - வெளி சமூகத்திலும் பவுத்தப் போக்குகளை உருவாக்கி வெற்றி யடைந்தார். தன் உழைப்பை, அறிவை, ஆற்றலை, செல்வத்தைச் செலவிட்டு பவுத்தத்தை வளர்த்த முருகேசம், பவுத்தம் மூலம் தன் சொந்த சமூகத்தவருக்கு அறிவு, திறமை பற்றிய விழிப்புணர்வை ஊட்டி, அவர்கள் தாமும் வாழ்ந்து சமூகத்திற் காகவும் வாழ ஆயத்தப்படுத்தினார்.

தன்னை முதன்மைப்படுத்தாமல், பவுத்தத்தை முதன்மைப்படுத்தியவர் களை முதன்மைப்படுத்திய முருகேசம், தனது பிம்பத்தைக் கட்டமைக்கும் நோக் கமின்றி, பவுத்த வளர்ச்சியினுள் உட்கரு வாகவே சமைந்து நின்றார். பவுத்த செயல்பாடுகளில் சோர்ந்து போகாத ஆளுமைகளை உருவாக்குவதில் - எவ்வி தச் சோர்வையும் அவர் எப்பொழுதும் பெற்றதில்லை. அயோத்திதாசரைத் தொடர்ந்த பவுத்த மூல முகங்களில் முதன்மையானவர்களில் முழு முக்கிய மானவரான எம்.ஒய்.எம். தன் 52ஆவது வயதில், 1921இல் இயற்கை எய்தினார். பிரபஞ்ச ஞானத்தின் ஆகச் சிறந்த தளங் கள், பவுத்தத்தில்தான் உள்ளது என்ற முடிவுக்கு வந்த முருகேசத்தை, மரணம் முடித்து வைக்க முடியவில்லை. ஏனென் றால், அவர் அங்கத்தில்தான் நேற்றைய, இன்றைய, நாளைய பவுத்தமும் நடை போட்டுக் கொள்கிறது. ●




‘பவுத்தம் ஏற்போம்
இந்து மதம் மாய்ப்போம்’

தலித் முரசு - மாத இதழ்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100
வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000

பெயர் ..............................

முகவரி ..............................

..............................


..............................

பணவிடை, கேட்போலை அனுப்புவோர்
DR. AMBEDKAR CENTRE என்ற பெயருக்கு அனுப்பவும்



படிப்பகம்

www.padippakam.com



அந்தக் காலத்துப்
பார்ப்பன எதிர்ப்பு
இயக்கமாக
புத்தருடைய
இயக்கத்தையும்,
அந்த இயக்கத்தின்
தலைவராக புத்தரையும்
கூற முடியும்.

\- அம்பேத்கர்

"நான் ஓர் இந்துவாகப் பிறந்து விட்டேன். அது ஒரு விபத்து. அதைத் தடுப்பதற்கான வாய்ப்பு என் கையில் இல்லை. ஆனால், நான் ஓர் இந்துவாக இறக்க மாட்டேன். அதை நான் திட்டவட்டமாக அறிவிக்கிறேன். நீங்களும் இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்." - பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் இந்து மதத்தை விட்டொழித்து, 1956 அக்டோபர் 14 அன்று பவுத்தம் தழுவி, முழு விடுதலை பெற்ற மாமனிதரானார்.

அம்பேத்கர் வித்திட்ட உண்மையான பண்பாட்டுப் புரட்சிக்கு 2006 அக்டோபருடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது. இப்பொன் விழா கொண்டாட்டங்கள் நாடெங்கும் நடைபெற இருக்கின்றன. ஆனால் இக்கொண்டாட்டங்கள், தலித் மக்களின் பொருளாதாரத் தற்சார்புக்கும், அரசியல் அதிகாரத்திற்கும் அடிப்படையான சமூக விடுதலையை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் ஜாதியிலிருந்து பெறும் விடுதலையே - உண்மையான தலித் விடுதலை. சாதி ஒழிப்பு என்பதன் நடைமுறை வடிவம், இந்து அடையாளங்களிலிருந்து மீள்வதுதான். வேறு எந்த வழிமுறைகளும் பயனளிக்காது. புத்த தம்மம் என்பது, சாதி ஒழிப்புக்கானப் போராட்டமே என்பதை அம்பேதகர் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே, நாம் லட்சக்கணக்கில் இந்து மதத்தை விட்டொழிப்பதன் மூலம்தான் - அம்பேத்கர் பவுத்தம் தழுவிய பொன்விழா கொண்டாட்டங்கள் முழுமை பெறும். 2006 ஆம் ஆண்டிற்கான தலித் செயல் திட்டம் வேறென்னவாக இருக்க முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

# புத்த தம்மம் X வர்ண தர்மம்

■ டாக்டர் அம்பேத்கர்

இந்திய மக்கள் திருவிழாக்களை விரும்புகிறார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் தங்களின் பாதி நாட்களை திருவிழா கொண்டாட்டங்களுக்கும், மதச் சடங்குகளுக்குமே செலவிடுகின்றனர். மாமனிதர்களின் பிறந்த நாள் மற்றும் இறந்த நாள் நிகழ்வுகளுக்கும் - அவர்கள் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கிருஷ்ண ஜென்மாஷ்டமி, ராமநவமி மற்றும் அனுமான் ஜெயந்தி ஆகிய கொண்டாட்டங்கள், இந்துக்களின் மன நிலைக்குச் சான்றாக விளங்குகின்றன. இந்திய மக்கள் கொண்டாட்டங்களை அதிகம் விரும்பினாலும், புத்தர் பிறந்த நாளை அவர்கள் இதே உணர்வோடு ஏன் கொண்டாடுவதில்லை என்பது - வெளிநாட்டினருக்கு வியப்பளிக்கக் கூடும்! இந்தியாவில் பிறந்த மாமனிதர்களிலேயே புத்தர்தான் மிகவும் உயர்ந்தவராகத் திகழ்கிறார். புத்தரை இவ்வுலகின் ஒளிவிளக்காக அவருடைய வழித்தோன்றல்கள் போற்றுகின்றனர்.

கிறித்துவர்கள் புத்தரிடம் பகைமைப் பாராட்டினாலும், புத்தரை ஆசியாவின் ஒளி விளக்காகவே பார்க்கின்றனர். இந்துக்களும் புத்தரை விஷ்ணுவின் பத்தாவது அவதாரமாகக் கருதுகின்றனர். இத்தகைய புகழ்பெற்ற மனிதர், இந்திய மக்களின் நினைவலைகளிலேயே புதைக்கப்பட்டு விட்டார். இந்திய மக்கள் அவரை நினைவு கூர்வதே இல்லை. இத்தகைய புகழ் பெற்ற மனிதர் மறக்கடிக்கப்பட்டது, பெருத்த அவமானத்திற்கும், வியப்புக்கும் உரிய செய்தியாகும்! இச்சூழலில், பெங்கால் மற்றும் பிற மாநிலங்களில் புத்தர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடத் தொடங்கியிருப்பது, மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இது மிகுந்த பாராட்டுக்குரியது. ஆனால், இது மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட வேண்டும். எனவே, இந்த முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த - புத்தரின் வாழ்வையும் தொண்டையும் மக்களிடையே அறிமுகப்படுத்துவது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது...

புத்த தம்மத்தின் அடிப்படையான கொள்கைகள் என்ன? அவருடைய சிறப்பு என்ன? இந்தக் கேள்விகளைப் புரிந்து கொள்ளாமல், புத்தரின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இருப்பினும், இடப்பற்றாக்குறை காரணமாக, இதை விரிவாக விளக்க இயலவில்லை. புத்தருடைய காலத்தில், பார்ப்பனியம் மூன்று தூண்களைக் கொண்டிருந்தது : 1. வேதங்கள் புனிதத் தன்மையுடையதாகவும், என்றென்றும் மாறாததாகவும் கருதப்பட்டது 2. யாகம் 3. சதுர்வர்ண தர்மம் (நான்கு வர்ணங்களை அடிப்படையாகக் கொண்ட வர்ணாசிரம தர்மம்). வேதத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்தும் - அது அறிவுக்கு ஏற்புடையதா இல்லையா என்பதெல்லாம் பொருட்டல்ல - அது தவறே இல்லாதது. வேதங்கள் புனிதமானவை என்பதை புத்தர் ஏற்க மறுத்து, அதை முதல் விலங்காகக் கருதினார். வேதங்களை ஏற்பதற்குப் பதில், அதை மறுத்து, அறிவை அடிப்படையாகக் கொண்ட உண்மையை ஒப்புக் கொள்வதே புத்தரின் நிலைப்பாடாக இருந்தது.

பார்ப்பனியத்தைப் பொறுத்தவரை, கடவுளை அடைவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது; யாகங்களைச் செய்யாமல் கடவுளை அடைய முடியாது. எனவே, யாகங்கள் செய்வதே மதமாகக் கருதப்பட்டது. பார்ப்பனர்கள், மனிதர்களை யாகத்தில் எரிப்பதற்கு முன்பு, இந்த யாகத்தை ஏற்பாடு செய்பவர்கள் - மனிதனுடைய சதையை உண்ண வேண்டும். புத்தருடைய காலத்தில் இந்தச் சட்ட விதி இல்லை. புத்தர் காலத்தில் மிருகங்களை யாகத்தில் எரிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

**“ ஜனநாயகத்தை நிலை நாட்ட, சதுர்வர்ண தர்மத்தை அழித் தொழிக்க வேண்டிய தேவை இருக்கிறது. சதுர்வர்ண கிருமிகளை அழித்தொழிப்பதற்கு, புத்த தம்மத்தைவிட, ஆற்றல் வாய்ந்த மருந்து இல்லை. ”**



வழக்கம் இருந்தது. அந்தக் கால இலக்கியத் தைப் படிக்கின்ற எவரும், பார்ப்பனர்களின் மூதாதையர்கள் எண்ணற்ற பசுக்களை யாகங் களில் பலியிட்டதை அறிவர். பார்ப்பனர்கள் யாகங்களில் எண்ணற்ற பசுக்களைக் கொன் றது - முஸ்லிம்கள் பசுக்களைக் கொன்ற எண்ணிக்கையைவிட அதிகமானது என்ற உண்மையை, இத்தகைய இலக்கியங்களைப் படிக்கும் எவரும் புரிந்து கொள்வர்.

புத்தர் வேதங்களை எந்தளவுக்குத் தாக் கினாரோ, அதே அளவுக்கு அவர் யாகங்கள் செய்வதையும் கண்டித்தார். இதில் புத்தரின் நிலைப்பாடு புரட்சிகரமானது என்றே எவரும் சொல்ல முடியும். கடவுளை அடைவதற்கும் மதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று புத்தர் அறிவுறுத்தினார். மதத்தின் நோக்கம், ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதோடு தொடர்புடையது. இதுதான் புத்தரின் நிலைப் பாடு. கடவுளை அடைவது, ஒரு மதத்தின் நோக்கமாக இருக்க முடியாது என்று புத்தர் எண்ணினார்.

ஒருபுறம், கடவுளை அடைய முயல் வதும், மறுபுறம் தன்னுடைய சக மனிதனை இழிவாக நடத்துவதும் - மதத்திற்கு எதிரானது. பார்ப்பனியத்தின் மூன்றாவது தூணான சதுர் வர்ண தர்மத்தை, புத்தர் கடுமையாகத் தாக் கினார். பார்ப்பனியத்தின் சாரமே சதுர்வர்ண தர்மத்தில்தான் அடங்கி இருக்கிறது. ஒருவன் பிறக்கும்போதே, சாதி அடிப்படையில் உயர் வானவனாகவோ, தாழ்வானவனாகவோ பிறக்கிறான் என்று நினைப்பதற்கு, சதுர் வர்ணத்தில் உள்ள நம்பிக்கையே காரணம். பார்ப்பனியத்தில் தாழ்த்தப்பட்ட சாதிக்கும், பெண்களுக்கும் மரியாதைக்குரிய இடம் இல்லை. வாழ்வியல் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளன. அவர்களுக்கு எதையும் சொந்தம் கொண்டாடும் உரிமை இல்லாததால் - இவ்விரு வகுப்பினரும் சுதந் திரமாக இல்லை. அவர்கள் உயிரோடு வாழும் வரை இதுதான் நிலைமை. இதே நிலை அவர் கள் இறந்த பிறகும் தொடர்கிறது. பார்ப்பனி யத்தில் இவ்விரு வகுப்பினருக்கும் இறந்த பிறகும் சுதந்திரம் இல்லை.

பார்ப்பனியத்தின் கொள்கைகளைப் பொறுத்தவரை, துறவிகளுக்குதான் சுதந் திரம் உண்டு. ஆனால், தாழ்த்தப்பட்ட சாதி யினரும் பெண்களும் துறவிகளாக மாறு வதற்கு - அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப் பட்டுள்ளன. இத்தகையதொரு அநீதியான நிலையை புத்தர் ஏற்க மறுத்தார். புத்தர், சமூக சமத்துவத்தை வலியுறுத்திய மாபெரும் போராளி. அவரைப் போன்ற ஒருவரை வேறு எங்கும் காண முடியாது. பார்ப்பனியத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை. புத்தர் அவர்களுடைய சுதந்திரத்திற்கான வழி களைத் திறந்தார். தாழ்த்தப்பட்ட சாதி மக் களுக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. எனவே, புத்தர் அவர்களை சங்கத்தில் ஆசான் களாக சேர்த்துக் கொண்டார். புத்தர் சமூக சமத் துவத்தை வலியுறுத்தியதோடு, அதை நடை முறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். பெண்கள் மற்றும் தாழ்த்தப் பட்ட மக்களை மட்டும் புத்தர் தன்னுடைய அமைப்பில் சேர்த்துக் கொள்ளவில்லை; பிற தாழ்த்தப்பட்ட சாதியினரையும் தமது சங்கத் தின் உறுப்பினர்களாக்கினார்.

மேற்கூறிய விளக்கங்கள், போதுமானவை அல்ல. இருப்பினும், புத்தர் இந்த நாட்டுக்கு என்ன செய்தார் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள இது பயன்படும். புத்தரின் கொள்கை கள் மிகவும் பயனுள்ளவையாகவும், ஈர்ப்பு டையதாகவும் இருந்ததால் - புத்தரின் தம்மம் உலகெங்கும் பெருமளவுக்குப் பரவியது. தெற்கில், இலங்கை மற்றும் பசிபிக் பெருங் கடலில் உள்ள பல தீவுகளில் அது பரவியது. கிழக்கில் பர்மா, அசாம், தாய்லாந்து, சீனா மற்றும் ஜப்பானில் பரவியது. வடக்கில் திபெத், நேபாளம் மற்றும் டர்க்ஸ்டனுக்குப் பரவியது. புத்தரின் தம்மம், ஆப்கானிஸ் தானிலும் பரவியது. எந்த மதமும் இந்த அளவுக்குப் பரவியது இல்லை. மற்றொரு சிறப்புத் தன்மையும் புத்த தம்மத்திற்கு இருக் கிறது. எல்லா மதங்களும் தன்னுடைய மதிப்பு மற்றும் கொள்கைகளால் மட்டும் பரவிவிடு வதில்லை. போரின் மூலமே இஸ்லாம் வளர்ந் தது. சட்டத்தின் மூலம் கிறித்துவம் வளர்ந்தது. பவுத்தம் மட்டுமே அதன் மதிப்பு மற்றும் கொள்கைகளால் வளர்ந்தது. அதற்கு வாளின் ஆதரவோ, சட்டத்தின் ஆதரவோ தேவைப் படவில்லை.

புத்தர் தனது கருத்துகளை மக்களிடம் திணிக்கவில்லை. அவருடைய கருத்துகளை மக்கள் தங்கள் மீது திணித்துக் கொண்டனர். இவையெல்லாம் இருப்பினும், இந்திய மக் கள் ஏன் புத்த தம்மத்தை மறந்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. இந்தியாவுக்கு வெளியே பவுத்தம் இன்றளவும் வாழ்கிறது. உலகெங் கும் பவுத்தர்கள் பெருமளவில் உள்ளனர். இருப்பினும், இந்தியாவில் பவுத்தம் அழிக்கப் பட்டது. இடப்பற்றாக்குறை காரணமாக, இதற் கான விரிவான பதில்களை நான் இங்கு சொல்ல இயலாது. இருப்பினும், இதுகுறித்து சுருக்கமாக விவாதிப்பது அவசியம். புத்தரை காலத்தால் மறக்க முடியாது. புத்தர் அழிவற்ற வர்; எக்காலத்திற்கும் பொருந்தி வருபவர். இவ்வுலகில் இருந்து அவருடைய பெயர் எப் படி மறையும்? சீனா புத்தரை மறக்கவில்லை; ஜப்பான் மறக்கவில்லை; பர்மா மறக்க வில்லை; இந்தியாவில் மட்டும்தான் அவர் மறக்கடிக்கப்பட்டிருக்கிறார். இதற்கு காலம் காரணம் அல்ல என்பது தெளிவாகிறது.

இச்சூழலுக்கு புத்தரின் எதிரிகளே காரணம். பார்ப்பனர்களே புத்தரின் எதிரிகள். பார்ப்பனர்கள் புத்தருக்கு மட்டுமே எதிரிகள் என்பதும் உண்மை அல்ல. அவர்கள் ஜெயினி சத்தின் நிறுவனரான மகாவீரரையும் எதிர்த் தனர். ஆனால், புத்தர் பார்ப்பனியத்தைக் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கியது போல, மகாவீரர் செய்யவில்லை. இதற்குக் காரணம், புத்தர் தான் சதுர்வர்ண தர்மத்தின் மிகப்பெரிய எதிரியாக விளங்கினார்; மகாவீரர் அல்ல. புத்தர் வேதங்களையும், யாகங்களையும் தாக்குதலுக்கு ஆளாக்கியதைப் பற்றிக்கூட பார்ப்பனர்கள் பெரிதும் கவலைப்படவில்லை. ஆனால், சதுர்வர்ண தர்மத்தை புத்தர் தாக் கியதே - அவர்களைக் கடும் பாதிப்புக் குள்ளாக்கியது.

சதுர்வர்ணம் அழித்தொழிக்கப்பட்டால், பார்ப்பனியம் அடியோடு ஒழிந்துவிடும். இதைப் பார்ப்பனர்கள் நன்கு அறிந்திருந் தனர். உண்மையில், பார்ப்பனர்கள் சதுர் வர்ணத்தைத் தங்களுடைய உயிர் மூச்சாகக் கருதுகிறார்கள். எனவே, சதுர்வர்ண தர்மத் தின் மீதான தாக்குதல் என்பது, பார்ப்பனர்கள் மீதான தாக்குதல்தான். அந்தக் காலத்தில் இருந்த பார்ப்பன எதிர்ப்பு இயக்கமாக - புத்தரு டைய இயக்கத்தையும், அந்த இயக்கத்தின் தலைவராக புத்தரையும் ஒருவர் கூற முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

எனவேதான், பார்ப்பனர்கள் புத்தரையும் - அவரது தம்மத்தையும் அனைத்து வழிகளிலும் அழித்துவிட வேண்டும் என்று சதி செய்தனர்.

பார்ப்பனர்கள் தங்களுடைய வேதக் கடவுள்களைக் கைவிட்டு, போரிடும் கடவுளர்களை தங்களுடைய சொந்தக் கடவுளர்களாக உருவாக்கினர். பார்ப்பனர்கள் ராமனை வழிபடத் தொடங்கினர். அந்தக் காலத்தில் பார்ப்பனர் அல்லாத இயக்கத்தின் தலைவரான ஜெடாவை வணங்கத் தொடங்கினர். ஒரு கடவுளோடு அவர்கள் நிறைவடையவில்லை. இன்னொரு போரிடும் கடவுளான கிருஷ்ணனை அவர்கள் ஆதரிக்கத் தொடங்கினர். தற்பொழுது பார்ப்பனர்கள், நமது கடவுளர்களை வழிபடத் தொடங்கி விட்டனர்; இதனால், பார்ப்பனர் அல்லாதவர்கள் அவர்களை எதிர்த்துப் போரிடத் தேவையில்லை என நினைத்தனர். எனவே, பார்ப்பனர்களுக்கு எதிரான புத்தர் இயக்கம் நலிவடைந்தது.

புத்தர் உங்களுடையவராக இருந்தாலும், நாங்கள் அவரை விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக் கொள்கிறோம் என்று பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். புத்தரை விஷ்ணுவின் பத்தாவது அவதாரமாகப் பார்ப்பனர்கள் ஏற்றுக் கொண்டதும், பிரச்சினை முடிவுக்கு வந்தது. இனி, சண்டையிடுவதில் என்ன பொருள் இருக்க முடியும்? ஒருபுறம் பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாதவர்களை அமைதிப்படுத்திக் கொண்டு, மறுபுறம் புத்தருடைய தம்மத்தைப் போலவே எல்லாவற்றையும் செய்யத் தொடங்கினர். இதன் மூலம் பார்ப்பனியமும் பவுத்தமும் ஒன்றுதான் என்று மக்கள் நினைக்கும் அளவுக்கு - மக்களுக்குத் தவறான வழிகாட்டத் தொடங்கினர்.

பவுத்தர்கள் 'விகார்'களைக் கட்டினர். விகாரங்கள்தான் பவுத்தத்தின் ஒளியாகத் திகழ்ந்தன. பார்ப்பனர்கள், தங்களுடைய கோயில்களை பவுத்த விகாரங்களுக்குப் பக்கத்திலேயே கட்டத் தொடங்கினர். இத்தகைய வெளிப்படையான மாற்றத்தைக் கண்ட மக்கள், பவுத்தத்திற்கும் - பார்ப்பனியத்திற்கும் இடையில் வேறுபாடுகளைக் காண மறந்தனர். இறுதியில், முஸ்லிம்கள் இந்தியாவுக்குப் படையெடுத்தபோது, அவர்கள் விகாரங்களை அழித்தனர். பவுத்தத் துறவிகள் வேறு நாடுகளுக்குத் தப்பி ஓடினர். இவர்கள் இல்லாததால், பார்ப்பனர்கள் பவுத்தத்தை அழிக்கத் தொடங்கினர். அதற்குப் பிறகு, அவர்கள் பவுத்த குகைகளை 'பாண்டவ் லேனி' என்று பிரச்சாரம் செய்து, புத்தரின் உருவங்களை சிவனுடைய லிங்கமாக மாற்றினர். பார்ப்பனர்கள் பவுத்தத்தை எதிர்த்ததன் மூலம் - அவர்கள்தான் முக்கிய எதிரிகளாக விளங்கினர் என்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான். இந்நிலையில், புத்தரின் பிறந்தநாள் விழாவை அவர்கள் எப்படிக் கொண்டாடுவார்கள்?

ஆனால், பார்ப்பனர் அல்லாத மக்கள் இம்மாமனிதரை மறந்திருக்கக் கூடாது. ஏனெனில், மூட நம்பிக்கைகளிலும் மந்திரங்களின் பிடியிலும் கட்டுண்டு கிடந்த மக்களை புத்தர்தான் விடுதலை செய்து - அவர்களை மனிதநேயப் பாதைக்குக் கொண்டு வந்து, அவர்களை மனிதர்களாகவும் மாற்றினார். இவர்களுடைய நலன்களுக்காகத் தன்னுடைய சொகுசு வாழ்க்கையை விட்டொழித்து, இம்மக்களின் சுயமரியாதைக்காக, இந்த நாட்டைத் தன்னுடைய கொள்கைகளால் செழுமைப்படுத்திய புத்தரை - இவர்கள் மறந்திருக்கக் கூடாது. பார்ப்பனர் அல்லாத மக்கள் இத்தகையதொரு மாமனிதரை மறந்தது, மிகுந்த வருத்தத்திற்குரிய செய்தியாகும். அவர்கள் புத்தரை தங்களின் நினைவில் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும்.

> **“சதுர்வர்ணம் அழித்தொழிக்கப்பட்டால், பார்ப்பனியம் அடியோடு ஒழிந்துவிடும். உண்மையில், பார்ப்பனர்கள் சதுர்வர்ணத்தைத் தங்களுடைய உயிர் மூச்சாகக் கருதுகின்றனர். எனவே, சதுர்வர்ண தர்மத்தின் மீதான தாக்குதல் என்பது, பார்ப்பனர்கள் மீதான தாக்குதல்தான்.”**

இந்த ஒரு காரணத்திற்காகவே புத்தர் பிறந்த நாள் விழாவை, இந்திய மக்கள் கொண்டாட வேண்டும் என்று நாம் வலியுறுத்தவில்லை. மேற்கூறிய காரணங்களில் இருந்து நாம் சொல்லும் காரணம் வேறுபட்டது; மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்துக்களில் உள்ள படித்த வகுப்பினர், இந்துப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, இந்துக்களுக்காக அரசியல் ஜனநாயகத்தை நிறுவ விரும்புகின்றனர். இதற்காக அவர்கள் போராடி வருகிறார்கள். இத்தகைய அறிவு ஜீவிகளின் மீது நாம் இரக்கம் கொள்கிறோம்.

இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிறுவ நினைக்கும் மக்கள் - முட்டாள்களாகவோ, சூழ்ச்சி நிறைந்த மக்களாகவோதான் இருக்க முடியும். ஆனால், இத்தகைய பேதமையும் சூழ்ச்சியும் - நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்க முடியாது. அனுபவங்களின் அடிப்படையில், பார்ப்பனியமும் ஜனநாயகமும் எதிரெதிர் திசைகள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஜனநாயகத்தை நிலைநாட்ட, சதுர்வர்ண தர்மத்தை அழித்தொழிக்க வேண்டிய தேவை இருக்கிறது. சதுர்வர்ண கிருமிகளை அழித்தொழிப்பதற்கு, புத்த தம்மத்தைவிட ஆற்றல் வாய்ந்த மருந்து இல்லை. எனவே, அரசியலைத் தூய்மைப்படுத்த - அனைத்து இந்துக்களும் புத்தர் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும். அவர்களுக்கும் இது பயனளிக்கும் என்ற வகையில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

அரசியலில், இந்தியா ஒரு நோயாளி மனிதனைப் போல காட்சியளிக்கிறது. நாம் இந்தியாவை நினைக்கும்போது, வயிறு பெரிதாக உள்ள ஒரு மனிதனின் கை, கால்கள் எலும்புகளாக மட்டுமே சுருங்கி நிற்பதையும், ரத்தசோகையுடனும், ஓர் எலும்புக் கூடு போன்ற குழிவிழுந்த கண்களுமாக கற்பனை செய்து பார்க்கிறோம். ஜனநாயகத்தைச் செழித்தோங்கச் செய்யும் ஆற்றல் அவனிடம் இல்லை. ஆனால், அவனுள் தீராத வேட்கை இருக்கிறது. இந்த வேட்கையைத் தணிக்க அதிகாரம் மிகவும் முக்கியம். இந்த அதிகாரத்தை மருந்தின்றி கைப்பற்ற முடியாது. ஆனால், மருந்து மட்டும் பயனளித்துவிடுமா? மருந்தை உட்கொள்ள வேண்டும் எனில், வயிற்றைத் தூய்மையாக்க வேண்டும் என்பது, அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அனைத்துவகை மாசுபாடுகளும் அகற்றப்பட வேண்டும். இதைச் செய்யாத வரை, மருந்தை மட்டும் உட்கொள்வதால் எந்தப் பயனும் இருக்காது.

இந்துக்களின் வயிறு தூய்மையாக இல்லை. அவர்களுடைய வயிற்றில் நீண்ட நாட்களாக பார்ப்பனியக் கழிசடைகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இதைத் தூய்மைப்படுத்தும் மருத்துவரால்தான் - இந்தியாவில் ஜனநாயகத்தை நிறுவ உதவி புரிய முடியும். இந்த மருத்துவர் சந்தேகத்திற்கிடமின்றி, புத்தராகத்தான் இருக்க முடியும். இந்துக்களுடைய வாழ்வியலை - ராமன் பிறந்த நாள், கிருஷ்ணன் பிறந்த நாள் மற்றும் காந்தி பிறந்த நாளைக் கொண்டாடுவதன் மூலம் தூய்மைப்படுத்திவிட முடியாது. ராமன், கிருஷ்ணன், காந்தி ஆகிய மூவருமே பார்ப்பனியத்தை வழிபடுபவர்களே. ஜனநாயகத்தை நிலைநிறுத்த, அவர்கள் ஒரு போதும் பயன்பட மாட்டார்கள். ஜனநாயகத்தை நிர்மாணிக்க, புத்தர்தான் பயன்படுவார். எனவே, புத்தரை நினைவு கூர்வது மிகவும் முக்கியமானது. அவரது மாமருந்தே இந்துக்களின் அரசியல், சமூக நீரோட்டத்தில் கலந்துள்ள மாசுபாடுகளைத் தூய்மையாக்கும். எனவே, மக்கள் ஜனநாயகத்தை நிறுவ, புத்தம் சரணம் கச்சாமி! தம்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! என்ற மாபெரும் அறிவுரையை நாம் முழங்க வேண்டும். ●

---

*'ஜனதா' என்ற ஏட்டுக்கு (17.5.1941) அம்பேத்கர் அளித்த கட்டுரை. 'பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் மராட்டிய நூல் தொகுப்பு': 20 பக்: 327 - 335, ஆங்கிலத்திலிருந்து தமிழில்: அமிழ்தினி*



படிப்பகம்

www.padippakam.com



## வீரவணக்கம்

அண்ணல் அம்பேத்கர் வழியில் பவுத்த நெறி ஏற்று, வடதமிழகத்தில் இந்தியக் குடியரசுக் கட்சியை வளர்த்திட அரும்பாடுபட்ட திரு. பொன் ஆனந்தராஜ் அவர்கள் 18.12.2005 அன்று மறைந்தார். தமிழ் நாடு மின்வாரியத்துறையில் செயற் பொறியாளராக உயர் பதவி வகித்த காலத்தில், அதிகார மமதையின்றி தொழிலாளர்களின் துயர்துடைக்க அயராது உழைத்த பண்பாளர். வடாற்காடு மாவட்டத்தில் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் அம்பேத்கர் படத்தினை அமைத்த தமிழ் நாடு அரசு எஸ்.சி./எஸ்.டி. நலச் சங்க மாநிலத் தலைவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். 1.1.2006 அன்று ராணிப்பேட்டையில் அவருடைய உருவப் படத் திறப்பு நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று வீர வணக்கம் செலுத்தினர். ●


மாட்டுக் கொம்பாட்டப் பயிற்சிப் பட்டறை

பயிற்றுநர்கள் :
**வேலு, மகிழினி**

நாள் : பிப்ரவரி 2, 3, 4, 5
இடம் : 'அய்டியாஸ்' - மதுரை

தொடர்புக்கு : மணிமாறன்
98940 - 94351, 98427 - 75655

முனிராஜ் - 99943 - 68524

ஒருங்கிணைப்பு :
உழவு கலை இயக்கம்


# அம்பேத்கர் சிலைக்கு மாலையிடுவது குற்றமா?

கொலை செய்யப்படுவோம் என்று நன்கு தெரிந்தே புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவை ஒலிபெருக்கி கட்டி நடத்திக் காட்டிய உலகுப்பிச்சன் பட்டி சந்திரன், மறைந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. விடுதலையுணர்வு மிக்க அந்த இளைஞரை சாதி வெறியர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கிப் படுகொலை செய்தபோது, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் காவல் துறையினர். 1997இல் நடந்த தென்மாவட்ட சாதி ஆதிக்க எதிர்ப்புக் கலகங்களுக்குப் பிறகு, அம்பேத்கரின் சிலைகளுக்கு இரும்புக்கம்பி வேலியடைத்து சிறை வைத்தாற்போல், கூண்டுகளில் அடைத்து அவமானப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் காவல் துறை அதிகாரிகள்.



அவையெல்லாம் பழைய கதை! கடந்த டிசம்பர் 6, 2005 அன்று அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கச் சென்ற வேலூர் ஊரிசு கல்லூரி மாணவர்கள், சட்டம் ஒழுங்கை மீறிவிட்டதாகக் கொக்கரிக்கிறார் வேலூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர். அதை காவல் துறை அனுமதியின்றி நடத்தியதாக, ஊரிசுக் கல்லூரி பேரா. இளங்கோவன் மீது குற்றம் சுமத்தத் துடிக்கிறது அந்த 'காவல் சிங்கம்'. பேரா. இளங்கோவனுக்கு எழுதிய எச்சரிக்கைக் கடிதத்தில், அன்றைய தினம் பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமாக இருந்ததால் ஊர்வலங்கள் நடத்தத் தடை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர்களிடையே துளிர்க்கத் தொடங்கியிருக்கும் சமூக உணர்வை நசுக்குவதற்கு அவர் தயாராகி விட்டதை அவரது கடிதம் அழுத்தமாகத் தெரிவிக்கிறது. அவரைப் போல் எத்தனையோ 'மீசை முறுக்கி'களைப் பார்த்தவர்கள் வேலூர் மாவட்ட தலித் மக்கள். மாணவர்கள் நடத்திய நினைவஞ்சலி ஊர்வலம் தன்னெழுச்சியாக நிகழ்ந்தது. பேராசிரியர் இளங்கோவனுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றாலும்கூட, காவல் துணைக் கண்காணிப்பாளர், பேராசிரியரைக் குறிவைத்திருப்பதற்குப் பின்னால், வேலூர் மாவட்ட காவல் துறையின் சதித் திட்டம் மறைந்திருக்கிறது என்பதை வேலூர் மாவட்ட தலித் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்த புரட்சியாளர் அம்பேத்கருக்கு, அம்மக்கள் அஞ்சலி செலுத்துவதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடனேயே இத்தகைய முயற்சிகளை, காவல் துறையிலிருக்கும் சாதி வெறியர்கள் முயற்சிக்கிறார்கள். 'பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினம்' என்ற பிரச்சாரத்தால் அம்பேத்கரின் நினைவு நாளை மறைத்துவிடத் துடிக்கிறது காவல் துறை. அண்மைக் காலங்களில் காவல் துறையினரின் கெடுபிடிகளால், அம்பேத்கரின் நினைவு நாள் கூட்டங்கள், கருத்தரங்குகள், ஊர்வலங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை எழுச்சியை முறியடிக்க, ஆளும் வர்க்கங்களும் அதிகாரப்பீடங்களும் முன்னெடுத்திருக்கும் மிகப்பெரும் சதித் திட்டமிது. அதைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டியவர்களாய் தலித் மக்களிருக்கிறார்கள்.

பறிபோன உரிமைகளை மீட்டுக் கொடுத்து, மானமிக்க மக்களாகத் தங்களை வாழவைத்த மகத்தான தலைவரின் நினைவுகளை, வேறு எதற்காகவும் தலித் மக்கள் விட்டுக் கொடுத்து விட மாட்டார்கள் என்பதை வேலூர் மாவட்டக் காவல் துறை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல், 'புலி வாலைப் பிடித்த' கதை போல் முழிப்பதைத் தவிர - 'மீசை முறுக்கி' களுக்கு வேறு வழி இருக்கப் போவதில்லை.

**- அகன்**



மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளிச் சுமக்கும் கொடூரத்தை முற்றிலுமாகத் தடை செய்யக் கோரி 27.11.2005 அன்று மதுரை மேல மாசி - வடக்கு மாசி தெரு சந்திப்பில் அருந்ததியர் ஒருங்கிணைப்புக் குழு - தமிழ் நாடு சார்பில் தொடர் முழக்கப் போர் நடைபெற்றது. இப்போராட்டத்தில் கு. ஜக்கையன், அ. நாகராசன், மு. கவுதமன், ஆ. குருவிஜயன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சமி நில மீட்புப் போர்



பஞ்சமி நிலங்களை மீட்பது, பொதுச் சொத்தில் தலித் மக்களுக்கு சமபங்கீட்டைப் பெற்றுத் தருவது, எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்துவது என்கிற மூன்று அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு தொடங்கப்பட்டது தலித் மண்ணுரிமைக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பு விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் ஆகிய ஆறு மாவட்டங்களிலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் செயலாற்றி வருகிறது.

15 தலித் இயக்கங்களைக் கொண்டு இக்கூட்டமைப்பு தொடங்கப்பட்டது. தமிழ் நாடு மற்றும் புதுவை தலித் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில், அண்ணலின் நினைவு நாளான டிசம்பர் 6இல் பஞ்சமி நிலங்களை மீட்கும் விதமாக பஞ்சமி நில மீட்புப் போர் நடைபெற்றது.

தலித் மண்ணுரிமைக் கூட்டமைப்பு மற்றும் டாக்டர் அம்பேத்கர் பேரவையின் தலைவர் சி. நிக்கோலஸ் தலைமையில், திருக்கோவிலூருக்கு அருகிலுள்ள வடமலையனூருக்கு செல்லும் வழியில் காந்தி சிலை அருகே 5000 தலித்துகள் கைது செய்யப்பட்டனர்.

புரட்சி வேங்கைகள் இயக்கத்தின் அமைப்பாளர் குருவிஜயன், தமிழ் நாடு அருந்ததியர் சனநாயக முன்னணி பொதுச் செயலாளர் கவுதமன், பொருளாளர் மெல்கியூர் உட்பட பலர் கைதாகினர். புதுவை பூ. மூர்த்தி தலைமையில், தமிழக மனித உரிமைக் கழகத்தின் தலைவர் அரங்க குணசேகரன் உள்ளிட்ட 2800 தலித்துகள் வடலூரில் ஒன்றுகூடி, சிறுவளையம்மா தேவியிலிருக்கும் பஞ்சமி நிலத்தை மீட்கப் புறப்பட்டனர். இவர்கள் அனைவரும் வடலூர் பேருந்து நிலையம் முன்பாகவே கைது செய்யப்பட்டனர். ●

# புகழ்பெற்ற தலித் மக்களின் முகவரி



இந்த நாட்டின் தொல்குடியினரான தலித் மக்கள், நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறார்கள். ஆங்காங்கே ஒரு தலைமையில், சிறு சிறு குழுக்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதனால் இவர்கள் சமூக விடுதலையையும், அரசியல் விடுதலையையும் வென்றெடுக்க முடியாமல் போகிறது. இவர்கள் அனைவரையும் ஒரே நேர்க்கோட்டில் இணைத்து, தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து - சமூக விடுதலை, அரசியல் அதிகாரம் பெற பாலமாக ஒரு கருவி தேவைப்படுகிறது.

ஆகவே, தொலைநோக்குப் பார்வையோடு, 'தலித் பிரபலமானவர்களின் முகவரி' என்ற நூல் தொகுப்பை வெளியிட இருக்கிறோம். தலித் அமைப்புகள், தலித் அரசியல் கட்சிகள், தன்னார்வக் குழுக்கள், மனித உரிமை இயக்கங்கள், எஸ்.சி./எஸ்.டி. தொழிற்சங்கம் போன்றவற்றின் நிர்வாகிகள், சட்டம், மருத்துவம், பொறியியல், கலை, இலக்கியம், பத்திரிகை, வர்த்தகம், விளையாட்டு போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும் தலித் பிரமுகர்கள் தங்களின் பெயர், படிப்பு, பணி, பொறுப்பு, முகவரி, தொலைபேசி எண் போன்றவற்றைத் தெளிவாக எழுதி எங்கள் முகவரிக்கு 28.2.2006-க்குள் அனுப்பி, எங்கள் முயற்சிக்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி : ஆணழகன் து. சீனிவாசன்
6, 3ஆவது தெரு, கே.கே. நகர், மணவாள நகர், திருவள்ளூர் - 602 002
பேசி : 2764 0423

# 'தலித் முரசு'க்கு விருது



'டாக்டர் அம்பேத்கர் இன்டர்நேஷனல் மிஷன்' என்ற அமைப்பின் சார்பில், 2004 ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் இலக்கிய விருது 'தலித் முரசு'க்கு வழங்கப்பட்டது. கலிபோர்னியாவை தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் இவ்வமைப்பின் விருது வழங்கும் விழா, பெங்களூரில் 24.12.2005 அன்று நடைபெற்றது. 'தலித் முரசு' ஆசிரியர் இவ்விருதைப் பெற்றுக் கொண்டார். இவ்விருதுடன் அய்ந்தாயிரம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது. ●



படிப்பகம்

www.padippakam.com

# இனவெறியை அறுவடை செய்யும் கிறித்துவத் திருச்சபை

"உண்மையில் இன்றும்கூட, இந்த அவமானகரமான அத்தியாயத்தைப் புறக்கணிக்கவோ, இதற்காக வருத்தப்படவோ நாம் தயாராக இல்லை. நமது இலக்கியம், நமது திரைப்படங்கள், நமது நாடகங்கள், நமது நாட்டார் இலக்கியங்கள் அனைத்தும் இதனை மேன்மைப் படுத்தி வருகின்றன. பண்டையக் கலாச்சாரம் கொண்ட செவ்விந்திய மக்களின் எண்ணிக்கை - வெகுவாகக் குறைக்கப்பட்டு, வறுமை நிறைந்த ரிசர்வேசன் பகுதிகளில் மந்தைகள் போல அவர்கள் அடைத்து வைக்கப்பட்டதற்குக் காரணமாயிருந்த வன்முறைக்கு மரியாதை தரும்படி, இன்றும்கூட நமது குழந்தைகளுக்குக் கற்றுத் தந்து வருகிறோம்."



அமெரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடி வீழ்ந்த மாபெரும் தலைவர் மால்கம் எக்ஸ். புகழ் பெற்ற பத்திரிகையாளரும் Roots என்ற நூலின் ஆசிரியருமான அலெக்ஸ் ஹேலியின் உதவியுடன் எழுதிய The Autobiography of Molcolm X என்னும் அவருடைய சுயசரிதையை, தற்பொழுது விடியல் பதிப்பகம் – 'மால்கம் எக்ஸ் : என் வாழ்க்கை' என்ற தலைப்பில் தமிழில் வெளியிடுகிறது. தமிழில் மொழி பெயர்த்திருப்பவர் வெ. கோவிந்தசாமி. இந்நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிட்டுள்ளோம்.

அமெரிக்காவில் தங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்று கோரி அய்.நா. சபையை அவசரமாக அணுகும் எண்ணம் தங்களுக்கில்லை என்பதை ஆப்பிரிக்க - அமெரிக்கர்கள் காட்டி விட்டார்கள். இதை நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்களிடம் அப்படிப்பட்ட ஓர் எண்ணம் இல்லையென்ற செய்தி எனக்கு முன்பே தெரியும். அமெரிக்கக் கறுப்பனின் போராட்டம், ஒரு சர்வதேசப் போராட்டம் என்று கறுப்பன் உணர்வதற்கு முன்பே என் ஆயுள் முடிந்துவிடுமென்று தோன்றுகிறது. ஏனெனில், 'குடியுரிமைகள்' குறித்த தன்னுடைய பிரச்சினை வெறும் உள்நாட்டுப் பிரச்சினைதான் என்று கறுப்பனே கருதுமளவிற்கு, அமெரிக்க வெள்ளையன் அவனை மூளைச்சலவை செய்து வைத்திருக்கிறான்.

உண்மையில் கறுப்பர்களும், வெள்ளையர்களும் சகோதரர்களாக இருக்க முடியும் என்ற நுண்ணறிவையும், பரந்துபட்டப் பார்வையையும் எனக்குத் தந்த பழமைவாத இஸ்லாமில் சேர கறுப்பர்கள் அவசரம் காட்டவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஒடுக்குமுறை விசயத்தில் கிறித்துவம் கடைப்பிடிக்கும் இரட்டை அளவு கோலால் மீளமுடியாத அளவிற்கு அமெரிக்கக் கறுப்பர்கள் - குறிப்பாக வயதானவர்கள் - மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்...

''முஸ்லிம்கள் என்பதாலோ, கிறித்துவர்கள் என்பதாலோ, புரொட்டஸ்டன்ட் என்பதாலோ பேப்டிஸ்ட் அல்லது மெத்தேடிஸ்ட் என்பதாலோ, ஜனநாயகக் கட்சிக்காரர்கள் அல்லது குடியரசுக் கட்சிக்காரர்கள் என்பதாலோ, மேசன்கள் அல்லது 'எல்க்குகள்' என்பதாலோ - நாம் கொடுமைகளை அனுபவிக்கவில்லை. 'நாம்' என்று இங்கு நான் குறிப்பிடுவது அமெரிக்கக் கறுப்பின மக்களை மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமுள்ள கறுப்பின மக்களையும்தான். நம் அனைவருக்குமே குடியுரிமைகள் மட்டுமின்றி, மனித உரிமைகளும், சுயமரியாதையுடன் வாழ்வதற்கான உரிமைகளும்கூட மறுக்கப்படுகின்றன.....''

''யார் யாரோ என்னைப் பற்றிக் கூறிய அவதூறுகளைக் கேட்டு எனக்குச் சலித்துவிட்டது. யார் சொன்னார்கள் என்பது பற்றி எனக்குக் கவலையில்லை; நான் உண்மைக்காக நிற்கிறேன். யார் ஆதரிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை; நான் நீதிக்காக நிற்கிறேன். முதலாவதும், முக்கியமானதுமான விசயம் நான் ஒரு மனித உயிர். அந்த வகையில், மொத்த மனிதச் சமூகத்திற்கு யாரெல்லாம், எப்படியெல்லாம் நன்மைகள் செய்தாலும் - அதற்கு ஆதரவாக நான் நிற்பேன்'' என்று நண்பர்களுக்குக் கடிதம் எழுதினேன்.

நீக்ரோக்களுக்கு ஒரு புதிய திசைவழியைக் கற்றுத்தர நான் இப்பொழுது முயற்சிக்கிறேன் என்ற தகவலை, அமெரிக்க வெள்ளையினப் பத்திரிகைகள் வெளியிட மறுத்தன. 1964 ஆம் ஆண்டில் வெடித்த கலகத்தைத் தொடர்ந்து, புதிய சம்பவங்கள் உருவாகி வந்ததால், 'நீக்ரோக்களைத் தூண்டி வந்ததாக' என் மீது தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டது. வானொலி அல்லது தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்ட நேரங்களில் - 'நீக்ரோக்களைத் தூண்டிவிட்டதாக' அல்லது 'வன்முறையைத் தூண்டியதாக' குற்றம் சாட்டப்பட்டபோது நான் கொதித்துப் போனேன்.

''சேரிகளில் காலம் காலமாக இருந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம், மோசமான வீடுகள், குறைவான கல்வி போன்ற பிரச்சினைகளிலிருந்து உருவான சமூகவியல் ரீதியான வெடிகுண்டை வெடிக்கச் செய்ய - யாருடைய தூண்டுதலும் தேவை இல்லை. அபாயகரமான இந்தக் கிரிமினல் சூழ்நிலை, நீண்ட காலமாக நிலவி வருகிறது. யாரும் இதற்கு நெருப்பு வைக்க வேண்டிய அவசியமில்லை; தானே



படிப்பகம்

www.padippakam.com



நெருப்புப் பற்றிக்கொள்ளும், தன்னுள்ளிருந்து தானே தன்னியல்பாக எரியும்.

''அமெரிக்காவிலேயே மிகக் கோபக்கார நீக்ரோ' என்று என்னை அழைத்தார்கள். அந்தக் குற்றச் சாட்டை நான் மறுக்கவில்லை. எனக்கு என்ன தோன் றியதோ அதைத்தான் நான் பேசினேன். கோபத்தின் மீது எனக்கு நம்பிக்கையுண்டு. கோபப்படுவதற்கு ஒரு காலம் இருக்கிறதென்று பைபிள் சொல்கிறது. 'வன்முறையின் ஆசிரியன், வன்முறையைத் தூண்டு பவன்' என்றெல்லாம் அவர்கள் என்னை அழைத்தார் கள். அவர்களை நேருக்கு நேராகப் பார்த்துச் சொன் னேன் : இது பொய், நான் வன்முறை மீது வெறி கொண்டு அலைபவனல்லன்; நீதிக்காக நிற்பவன். நீக்ரோக்களால் வெள்ளையர்கள் தாக்கப்படும் போது - அதைத் தடுத்து நிறுத்தக் காவல் துறையால் இயலவில்லை அல்லது அது தயங்குகிறது என்ற ஒரு நிலையில், தேவைப்பட்டால் வெள்ளையர்கள் ஆயு தங்களைப் பயன்படுத்தியாவது, நீக்ரோக்களிட மிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக் கொண்டவன் நான். வெள்ளையர் களின் தாக்குதல்களிலிருந்து நீக்ரோக்களைக் காப்பாற்றச் சட்டம் தவறும் பட்சத்தில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள - தேவைப்பட்டால் - நீக்ரோக் கள் ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துக் கொண்டவன் நான்.''

> தீர்வைத் தள்ளிப் போடுவதுதான் அகிம்சையின் பொருளென்றால், அகிம்சை எனக்கு எதற்கு? என்னைப் பொறுத்தவரை, தீர்வைத் தள்ளிப் போடுவது என்பது தீர்வே காணாமல் இருப்பதாகும்.

''நீக்ரோக்கள் ஆயுதமேந்த வேண்டுமென்று மால்கம் எக்ஸ் பிரச்சாரம் செய்கிறார்.''

அதில் என்ன தவறு இருக்கிறது? எது தவறு என் பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். வெள்ளை யனுக்கு எதிராக உடல் ரீதியான தற்காப்பைப் பற்றிப் பேசிவரும் கறுப்பன் நான். நீக்ரோக்களை வெள்ளை யன் கொடுமைப்படுத்தலாம், எரிக்கலாம், குண்டு வீசலாம், உதைக்கலாம்; இவையெல்லாம் நியாய மானவை. ''பொறுமையோடு இருங்கள்''..... ''பழக் கத்தை விட முடியாதல்லவா''..... ''நிலைமை சீராகி விடும்''..... - போதும் நிறுத்துங்கள்.

கொடுமைக்குள்ளாகிவரும் ஒருவர், தன்னைத் தற்காத்துக் கொள்ள எந்தவொரு முயற்சியும் எடுக் காமல், தொடர்ந்து அந்தக் கொடுமையை ஏற்றுக் கொண்டு வந்தால் - அது குற்றம் என்ற கருத்துக் கொண்டவன் நான். 'கிறித்துவ' தத்துவத்திற்கு இப் படித்தான் விளக்கம் தரப்படுகிறது என்றால் - இதைத் தான் காந்தியம் போதிக்கிறது என்றால் - அவற்றைக் கிரிமினல் தத்துவங்கள் என்றே நான் அழைப்பேன்.

என்னுடைய ஒவ்வோர் உரையிலும் - வெள்ளை யர்கள் விசயத்தில் - என்னுடைய புதிய நிலைப்பாட் டைத் தெளிவுபடுத்த நான் முயற்சி செய்தேன். ''நேர் மையான, நல்ல வெள்ளையர்களுக்கு எதிராக நான் பேசமாட்டேன். இம்மாதிரி சிலபேர் இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். அனைத்து வெள்ளையர்களும் இனவெறியர்கள் அல்லர் என் பதையும் நான் அறிந்து கொண்டேன். வெள்ளை இனவெறியர்களுக்கு எதிராகவே நான் பேசி வரு கிறேன். நான் போராடி வருவதும் அவர்களை எதிர்த் துத்தான். அவசியப்படும் எந்த வழிமுறைகளிலா வது, இந்த இனவெறியர்களுக்கு எதிராகப் போராடும் உரிமை கறுப்பர்களுக்கு உண்டு என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவன் நான்''...

''அமெரிக்கக் கறுப்பனின் பிரச்சினைக்கானத் தீர்வைத் தொடர்ந்து தள்ளிப்போடுவது, வன்முறை யைத் தவிர்ப்பது என்பதுதான் அகிம்சையின் பொரு ளென்றால், நான் வன்முறையையே ஆதரிக்கிறேன். தீர்வைத் தள்ளிப்போடுவதுதான் அகிம்சையின் பொருளென்றால், அகிம்சை எனக்கெதற்கு? என்னைப் பொறுத்தவரை, தீர்வைத் தள்ளிப் போடு வது என்பது தீர்வே காணாமல் இருப்பதாகும்.'' இதையே வேறுவிதமாகச் சொல்கிறேன். இந்த நாட்டில் தன்னுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள, கறுப்பன் வன்முறையைத்தான் கையிலெடுக்க வேண்டுமென்றால், நான் வன்முறையையே ஆதரிக் கிறேன். படுமோசமான இனப்பாகுபாட்டிற்குள்ளாக் கப்பட்ட போதெல்லாம் - அயர்லாந்துக்காரர்களும், போலந்துக்காரர்களும், யூதர்களும் வன்முறையைத் தான் தேர்வு செய்தார்கள் என்பது உங்களுக்கும் தெரிந்ததுதான்! வன்முறையின் விளைவுகள், அதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பது முக்கியமல்ல. மேற்சொன்ன சூழல்களில் அவர்களைப் போலவே நானும் வன்முறையையே தேர்வு செய்வேன்.



படிப்பகம்

www.padippakam.com

> “அமெரிக்கக் கறுப்பனின் போராட்டம், ஒரு சர்வதேசப் போராட்டம் என்று கறுப்பன் உணர்வதற்கு முன்பே என் ஆயுள் முடிந்துவிடுமென்று தோன்றுகிறது. ஏனெனில், 'குடியுரிமைகள்' குறித்த தன்னுடைய பிரச்சினை வெறும் உள்நாட்டுப் பிரச்சினைதான் என்று கறுப்பனே கருதுமளவிற்கு, அமெரிக்க வெள்ளையன் அவனை மூளைச் சலவை செய்து வைத்திருக்கிறான்.”


கறுப்பன் மீது வெள்ளையன் தொடுத்து வரும் கொடுமை குறித்து யாராவது பேசினால் - அதுவும் குறிப்பாகக் கறுப்பன் பேசினால் - அதை வெள்ளையினச் சமூகம் வெறுக்கிறது. 'புரட்சிக்காரன்' என்று அடிக்கடி நான் அழைக்கப்படுவதற்கு என்ன காரணம் என்பதை நான் எப்போதுமே புரிந்து வைத்துள்ளேன். நான் ஏதோ குற்றம் புரிந்தவன் என்ற தொனி அதில் ஒலிக்கிறது. உண்மையான புரட்சியில் ஈடுபட வேண்டிய தேவை அமெரிக்கக் கறுப்பனுக்கிருக்கிறது...

ஆகவே, அமெரிக்காவில் 'புரட்சியில்' ஈடுபட்டிருந்த நீக்ரோவைப் பற்றிப் பேசினால் அதற்கு என்ன பொருள்? ஆமாம்! அவன் ஒரு சமூக அமைப்பைக் கண்டிக்கிறான். ஆனால், அந்தச் சமூக அமைப்பைத் தூக்கியெறிய, அதை நிர்மூலமாக்க அவன் முயல்வதில்லை. தற்போது நிலவி வரும் அமைப்பில் தன்னையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் - கறுப்பன் 'கலகம்' செய்வது இதற்காகத்தான். இந்த நாட்டில் கறுப்பர்களுக்கெனத் தனி மாநிலங்கள் கோரிப் போராடுவதே உண்மையான நீக்ரோ கலகமாகும். எலிஜா முகமதுக்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே பல்வேறு கறுப்பர் குழுக்களும், கறுப்பர்களும் முன்வைத்து வரும் கோரிக்கை இது.

''உண்மையான அமெரிக்கனான சிவப்பிந்தியனின் பழங்குடி இனத்தைத் தாழ்வான இனமென்று என்றைக்கு முடிவெடுத்தோமோ, அன்றைக்கு ஓர் இனப்படுகொலையில் பிறந்ததுதான் இந்த நாடு. நமது நாட்டின் கடற்கரைகளைப் பெரும் எண்ணிக்கையிலான நீக்ரோக்கள் எட்டுவதற்கு முன்பே - இன வெறுப்பு என்ற வடு காலனியச் சமூகத்தை அலங்கோலப்படுத்தி விட்டது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்தே இன மேலாதிக்கத்திற்காக நடத்தப்பட்ட போர்களில் ரத்தம் பாய்ந்தோடியது. சுதேசி மக்களைப் பூண்டோடு துடைத்தெறிவதை, ஒரு தேசியக் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கருதி அதைச் செய்ய முயற்சித்த ஒரேயொரு நாடு, அநேகமாக நம்முடைய நாடாகத்தான் இருக்கும். அதுமட்டுமல்ல, இந்த அவல அனுபவத்தை உன்னதமான அறப் போராகவும் உயர்த்தி விட்டோம்.

உண்மையில் இன்றும்கூட, இந்த அவமானகரமான அத்தியாயத்தைப் புறக்கணிக்கவோ, இதற்காக வருத்தப்படவோ நாம் தயாராக இல்லை. நமது இலக்கியம், நமது திரைப்படங்கள், நமது நாடகங்கள், நமது நாட்டார் இலக்கியங்கள் அனைத்தும் இதனை மேன்மைப்படுத்தி வருகின்றன. பண்டையக் கலாச்சாரம் கொண்ட செவ்விந்திய மக்களின் எண்ணிக்கை - வெகுவாகக் குறைக்கப்பட்டு, வறுமை நிறைந்த ரிசர்வேசன் பகுதிகளில் மந்தைகள் போல அவர்கள் அடைத்து வைக்கப்பட்டதற்குக் காரணமாயிருந்த வன்முறைக்கு மரியாதை தரும்படி, இன்றும்கூட நமது குழந்தைகளுக்குக் கற்றுத் தந்து வருகிறோம்.''

கிறித்துவத்தின் மிகத் தொடக்கக் காலத்திற்கே சென்று பார்க்கலாம். கிறித்துவத்தின் தோற்றம் - அதாவது இன்றைய மொழியில் கத்தோலிக்க மதம் மற்றும் அதன் படிநிலைகள் ஆகிய அனைத்தும் - கிறித்துவத் திருச்சபையால் 'பாலைவனத் தந்தையர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள் மத்தியில் - ஆப்பிரிக்காவில் கருக் கொண்டதாகும். வெள்ளையர்களின் அய்ரோப்பாவிற்குள் கிறித்துவத் திருச்சபை நுழைந்தபோது, அதை இனவெறி தொற்றிக் கொண்டது. ஆக்கிரமிப்பு, கொலை, சுரண்டல், கொள்ளை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை ஆகியவற்றோடும், வெள்ளை மேலாதிக்கப் போதனையோடும் சிலுவை என்ற பதாகையைச் சுமந்தபடி ஆப்பிரிக்காவிற்குள் கிறித்துவம் திரும்பியது. அப்பட்டமான உடல் வலிமையைக் கொண்டு, உலகத் தலைவன் என்ற பதவியில் தன்னைத்தானே வெள்ளையன் நியமித்துக் கொண்டது இப்படித்தான்.






படிப்பகம்

www.padippakam.com

ஆன்மீக ரீதியாக அவன் வெறுமையானவன். தலைமைத்துவத்தைத் தீர்மானிப்பதற்கான உண்மையான அளவுகோல் ஆன்மநேயம் என்பதை மனிதகுல வரலாறு, ஒவ்வொரு சகாப்தத்தின்போதும் மெய்ப்பித்துக் காட்டியுள்ளது. ஆன்மநேயம் மக்களை ஈர்க்கிறது; அதிகாரமோ மக்களைக் கட்டாயப்படுத்துகிறது. ஆன்மநேயம் அன்பைத் தோற்றுவிக்கிறது; அதிகாரமோ அச்சத்தைத் தோற்றுவிக்கிறது.

அரசாங்கச் சட்டங்களின் மூலம் சகோதரத்துவத்தைக் கட்டாயப்படுத்திவிட முடியாது என்று சொல்லும் இனவெறியர்களின் கருத்தோடு - நூற்றுக்கு நூறு விழுக்காடு நான் ஒத்துப் போகிறேன். உண்மையான மதத்தை - மதத்தின் சாரத்தை - அரசாங்கங்கள் பின்பற்றுவதுதான் இன்று உண்மையான உலகத் தீர்வாகும். இனப்பிரச்சினையால் பிளவுண்டிருக்கும் அமெரிக்காவில், இஸ்லாம் மதம் குறிப்பாக அமெரிக்கக் கறுப்பர்களுக்கு அவசர அவசியமாய் இருக்கிறது. தான் மிக மிகத் தீவிரமான கிறித்துவனாக இருந்து வருவது குறித்தும், அது தன்னை எங்கே அழைத்து வந்திருக்கிறது என்பது குறித்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியத்தில் கறுப்பன் இருக்கிறான். உண்மையில் சொல்லப்போனால், வெள்ளையனின் கைளில், வெள்ளையனின் வியாக்கியானத்தில் இந்த உலகைக் கிறித்துவம் எங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது?

உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்குகொண்ட வெள்ளையர் அல்லாத மக்களை - அது கலகப் பாதையில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. மூன்றில் இரண்டு பங்கு உலக மக்கள், மூன்றிலொரு பங்கான சிறுபான்மை வெள்ளையர்களை ''வெளியேறு!'' என்று சொல்லி வருகிறார்கள். வெள்ளையன் வெளியேறுகிறான். அவன் வெளியேறியவுடன் தங்களுடைய உண்மையான மதத்தை நோக்கி - வெள்ளைய ஆக்கிரமிப்பாளனால் புறச்சமயம் (Pagan) என்று முத்திரையிடப்பட்ட மதத்தை நோக்கி அவசரம், அவசரமாகத் திரும்புவதை நாம் பார்க்கிறோம். ஆயிரம் ஆண்டுகளாக வெள்ளையனின் கிறித்துவத்தை எதிர்த்து நிற்கக் கூடிய - எதிர்த்துச் சண்டையிடக் கூடிய - வலிமை கொண்ட ஒரே ஒரு மதம் இஸ்லாம் மட்டும்தான். இஸ்லாம் மதத்தால் மட்டுமே வெள்ளைக் கிறித்துவத்தை நெருங்க விடாமல் பார்த்துக் கொள்ள முடியும். இஸ்லாமையும், மற்ற சுதேசி மதங்களையும் நோக்கி ஆப்பிரிக்கர்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்து, பவுத்த, முஸ்லிம் மதங்களுக்கு ஆசிய மக்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் கிழக்கில் கிறித்துவர்கள் சிலுவைப் போர் நடத்தியதுபோல, தற்போது மேற்கில் இஸ்லாமியர்களும் சிலுவைப் போர் நடத்தி வருகிறார்கள். கிழக்கு நாடுகள் அதாவது ஆசியா - கிறித்துவத்திற்குக் கதவைத் தாழிட்டுக் கொண்ட ஒரு நிலையில், ஆப்பிரிக்கா படுவேகமாக இஸ்லாமிற்கு மாறிக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் - அய்ரோப்பா படுவேகமாகக் கிறித்துவத்திலிருந்து விலகிக் கொண்டிருக்கும் ஒரு நிலையில், உலகம் முழுவதிலும் வெள்ளையினத்திற்கு முட்டுத் தந்து வரும் அமெரிக்காதான் - கிறித்துவம் வலிவோடு எஞ்சியிருக்கும் பகுதியாக இருக்கிறது என்பது, இன்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

நல்லது. இதுதான் உண்மை நிலையென்றால், இன்று அமெரிக்காவில் 'கிறித்துவத்தின்' பெயரில் பின்பற்றப்பட்டு வருவதுதான் - உலகுக்குத் தர உலகக் கிறித்துவத்திடம் எஞ்சியுள்ள ஒரேயொரு சிறந்த அம்சம் என்பது உண்மையென்றால், கிறித்துவத்தின் முடிவு மிக அண்மையில் இருக்கிறது என்பதற்கு, இதைவிட மிகச் சிறந்த ஆதாரம் அறிவுள்ள மனிதனுக்குத் தேவைப்படாது...

கிறித்துவத் திருச்சபையின் இந்தத் தோல்விக்குத் தனிப்பெரும் காரணம் எது தெரியுமா? இனவெறியை அது எதிர்க்கத் தவறியதுதான். 'எதை விதைக்கிறீர்களோ, அதைத்தான் அறுவடை செய்வீர்கள்' என்ற பழைய கதைதான் இது. கிறித்துவத் திருச்சபை இனவெறியை விதைத்தது; இப்பொழுது அதே இனவெறியை அது அறுவடை செய்கிறது...

அமெரிக்கக் கறுப்பனுக்காக நான் ஏற்படுத்த விரும்பிய கறுப்பினத் தேசியவாத அமைப்பை உருவாக்குவதற்காக, எல்லா வகையான தொல்லைகளையும் தொடர்ந்து சம்பாதித்து வந்தேன். போட்டிகள் நிறைந்த அமெரிக்கச் சமூகத்தில், முதலில் கறுப்பர்களிடையே ஒற்றுமை ஏற்படாமல் எப்படி வெள்ளையர் - கறுப்பர் ஒற்றுமை ஏற்பட முடியும்?

மண்டியிட்டுக் கிடந்த நிலையிலிருந்து நிமிர்ந்து எழவும், தங்களுடைய சொந்தக் காலில் நிற்கவும், தங்கள் மீதான களங்கங்களைத் துடைத்தெறியவும், சுதந்திரமாக வாழவும் இன்று கறுப்பின மக்களுக்குச் சுயமரியாதையும் ஊக்கமும் நம்பிக்கையும் தேவைப்படுகின்றன. இவற்றை ஊட்டக்கூடிய திறன் கறுப்பினத் தேசியவாத அரசியல் - பொருளாதார - சமூகத் தத்துவங்களுக்குத்தான் இருக்கிறது...

நான் விரும்பிய அந்த அமைப்பை - அதாவது வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்குமிடையே உண்மையான சகோதர உணர்வு நிலவக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க உதவுவதையே - தன்னுடைய இறுதி லட்சியமாகக் கொண்ட அனைத்துக் கறுப்பர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பைக் கட்டுவதில் எனக்கு ஒரு தடை இருந்தது. 'கறுப்பு முஸ்லிம்' என்ற புகழ்பெற்ற, என்னுடைய முந்தைய பிம்பம்தான் அந்தத் தடை. படிப்படியாக அந்தப் பிம்பத்தைச் சீராக்க முயற்சி செய்தேன். ஒரு முக்கியக் கட்டத்தை கடக்க, பொதுமக்கள் மத்தியில் - குறிப்பாக நீக்ரோக்கள் மத்தியில் - ஒரு புதிய மரியாதையைப் பெற முயற்சி செய்தேன். முன்பு என்னிடமிருந்த கோபம் எந்தவிதத்திலும் இப்போது குறைந்துவிடவில்லை; கோபம் மனிதநேயத்தைக் குருடாக்கிவிடும் என்ற புரிதலைப் புனித உலகில் நான் கண்ட உண்மையான சகோதரத்துவம் எனக்குத் தந்திருந்தது. •



- நூல் : மால்கம் எக்ஸ் : என் வாழ்க்கை
- வெளியீடு : விடியல் பதிப்பகம் 11, பெரியார் நகர் மசக்காளிபாளையம் கோவை - 641 015
- பக்கங்கள் : 736
- விலை : ரூ.300

“ஆயிரம் ஆண்டுகளாக வெள்ளையனின் கிறித்துவத்தை எதிர்த்து நிற்கக் கூடிய - எதிர்த்துச் சண்டையிடக் கூடிய - வலிமை கொண்ட ஒரே ஒரு மதம் இஸ்லாம் மட்டும் தான். இஸ்லாம் மதத்தால் மட்டுமே வெள்ளைக் கிறித்துவத்தை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்ள முடியும்.”



படிப்பகம்

www.padippakam.com

## ''உலர் கழிப்பிடங்களை உடைப்போம்''




தொடர் வண்டி நிலையங்களில் உள்ள இருப்புப் பாதையில் மனிதக் கழிவுகளை இன்றைக்கும் மனிதன் கையால் அள்ளும் அவலம் நீடிப்பதைத் தடுக்கும் வகையில், நவீன கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் - போர்க்கால அடிப்படையில் தடுத்து நிறுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, புதுவையில் ரயில் மறியல் 28.12.05 அன்று புதுவை ரயில் நிலையம் முன்பு நடந்தது. ஆதித்தமிழர் பேரவை புதுவை மாநிலத் தலைவர் எம்.பி. வீரம்மா தலைமை தாங்கினார். பேரவைத் தலைவர் தி. தொல்காப்பியன் தொடங்கி வைத்தார். மனித உரிமைக் கழகம் வழக்கறிஞர் லூசி, தந்தை பெரியார் திராவிடக் கழகம், மீனவர் மகளிர் முன்னேற்ற சங்கம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன. தொடர் வண்டி நிலையம் நோக்கி முழங்கிக் கொண்டு அணிவகுத்துச் சென்றனர். காவல் துறையினர் தடுத்து தோழர்களைக் கைது செய்தனர். தி. தொல்காப்பியன் பேசுகையில், ரயில் நிலையங்களில் கையால் மலம் அள்ளும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும். மேலும், உலர் கழிப்பிடங்கள் எங்கிருந்தாலும் அவைகளைக் கண்டறிந்து சூன் மாதம் உலர் கழிப்பிடங்கள் உடைக்கும் போராட்டத்தை ஆதித் தமிழர் பேரவை நடத்தும் என்று எச்சரித்தார்.



## தலித் கலை விழா 2006

**நாள் : மார்ச் 18, 2006**

**இடம் : அரசரடி, யூ.சி. பள்ளி விளையாட்டுத் திடல்**

**நேரம் : மாலை 6 மணி முதல் விடிய விடிய**

தலித் நிகழ் கலையாட்டங்கள், நாடகங்கள், குரலிசை, உரைவீச்சு, விருது வழங்குதல், கருத்தரங்கம், தலித் கலைஞர்களின் மாநாடு, வெளியீடுகள் ஆகியவை இடம்பெறும்.

### குடும்பத்தோடு வாங்க

**ஒருங்கிணைப்பு :**
**தலித் ஆதார மய்யம்**
**தமிழ் நாடு இறையியல் கல்லூரி**
**அரசரடி, மதுரை - 625 016**

**தொடர்புக்கு :**
**95452 - 2302199, 98429 - 17794**

## ''அகில இந்திய ஒதுக்கீட்டை ரத்து செய்க''




முதுநிலை மருத்துவக் கல்வியில் 50 சதவிகித இடங்கள், கடந்த ஆண்டு முதல் அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு வழங்கப்படுகிறது. இது மாநில நலன்களுக்கும், இடஒதுக்கீட்டிற்கும், சமூக நீதிக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கும் எதிரானதாகும். அரசு மருத்துவர்களுக்கென அகில இந்திய ஒதுக்கீட்டு முறையில் இடஒதுக்கீடு இல்லை. இதனால் அரசு மருத்துவமனைகளில் போதிய முதுநிலை மருத்துவக் கல்வி படித்த மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கைகுறைந்துவிடும். எனவே, அகில இந்திய ஒதுக்கீட்டு முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும், டி.எம்., எம்.சி.எச்., போன்ற உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்திட வலியுறுத்தியும், இடஒதுக்கீட்டின் அளவை தீர்மானித்திட நாடாளுமன்றம் - சட்டமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தியும், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் துணைத் தலைவர் ஏ. சேப்பன் தலைமையில் 5.12.2005 அன்று சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டாக்டர் வி.பி. நாராயணன் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்தார். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி. ஆர். ரவீந்திரநாத், டி. இளங்கோ, ரா. திருமலை, டி. லெனின் உள்ளிட்டோர் விளக்க உரையாற்றினர். தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் சி.என். தெய்வநாயகம் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com




# த.மு.எ.ச.வின் முற்போக்கு முகமூடி கிழிகிறது!


தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் 4.12.2005 அன்று ஈரோட்டில் முப்பெரும் விழா நடைபெற்றது. ''தீரன் சின்னமலை 250 ஆவது பிறந்த ஆண்டு விழா, பாரதி பிறந்த நாள் விழா, ஈரோடு தமிழன்பனுக்குப் பாராட்டு விழா'' என முப்பெரும் விழாக்கள். த.மு.எ.ச.வின் இம் முப்பெரும் விழா, ஈரோட்டில் கடும் விமர்சன விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது.

தோன்றியுள்ள விவாதம் விழாப் பொருள் பற்றியதன்று. தீரன் சின்னமலையைக் கொங்கு இனத் தலைவராகக் கவுண்டர்கள் முடிசூட்டிக் கொண்டாலும், விடுதலைப் போராளியான அவருக்கு விழா எடுப்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கப் போவதில்லை. பாரதிக்கு விழா எடுப்பதில் மாற்றுக் கருத்துடையவர்கள்கூட, அது பற்றி இங்குத் திறனாய்வு செய்யவில்லை. இங்குச் சிக்கலே விழாவிற்கு அழைக்கப்பட்டவர்கள், பாராட்டப்பட்டவர்கள் பற்றியதே. அவர்களை அழைத்துப் பாராட்டுச் செய்ததின் மூலம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 'முற்போக்கு' அடைமொழி கேள்விக்குள்ளாகியுள்ளது!

விழா அழைப்பிதழைப் பார்க்கும் எவருக்கும், கொள்கைக் கோட்பாடுகளின் தாக்கத்திற்கு உள்ளாகாத பொது வானவர்களுக்கும்கூட, ஒரு சில கேள்விகள் இயல்பாகவே தோன்றும். ஈரோடு தமிழன்பன் பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கியவர், செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தாளாளரான ஜே. சுத்தானந்தன் ஆவார். இவர் புதிய நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவராய் இருந்தவர். தீரன் சின்னமலைப் படக் கண்காட்சித் திறப்பாளர், சாதிவெறியரான வி.சி. மோகன் தேவசேனாபதி ஆவார். தீரன் சின்னமலை பிறந்த ஆண்டு வாழ்த்துரை வழங்கியவர்களில் ஒருவர் - முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரும், இந்நாள் காங்கிரசுக்காரரும், எந்நாளும் சாதி ஆதிக்க நிலவுடைமையாளருமான துரை ராமசாமி ஆவார். முதலியாரைப் பாராட்ட முதலியார்? கவுண்டரைப் பாராட்டக் கவுண்டர்களா?

சுந்தானந்தன், சாதியின் பெயரில் (செங்குந்தர்) கல்வி நிறுவனங்களை நிறுவிப் பேணி வருகின்றவர். அவரது கல்வி நிறுவனங்களில் முதலியார் சாதிக்காரர்கள் மேலாண்மை செலுத்துவதாகக் குற்றச்சாட்டு உண்டு. ஈரோடு செங்குந்தர் மேனிலைப் பள்ளியில் முதலியார் சாதி ஆசிரியர்களுக்கும் முதலியார் சாதியைச் சேராத பிற ஆசிரியர்களுக்கும் இடையே நடந்த கலவரத்தில், பள்ளி ஆவணங்கள் தீக்கிரையாகிப் போன வரலாறும் உண்டு.

தமிழன்பனைப் பாராட்ட இடதுசாரிக் கருத்தோட்டம் கொண்ட எவரும் ஈரோட்டில் இல்லையா? நாம் தமிழன்பனை சாதிப் பற்றாளர் என்று குற்றம் சாட்ட விரும்பவில்லை. ''சாதி அழித்திடல் ஒன்று - நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று பாதியை நாடு மறந்தால் - மற்றப் பாதி துலங்குவதில்லை'' எனப் பாடிய பாரதிதாசனையே - சாதி வட்டத்திற்குள் அடைக்கும் பின்னணியைக் கொண்ட ஒருவர், தமிழன்பனைப் பாராட்டுவது முறையற்றது, கண்டனத்திற்குரியது.




தீரன் சின்னமலை வாரிசு என த.மு.எ.ச.வால் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்ட மோகன் தேவசேனாபதி, ஊரறிந்த சாதி வெறியர். தேநீர்க் கடையில் பெஞ்சில் அமர்ந்து அருந்தியர் சாதியைச் சேர்ந்த இருவர் தேநீர் அருந்தினார்கள் என்பதற்காகவே - அவர்களையும், அச்சமூக மக்களையும் அடித்து நொறுக்கி - ஊர்க்கட்டுப்பாடு என்ற பெயரில் துன்புறுத்திய சாதி வெறியர். அவரின் சாதிக் கொடுங்கோன்மையை எதிர்த்து, புரட்சிகர இளைஞர் முன்னணி பெரும் போரட்டம் நடத்தியதுடன் தொடர்ந்து போராடியும் வருகிறது. இவ் விழாவில், த.மு.எ.ச.வைக் கண்டித்து துண்டறிக்கை வழங்கிய பு.இ.மு. தோழர்கள் காவலர் துணையோடு அரங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், 13 தோழர்கள் கைதும் செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மோகன் தேவசேனாதிபதியின் சாதிவெறி அனைவரும் அறிய அம்பலப்பட்டு நிற்கையில், த.மு.எ.ச.வினருக்கு மட்டும் தெரியாமல் போனதன் மர்மம் என்ன?

முற்போக்கு என்று அடைமொழி இட்டுக் கொள்வதால் முற்போக்காளர் ஆகிவிட முடியாது. செயல் ஒன்றுதான் முற்போக்கா, பிற்போக்கா என்பதைத் தீர்மானிக்கும். ஈரோட்டில் நடைபெற்ற த.மு.எ.ச.வின் முப்பெரும் விழா, அவர்களை முற்போக்காளர்களாய்க் காட்டவில்லை; பிற்போக்காளர்களே என்று தெளிவுபடுத்தியுள்ளது. ஒருவேளை, தவறு ஈரோட்டுக் கிளையின் உடையதா? இல்லை! இல்லை! விழாவை ஒட்டி வெளியாகியிருந்த 'செம்மலரில்' ராமசாமிகளும், தேவசேனாபதிகளும், சுத்தானந்தன்களுமே நிரம்பி இருந்தனர். சாதிஒழிப்பை முன்னிறுத்தும் தலித் இலக்கியம் தேவையற்றது என்று முழங்கும் த.மு.எ.ச., சாதி வெறியை ஆராதிப்பதற்குத் துளியும் வெட்கப்படவில்லை. •

-நம் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தை ஆயுதமாக்கும் குரலிசைப் போராளி



தலித் க. சுப்பையா - மதுரை மாவட்டம் முனியாண்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். தினசரி விவசாயக் கூலி குடும்பத்தின் சொந்தக்காரர். தமிழக தலித் கலை இலக்கியப் போராட்டங்களில் முன்னோடியாகத் திகழ்பவர். குறிப்பாக, கடந்த 20 ஆண்டுகளாக, தலித் பாடல்களின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் உதடுகளில் காந்த அதிர்வுகளை உருவாக்கியவர். போராட்டக் களங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தலித் இயக்க மேடைகளிலும், தலித் கலைவிழா மேடைகளிலும் - தனது விடுதலைக் குரல் மூலம் இசைப்போர் நிகழ்த்தி வருபவர். சாதி ஒழிப்பை ஓங்கி ஒலிக்கும் தீவிர அம்பேத்கர் சிந்தனையாளர். பெரியார் இயக்கப் பாசறையில் வளர்ந்தவர். மார்க்சிய சிந்தனைகளில் தன்னைப் பாடமாக்கியவர். ஒரு கலை இலக்கியப் போராளியாக இருந்து சமகால தலித் இயக்கங்களினூடாக நிழலாக இயங்கி வருபவர். 'கலைத் தளத்தில் மனநோயாளிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது' என நெஞ்சு நிமிர்த்தி விமர்சிக்கும் தோழர் சுப்பையா அவர்களிடம் எதிர்கால தலித் கலை இலக்கிய அரசியலைப் பற்றிய ஒரு நேர்காணல்.

■ அன்பு செல்வம்

**தங்களின் குடும்பப் பின்னணி பற்றிச் சொல்லுங்கள்...**

பூமிக்கு எனது அறிமுகம் எனது தாயின் ஓவென்கிற அழுகைச் சத்தத்தோடு தான் நிகழ்ந்திருக்க வேண்டும். உள்ளங்கையில் அடங்கும் ஒரு சதைப் பிண்டத்தை ரத்தக் குளத்திலிருந்து வெளியேற்றும் பிரசவப் போரில் என் தாய் மட்டுமல்ல, நானும்கூட மொழியற்ற ஒருவகை அழுகுரலோடுதான் இந்த அழகிய உலகிற்கு அறிமுகமாயிருப்பேன். இயற்கை விதியான பிறப்பு குறித்த இவ்வினை, மனிதகுலம் முழுமைக்கும் பொதுவான ஒன்றாகவே இருக்கிறது.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், முனியாண்டிப்பட்டி எனும் சிற்றூர்ச் சேரி தான் எனது பிறப்பிடம். எனது தந்தையின் தந்தை பெயர் சுப்பன். எழுதப் படிக்கத் தெரிந்த எனது தந்தை பெயர் கருப்பன். வாகான உடலமைப்பும், வேகமாக நடக்கும் திறனுடைய என் தந்தைக்கு கள்ளர்கள் வைத்த கேலிப் பெயர் நொண்டி என்பதாகும். என் தந்தைக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் பழனி. இவருக்கு வெள்ளையம்மாள், பூச்சியம்மாள் எனும் இரண்டு மகள்கள் உண்டு. ஆண் குழந்தை கிடையாது. அக்காலத்தில் ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களைப் பார்த்து - ''தலை சிரைக்க பிள்ளையில்லாத குடும்பம்'' என்று ஏளனம் பேசுகிற வழக்கம் இருந்தது. இத்தகைய அவமானத்தைப் போக்கவே இருதார மணம் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இதன் அடிப்படையில்தான் என் அப்பாவுக்கு என் அம்மா இரண்டாம் தாரமாக வாக்கப்பட நேர்ந்தது. என் அம்மாவுக்கு ஒரே மகனான என்னைத் தவிர, குழந்தைகள் கிடையாது. என் தாத்தாவுக்கு என் அப்பா ஒரே மகன். என் அப்பாவுக்கு நான் ஒரே மகன். எனக்கு இரண்டு மகன்கள். நான் தமிழகத்தில் பிறந்தவன். எனது மனைவி சுப்புலெட்சுமி மலேசியாவில் பிறந்து வளர்ந்தவர். எனது மகன்கள் இருவரும் புதுச்சேரியில் பிறந்தவர்கள். வரலாற்றில் அடிமைத்தனத்தை எதிர்த்த முதல் மனிதனும், பேராசான் காரல் மார்க்சின் கவனத்தை ஈர்த்த போராளியும், வெள்ளை அடிமையுமான ஸ்பார்டகசை நினைவு கூறும் வகையில், அப்பெயரை என் மூத்த மகனுக்கு வைத்திருக்கிறேன். சோவியத் புரட்சியின் கண்ணாடி என்று பேராசான் லெனினால் அழைக்கப்பட்ட கார்க்கியின் நினைவாய் அப்பெயரை என் இளைய மகனுக்கு வைத்திருக்கிறேன்.

எனது பெரியம்மா தாலாட்டுப் பாடுவார். ஒப்பாரி வைப்பார். கதைகள் சொல்லுவார். ஆனால், என்னைப் பெற்ற அம்மா பேசுவதற்கும், பிறர் பேசுவதைக் கேட்பதற்குமான சக்தியை இயற்கை வழங்கவில்லை. என் அம்மா பிறவி ஊமையாக, செவிடாகப் பிறந்து வாழ்ந்து செத்துப் போனவர். ஈனக் குரலாய் என் அம்மாவிடமிருந்து வெளிப்பட்ட சிரிப்பும் அழுகையும்தான் எனக்கும் என் அம்மாவுக்குமிடையிலான உறவை - நேசத்தை பத்திரப்படுத்தி காப்பாற்றி வந்தது. எனக்கான முதல் அடையாளம் நான் ஓர் விவசாயத் தொழிலாளியின் மகன் என்பதுதான். பிறகே மற்ற அனைத்தும்.

> **❝ தலித்துகள் படிக்கக் கூடாது என்பதில் சாதி இந்துக்கள் தொலைநோக்குடன் சிந்திக் கிறார்கள் என்பதைக் காலம் தான் எனக்கு உணர்த்தியது. அதற்கான வழியைத் திறந்தது மார்க்சியமும் பெரியாரியமும்தான். ❞**

**நீங்கள் அந்தக் காலத்தில் கல்வி பயின்ற பின்னணியை சற்று விரிவாகச் சொல்லுங்கள்...**

முதன் முதலில் எனக்கு எழுத்தைக் கற்றுக் கொடுத்தது பள்ளி ஆசிரியர்களல்லர்.



படிப்பகம்

www.padippakam.com

அதேபோல், நான் எழுதியது சிலேட்டுக் குச்சி அல்லது பென்சிலும் அல்ல. மேலும், நான் எழுதுவதற்குப் பயன்படுத்தியது சிலேட் அல்லது தாளும் அல்ல. பள்ளியில் என்னைச் சேர்ப்பதற்கு முன்பாக எங்கள் வீட்டு வாசலில் 56 படி நெல் கொள்ளளவுள்ள ஒரு மூட்டை நெல்லைக் கொட்டி வட்டமாகப் பரப்பி, என் சுட்டு விரலைப் பிடித்து 'அ' எனும் முதல் எழுத்தை நான் எழுதுவதற்கு என் தந்தை எனக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். எனக்கான கல்விச் சிந்தனை நெல்லின் மீது எழுதிய எழுத்திலிருந்தே தொடங்கியிருக்கிறது. பள்ளியில் என்னைச் சேர்ப்பதற்கு முன்பு வீட்டில் நெல் சேமித்து வைத்திருக்கும் மச்சுக்குக் கீழே வாழை இலையில் தேங்காய், வாழைப்பழம் வைத்து படி நிறைய நெல்லும், பனை ஓலையில் எழுதப்பட்ட வீட்டுப் பத்திரம், வெற்றிலைப் பாக்கு, நூல் சுற்றப்பட்ட செப்புக் குவளையில் தண்ணீர், இவைகளுடன் சூடம் கொளுத்தி சாம்பிராணி புகை போட்டு, முன்னோர்களை நினைத்து என்னைக் கும்பிடச் சொல்லி - அதன் பிறகே என் தந்தை என்னைப் பள்ளியில் சேர்த்திருக்கிறார்.

பணப்புழக்கம் அதிகமில்லாத அக்காலத்தில், எனது பள்ளிப் படிப்பின் முதல் ஆசிரியரான திரு. இருதயம் அவர்களுக்கு மூன்று மரக்கால் நெல்லை என் தந்தை குரு காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார். என் தாய் தந்தை நான் ஒரே மகன் என்பதால், எனக்கு வைத்த பெயர் பிச்சை. பிச்சை என்று பெயரிடுவது இலவசம் என்கிற அர்த்தம் சார்ந்ததல்ல. ஆண் குழந்தை வேண்டுவோர் அக்காலத்தில் மடிப்பிச்சையேந்துவது என்கிற ஒரு சடங்கைச் செய்து வந்தனர். ஆண் குழந்தையில்லாத தாயும் தகப்பனும் நாலு வீட்டின் முன்பு

**“ தலித்துகள் 'ஈ' விகுதியுடன் முடிவதாகப் பெயர்கள் வைப்பது முன்பு குற்றச் செயலாகக் கருதப்பட்டது. என் தந்தை, தாத்தா பெயர்கள் 'ன்' விகுதியுடன் முடிபவை. ”**

நின்று மடிப்பிச்சையேந்தி நெல்பெற்று அதைக் குத்தி அரிசியாக்கித் தங்கள் குல சாமிக்குப் பொங்கலிட்டு, தங்கள் வேண்டுதலை சாமியிடம் முன்வைப்பார்கள். நம்பிக்கை சார்ந்து செய்யப்படும் இதுபோன்ற சடங்குகளால் பல வருடங்கள் கடந்து குழந்தைப் பேற்றை அடையும்போது, பிறப்பது ஆணாக இருந்தால் பிச்சை என்றும் - பெண்ணாக இருந்தால் பிச்சையம்மாள் என்றும் பெயரிடுவது வழக்கம்.

என் அம்மாவைத் திருமணம் செய்து பல வருடங்கள் கடந்த நிலையில் நான் பிறந்ததால், மேற்கண்ட மடிப்பிச்சை சடங்குகள் செய்யப்பட்ட பின்னணியில்தான் எனக்குப் பிச்சை என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. கிறித்துவரான இருதயம் ஆசிரியர் எனக்கு வைத்த பெயர்தான் சுப்பையா. தலித்துகள் 'ஈ' விகுதியுடன் முடிவதாகப் பெயர்கள் வைப்பது முன்பு குற்றச் செயலாகக் கருதப்பட்டது. என் தாத்தா, தந்தையின் பெயர்கள் 'ன்' விகுதியுடன் முடிபவை. எனக்கு 'ன்' விகுதியுடன் பெயரிடாததற்கு இருதயம் ஆசிரியர்தான் காரணமாக இருந்திருக்கிறார் என்றே நினைக்கிறேன்.

எங்கள் கிராமத்தில் அய்ந்தாம் வகுப்பு வரை இயங்கி வந்த அரசு ஆரம்பப் பள்ளியில்தான் எனது படிப்புத் தொடங்கியது. எனது பள்ளிப் படிப்பின் முதலாவது ஆசிரியர் திரு. இருதயம். வலதுகால் ஊனமான நிலையில் சற்றுக் காலை இழுத்து இழுத்து நடப்பார். மெலிந்த உடம்பு, அரைக்கை சட்டை, மடித்துக்கட்டிய நாலுமுழ வேட்டி, கையில் குடை, மாணவர்களிடம் கண்டிப்பு, பெற்றோர்களிடம் இலவசமாக எதையும் எதிர்பார்க்காத நேர்மை போன்றவைதான் இருதயம் ஆசிரியருக்கான அடையாளம். இவர்



ஆ. அலெக்ஸ் - பதலைக் (தபலா) கலைஞர், ச. பாக்கியசாமி - விரல் விசைப்பியக் (கீபோர்டு) கலைஞர், பூ. தட்சிணாமூர்த்தி - தவில் கலைஞர், து. முருகையன் - குரலிசைக் கலைஞர், சு. சுப்பையா - குரலிசைக் கலைஞர்

செருப்பணிந்து நான் பார்த்ததில்லை. கள்ளர்கள் வசிக்கும் பகுதியில் அமைந்திருந்த பள்ளியில் படித்த என்போன்ற சிறுவர்களை சேரிக்கு வந்து அழைத்துச் செல்வார். இருதயம் ஆசிரியருக்கு மூன்று பிள்ளைகள். மூத்த பெண் ரெஜினா நல்ல உயரத்துடன் சிவப்பு நிறத்தில் அழகுப் பதுமையாகக் காட்சியளிப்பார். இரண்டாவது பெண் ரெஜினாவுக்கு நேர்எதிராக கருப்பு நிறத்துடன் குள்ளமாக இருப்பார். ஒரே மகன் செல்லத்துரை. நான் மேலூருக்குப் படிக்க வந்து பல வருடங்களுக்குப் பிறகுதான் இருதயம் ஆசிரியர், ஒரு தலித் கிறித்துவர் என்பதாக அறிய நேர்ந்தது. எளிமையுடன் வாழ வேண்டும் என்பதை எனக்கான முன்னோடிகளில் இருதயம் ஆசிரியரும் ஒருவராவார்.

ரெஜினா டீச்சர் எனக்கு கணக்கு ஆசிரியர். அவர் எங்கள் கிராமத்தில் தங்கியிருந்தபோது, எதிர் வீட்டைச் சேர்ந்த கள்ளர் சாதி இளைஞர் ஒருவரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட நிலையில் - அந்த இளைஞர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் அந்த இளைஞரின் மாமனார் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டார். தன் மகளுக்கு நேர்ந்த அவமானத்தால்மனமுடைந்த இருதயம் ஆசிரியர், மறுவாரமே எங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி மேலூரில் குடியேறி விட்டார். மதுரையில் நான் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் இருதயம் ஆசிரியரை மேலூரில் ஒருநாள்



படிப்பகம்

www.padippakam.com

சந்திக்க நேரிட்டது. கல்லூரியில் நான் படிப்பதாகக் கூறியபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அத்துடன் படிப்பை முடித்த பிறகு கிராமத்தில் வசிக்காதே என்று எனக்கு ஆலோசனையும் கூறினார். படித்த தலித்துகள் கிராமச் சாதியக் கட்டமைப்பிற்குள் சுதந்திரமாக வாழ முடியாது என்பதற்கு ஆசிரியர் இருதயம் அன்று கூறிய அறிவுரை, பிற்காலத்தில் கிராம வாழ்வில் நான் எதிர்கொண்ட பல்வேறு அவமானங்கள் சாட்சியாக அமைந்தன.

**படித்த தலித்துகள் கிராமச் சாதியக் கட்டமைப்பிற்குள் சுதந்திரமாக வாழ முடியாது என்பதற்கு ஆசிரியர் இருதயம் அன்று கூறிய அறிவுரை, பிற்காலத்தில் கிராம வாழ்வில் நான் எதிர்கொண்ட பல்வேறு அவமானங்கள் சாட்சியாக அமைந்தன.**

ஆரம்பக் கல்வியை முடித்த நிலையில் மேலூர் நகரில் 6 ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கு என் தந்தை முயற்சி செய்தார். மேலூரில் சுந்தரேஷ்வரா வித்யசாலை எனும் தனியார் பள்ளியில் படிப்பதற்கு எனக்கு மிகுந்த விருப்பமிருந்தது. அப்பள்ளியில் வசதி படைத்தவர்கள் குறிப்பாக பார்ப்பனர், செட்டியார், நாயுடு, கள்ளர் சாதியில் சொந்த நிலம் வைத்திருப்பவர்களின் பிள்ளைகள் தான் பணம் கட்டிப் படித்து வந்தனர். உயர் கல்வி படிப்பதற்கு அடிப்படைக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வதற்கான திறன் இல்லாத நிலையிலும்கூட, கல்லூரிப் படிப்புவரை நான் தொடர வேண்டுமென்பதில் என் தந்தை மிகவும்



உறுதியாக இருந்தார். மேலூர் அழகர் கோவில் சாலையில் அரசுப் பொது மருத்துவமனை அருகில் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் 6 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அப்பள்ளியில் நான் படித்த காலத்தில் 70% பிள்ளைகள் அரசுப் பள்ளிகளில்தான் படித்து வந்தனர். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தனியார் பள்ளிகள் அப்போது மிகவும் குறைவு. அப்பள்ளிகளில் பணம் கட்டிப் படிக்க வைக்க முடியாத ஏழைகளின் எண்ணிக்கை மிகமிக அதிகம். மற்றொன்று தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு அரசுப் பள்ளிகளையே பெரிதும் நம்பியிருந்தனர். இந்த நம்பிக்கைக்குக் காரணமாக இருந்தவர் காமராசர்.

நான் படித்த காலத்தில் கிராமத்திலிருந்து நகரத்திற்குச் சென்று படித்துவரும் மாணவர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக் கூடியதாகவே இருக்கும். இவர்களில் சேரிப்பிள்ளைகளின் எண்ணிக்கை அரிதாகவும், பெண்களோ அறவே இல்லாத நிலையும் இருந்து வந்தது. தினமும் மூன்று மைல் தொலைவுள்ள மேலூருக்கு சக மாணவர்களுடன் புத்தகப்பை, தூக்குச் சட்டியுடன் நடந்து சென்று படித்து வந்தேன். அப்போது காலில் செருப்பணியும் வழக்கமில்லை. வாரத்தில் 6 நாட்கள் தினமும் 6 மைல் நடந்து படித்து வந்தது, என் உடம்பை பல்வேறு நிலைகளில் பாதிப்புக்குள்ளாக்கியது. இதனால் என் கண்பார்வை குறையத் தொடங்கியது.

எங்கள் கிராமத்தின் வசதிபடைத்த கள்ளர் சாதி குடும்பப் பிள்ளைகள், கூட்டுவண்டியில் பள்ளிக்கு வருவார்கள். அந்த வண்டியை பிடித்துக்கொண்டே பின்புறமாக ஓடுவோம். என் புத்தகப் பைகளை அந்த வண்டியில் வைப்பதற்குக்கூட அப்பிள்ளைகள் அனுமதிக்க மாட்டார்கள். சில சமயங்களில் வண்டியைக்கூட தொட விட மாட்டார்கள். சைக்கிளில் செல்பவர்களிடம் நானும் வருகிறேன் என்றால், என்னை உட்காரச் சொல்லி அவர்கள் மிதிக்க மாட்டார்கள். நான்தான் சைக்கிள் ஓட்டுவேன். கள்ளர்கள் உட்கார்ந்து வருவார்கள். என்னுடன் படித்த கள்ளர்கள் உள்ளிட்ட பிற சாதி மாணவர்கள் எவரும் என்னை அண்ணன் தம்பி என்று அழைத்ததில்லை. வயதில் மூத்தவர்கள் வாடா போடா என்றும், சிறியவர்கள் வா, போ என்று பெயரைச் சொல்லித்தான் அழைத்தார்கள். என் புத்தகப் பையைத் தொட்டு தூக்குவார்கள். தூக்குச் சட்டியை தொடமாட்டார்கள். நான் கொடுக்கும் அரிசியை, கேழ்வரகுப் புட்டை, தின்னக் கொடுத்தால் வாங்க மாட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் நான் படித்த 3 வருடங்களிலும் எனக்குத் தமிழாசிரியராகவும், 6 ஆம் வகுப்பில் வகுப்பாசிரியராகவும் இருந்தவர் செல்வி. பச்சையம்மாள் ஆவார். மரவேலை செய்யும் ஆசாரி வகுப்பைச் சேர்ந்த இவர், வகுப்பறையில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார். நான் பாடுவதற்கு ஊக்கப் படுத்தியவர்களுள் இவரும் ஒருவர்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் தேர்வு பெற்ற நிலையில், மேலூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பில் சேர்ந்தேன். உயர்நிலைப் பள்ளியில் நான் படித்த காலம் துயரமானது. திங்கட் கிழமையன்று வெள்ளைச் சட்டை, நீலநிறக் கால்சட்டையணிந்து சீருடையுடன் பள்ளி செல்ல வேண்டும். சீருடை வாங்க இயலாத நிலையில், திங்கட் கிழமை பள்ளி செல்வதைப் பல மாதங்கள் தவிர்த்



படிப்பகம்

www.padippakam.com

திருக்கிறேன். செவ்வாய்க்கிழமை பள்ளிக்குப் போனால் வகுப்பாசிரியர் மோசமாகத் திட்டுவார்; அடிப்பார்; முதல் வகுப்பு முடியும் வரை வெளியில் வெயிலில் நிற்க வைப்பார். இத்துயரத்தை மாலையில் வீடு திரும்பிய பிறகு பெரியம்மாவிடம் கூறி அழுவேன். என் அம்மா கண்ணீர் வடிப்பார். அடிபட்டு வீங்கிப்போன இடத்தில் சாணத்தைச் சுட்டு ஒத்தடம் கொடுப்பார். இப்படியெல்லாம் அடிவாங்கிக்கிட்டு படிக்கிற படிப்புத் தேவையில்லே; நாளையிலேருந்து பள்ளிக்கூடம் போக வேணாம் என்று பெரியம்மா சொல்வார். அப்பா மவுனமாக இதைக் கேட்டுக் கொண்டிருப்பார். எனக்குநினைவுதெரியஎஸ்.எஸ்.எல்.சி. படிப்புமுடியும்வரைநான் உடுத்திய ஆடையில் பள்ளிச் சீருடை மட்டும்தான் துணி எடுத்து தையற்கடையில் கொடுத்து தைத்துப் போடப்பட்டவையாகும். திங்கட்கிழமை மேலூரில் நடைபெறும் மாட்டுச் சந்தையின்போதுதான் சாலையோரத்தில் விற்கப்படும் சட்டை டவுசரை அப்பா வாங்கித் தருவார். அப்பா வாங்கித் தரும் உடைகளில் எனக்கு மிகவும் பிடித்த மானவை சிவப்புச் சட்டையும் பச்சை டவுசரும்தான்.

எனது சொந்த கிராமத்தைச் சேர்ந்த பெரிய கருப்பன் என்பவர், அப்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணி செய்தார். அவர் என்னைக் கண்டுகொள்ள மாட்டார். கள்ளர் சாதியைச் சேர்ந்த இவர், கள்ளர் சாதி மாணவர்கள் விளையாட்டின் மீது ஆர்வம் செலுத்த தனிக்கவனம் செலுத்துவார். கள்ளர் சாதி மாணவர்களுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் பல்வேறு சமயங்களில் மோதல்கள் நடந்துள்ளன. அவர்கள் சற்றும் யோசிக்காமல் என் நெஞ்சில் கைவைத்து தள்ளுவார்கள். சட்டையைப் பிடித்து உலுக்குவார்கள். கைநீட்டி அடிப்பார்கள். அவர்களுடைய தாய் தந்தையர் தலித் மக்களை திட்டுவதைப் போல வாடா, போடா என்று என்னைத் திட்டுவார்கள். பெரிய கருப்பன், சாதிப் பெருமையுடன் இதையெல்லாம் பார்த்து ரசிப்பார்.

பல்வேறு அவமானங்களைச் சுமந்து கொண்டுதான் அப்பள்ளியில் படிப்பை முடித்து வெளியேறினேன். கள்ளர் சாதி மாணவர்களால் பல்வேறு சமயங்களில் நான் மிரட்டப்பட்டபோது, அவர்களைக் கடுமையாக எச்சரித்து எனக்கு ஆறுதலாகப் பேசிய ஆசிரியர்களும் உண்டு. அவர்களில் திரு. கன்னியப்பன், திரு. அரசன் ஆகிய செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் - இந்த இருவரால்தான் மூன்று வருடங்களும் நான் அப்பள்ளியில் தொடர்ந்து படிக்க நேர்ந்தது.

இதன் பிறகு கல்லூரியில் படிக்கும் பொறுப்பை எனது தாய் மாமன் திரு. மகாலிங்கம் ஏற்றுக் கொண்டார். மதுரை வெள்ளைச்சாமி (நாடார்) கல்லூரியில் நான் புகுமுக வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கு மாமா உதவி செய்தார். இளங்கலை முதலாமாண்டு சேருவதற்கு முன்பாகவே மாமா விபத்தில் இறந்துவிட்டார். கல்லூரியில் பணம் கட்டுவதற்கு இயலாத நிலையில், அப்பாவும் அம்மாவும் வீட்டுப் பத்திரத்தை கையில் வைத்துக்கொண்டு உடன் என்னையும் அழைத்துக் கொண்டு கள்ளர்கள், கோனார் வீட்டு வாசல்களில் நின்று கடன் கேட்டு கெஞ்சியதை நான் ஒருபோதும் மறக்க முடியாது.

என்னைப் பண்ணை வேலைக்கு சேர்த்துவிட்டால் கடன் கொடுப்பதாகச் சிலர் கூறினார்கள். வாங்கும் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத பட்சத்தில், புறம்போக்கு இடத்திற்காக வாய்க்கப்பட்ட மனைப்பட்டாவை வைத்து நாக்கு வழிக்கவா முடியும் என்ற சிலர் கேட்டார்கள். பல வருடங்களாக மாட்டுச் சாணம் அள்ளி அம்மா உழைத்து வந்த கோனார் சாதி குடும்பங்களும், உழவுப் பண்ணைக்காக அப்பா வேலை செய்து வந்த கள்ளர் சாதிக் குடும்பங்களும் கூட, உதவ முன்வரவில்லை. தலித்துகள் படிக்கக் கூடாது என்பதில் சாதி இந்துக்கள் தொலை நோக்குடன் சிந்திக்கிறார்கள் என்பதைக் காலம்தான் எனக்கு உணர்த்தியது. அதற்கான வழியைத் திறந்தது, மார்க்சியமும் பெரியாரியமும்தான். ●

*- பேட்டி அடுத்த இதழிலும் தொடர்கிறது*

**❝ பல்வேறு அவமானங்களைச் சுமந்து கொண்டுதான் அப்பள்ளியில் படிப்பை முடித்து வெளியேறினேன். கள்ளர் சாதி மாணவர்களால் பல்வேறு சமயங்களில் நான் மிரட்டப்பட்டபோது, அவர்களைக் கடுமையாக எச்சரித்து எனக்கு ஆறுதலாகப் பேசிய ஆசிரியர்களும் உண்டு. அவர்களில் திரு. கன்னியப்பன், திரு. அரசன் ஆகிய செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்களால்தான் மூன்று வருடங்களும் நான் அப்பள்ளியில் தொடர்ந்து படிக்க நேர்ந்தது. ❞**

வே. மதிமாறன்

எழுதிய

## 'பாரதி'ய ஜனதா பார்ட்டி

இரண்டாம் பதிப்பு

## வெளிவந்துவிட்டது




**பெரியார், அம்பேத்கர் போன்றவர்கள் தம் வாழ்நாளில் சாதி, மதம், புராணங்கள், சடங்குகள் எனப் பார்ப்பனியச் சுரண்டலுக்கு எதிராக செய்த நடவடிக்கைகளைப் பின்னுக்குத் தள்ளி, பாரதி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் போலி சீர்திருத்தக் கருத்துகளைத் தன் பாடலில் சொல்லியதை வைத்து - 'மகா சீர்திருத்தவாதி, புரட்சிக்காரன்' என்று மெத்தப் புகழ்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இப்படி இருக்கிற பாரதி ஆதரவாளர்களையும், பாரதியையும் அம்பலப்படுத்தி வந்த இந்த நூலை, இரண்டாம் பதிப்பாகக் கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.**

●

**வெளியீடு : 'அங்குசம்'**
**15, எழுத்துக்காரன் தெரு**
**காலடிப்பேட்டை, திருவெற்றியூர்**
**சென்னை - 600 019**

**விலை : ரூ. 50**



படிப்பகம்

www.padippakam.com

# நீதியைத் தேடும் மேலவளவு

காலம் கடந்த நீதி, நீதியே அல்ல. மேலவளவு வழக்கில் அதுதான் நடந்திருக்கிறது. மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன் உட்பட ஆறு தலித்துகள் கொல்லப்பட்டது, மிகக் கொடூரமானதொரு குற்றம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது முதல் - குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கியது வரை, இவ்வழக்கில் சாதி இந்துக்களுக்கு எதிராக நெடிய தொடர் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில், ஒரு முன்னாள் பிரதமர் கொல்லப்பட்டதாக அணுகிய அரசும் நீதித் துறையும், சமூகத்தின் விளிம்பில் வாழும் தலித்துகள் கொல்லப்பட்டதை வெறும் கொலை வழக்காகக்கூட, பார்க்கத் தவறுவது ஏன்? சாதியப் பாகுபாடு குற்றங்களிலும் தொடர்வது துயரமானது. நன்கு அறியப்பட்ட மேலவளவு வழக்கின் நிலையே இதுவென்றால், நாள்தோறும் நடைபெறும் தலித்துகள் மீதான அடக்குமுறையை - அரசும் நீதித் துறையும் எப்படித் தடுக்கும்?

'வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி, இவ்வழக்கில் தண்டனை வழங்க முடியாது' என்றது சேலம் நீதிமன்றம். காஞ்சி சங்கராச்சாரி வழக்கில், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கே.டி.எஸ். துள்சி அரசுத் தரப்பில் வாதாடியதை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், மேலவளவு வழக்கில் மூத்த வழக்கறிஞரும் மனித உரிமை ஆர்வலருமான கே.ஜி. கண்ணபிரான் வாதாடுவதை ஏற்றுக் கொள்ளாதது ஏன்?

வழக்கறிஞர் ரத்தினம் தலைமையிலான வழக்கறிஞர் குழுவின் விடா முயற்சியும் அர்ப்பணிப்பு நிறைந்த போராட்டமும் - மேலவளவு வழக்கில் நீதியை நிலைநாட்டும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. இந்தப் போராட்டத்தின் பதிவை அறிந்து கொள்வதும், அநீதிக்கு எதிராக உரக்க குரல் எழுப்புவதும் - மனித உரிமைகளின் அடிப்படையாகும்.

*தலித் மக்கள் மீதான சாதி - தீண்டாமை வெறித் தாக்குதல்கள், தமிழகத்தில் ஒரு கொடூர வரலாற்றுப் போக்கையே உருவாக்கி உள்ளன. கீழ் வெண்மணி போன்ற கொடூரங்களை நாம் மறந்து விடக் கூடாது. விடுதலை உணர்வை வலுவாக்கவே நடப்புகளைப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. மேலவளவு வழக்கு பற்றிய செய்தியை ஏடுகள், தமிழகத்தில் பரவலாக எடுத்துச் சென்றுள்ளன. ஆனால், முக்கிய அம்சங்கள் வெளிப்படுத்தப்படாத நிலையே இதில் உள்ளது. பல பகுதிகளிலிருந்து வழக்கு பற்றி தெரிந்து கொள்ளும் அக்கறை வெளிப்படுகின்றது. எனவேதான் இது குறித்த தகவல்களைத் தொகுத்து வருகிறோம்.*

**■ பொ. ரத்தினம்**

1996 : மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலவளவு கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவி, தலித் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 10.9.96 : திரு. முருகேசன் மற்றும் சிலர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். 13.9.96 : முருகேசன் உட்பட வேட்பு மனு செய்தவர்கள், ஆதிக்க சாதியினர் சிலரின் மிரட்டலுக்குப் பயந்து, மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். 26.9.96 : மேலூர் வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த சமாதானக் கூட்டத்தில், தலித் மக்கள் சார்பிலும் கள்ளர் இனத்தினர் சார்பிலும் அரசு ஆணைக்குக் கட்டுப்படுவதாக எழுத்து மூலம் உறுதி அளித்தனர். 9.10.96 : அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் நடைபெறவில்லை. பயத்தின் காரணமாக தலித் மக்கள் பங்கேற்க மறுத்தனர். 28.12.96 : மறு அறிவிப்பின்படி தேர்தல் நடைபெற்றது. முருகேசன் உட்பட 8 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். அன்று கலவரக்காரர்கள் மக்களைத் தாக்கி ஓட்டுப் பெட்டிகளைத் தூக்கிச் சென்று விட்டனர். எனவே, தேர்தல் தடைபட்டது.

31.12.96 : மீண்டும் தேர்தல் நடைபெற்றது. அதே 8 பேரின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். காவல் துறையின் கூடுதல் பாதுகாப்போடு தேர்தல் நடந்தது. வாக்களிப்பில் தலித் மக்கள் மட்டுமே கலந்து கொண்டனர். மாற்றுச் சாதியினர் தேர்தலைப் புறக்கணித்தனர். முருகேசன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊராட்சி மன்ற அலுவலகம் கள்ளர் சமூகத்தினர் வசிக்கும் பகுதியில் இருப்பதால், முருகேசனால் அங்கு செல்ல முடியாத சூழல் தொடர்ந்தது. ஆனால், படிப்படியாக தலைவர் முருகேசனிடம் மாற்றுச் சமூகத்தினர் பழகி வந்தனர். ஊராட்சி மன்ற ஒப்பந்தப் பணிகளைப் பெற்று, அவர்கள் முருகேசனுடன் இயல்பாகப் பழகி வந்தனர்.

30.6.1997 : மேலவளவு தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து பலவிதச் சிக்கல்களை தலித் மக்கள் சந்தித்து வந்தனர். 10.9.96 இல், மூன்று தலித்துகளுடைய வீடுகள் தீயிடப்பட்டன. இதற்கு நிவாரணம் பெற, முருகேசன் பாதிக்கப்பட்டவர்களை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அன்று மாவட்ட ஆட்சியர் இல்லாததால் அவரது உதவியாளரைப் பார்த்தனர். அங்கு வந்திருந்த மேலவளவு மனோகரன் (செட்டியார் சமூகம்), இவர்கள் எந்தப் பேருந்தில் ஊர் திரும்புவார்கள் எனக் கேட்டு, கே.என்.ஆர். பேருந்தில் முருகேசன் உட்பட மற்றவர்களும் ஊர் திரும்ப உள்ளதைத்



படிப்பகம்

www.padippakam.com

தெரிந்து கொண்டார். அவ்வாறே அந்தப் பேருந்தில் புறப்பட்டனர். மேலூர் வந்ததும் குற்றவாளிகள் சிலரும் தலித் சமூகத்தைச் சார்ந்த சிலரும் பேருந்தில் ஏறிக் கொண்டனர். வண்டி அக்ரகாரம் பழைய கள்ளுக் கடை மேடு அருகே வந்ததும், பேருந்தில் வந்த துரைப்பாண்டி என்பவர், ஓட்டுநரை வண்டியை நிறுத்தும்படி கூச்சல் போட்டார். அதே நேரம், சென்னகரம்பட்டி ராமர் தலைமையில் சுமார் 30 பேர் கொண்ட கும்பல் வண்டியை ஆயுதங்களுடன் சூழ்ந்து கொண்டது.


பேருந்தில் வந்த முருகேசன், ராஜா, செல்லத்துரை, சேவகமூர்த்தி, மூக்கன் (ஊராட்சி மன்ற துணைத் தலைவர்), பூபதி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். முருகேசன் தலையை உடம்பிலிருந்து தனியாக வெட்டி எடுத்து - அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிணற்றில் போட்டனர். கொல்லப்பட்டவர்களில் முருகேசன் மற்றும் ராஜா இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள்.

25.9.97 : வழக்குப் பதிவு செய்யப்பட்டு மா. சுப்பிரமணியன் என்ற துணைக் கண்காணிப்பாளர் புலன் விசாரணையை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக காவல் துறையின் குழுக்கள் செயல்பட்டன. 85ஆவது நாளில் 25.9.97 அன்று குற்றப் பத்திரிகை 41 பேர் மீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. (90 நாட்கள் முடிந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாதிருந்தால், கைதானவர்களை ஜாமீனில் தவிர்க்க முடியாமல் விட்டாக வேண்டும் என்பது சட்ட விதி) குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ஜெயராமன், பாம்பு கடித்து இறந்து விட்டார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களது பட்டியலில் 40 பேர் காட்டப்பட்டனர்.

9,27.3.98 : உயர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீன் மனு போட்டிருந்தனர். நீதிபதி திரு. ஆர். ராமமூர்த்தி முன்னதாக பெரும்பான்மை மனுக்களில் உத்தரவிட்டார். கடைசி மனுவில் ஜாமீன் அளித்து நீதிபதி திரு. கே. நடராஜன் உத்தரவு வழங்கினார். சிலருக்கு நிபந்தனையற்ற ஜாமீன் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஊருக்கே சென்று தங்கிக் கொள்ள வழி செய்திருந்தது. தலித் மக்கள் பீதியும் பயமும் அடைந்தனர்.

24.9.98 : இந்தச் சூழலில், உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் 75 பேர் கையெழுத்திட்டு ஜாமீனை ரத்து செய்ய விசாரணை நடத்தும்படி தலைமை நீதிபதி திரு. மன்மோகன் சிங் லிபரான் அவர்களிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தனர். அவரும் அந்த மனுவை இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் விசாரிக்க வழக்குப் பட்டியலில் சேர்த்தார். ஆனால், அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு. ஜெயராம் சவுத்தா மற்றும் திரு. வி. பக்தவச்சலு ஆகியோர் மனு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என 24.9.1998 அன்று முடிவு செய்து தள்ளுபடி செய்தனர். அரசுத் தரப்பிலும் ஜாமீனை ரத்து செய்யத் தேவை இல்லை எனவும், வழக்கு விசாரணையைத் தொடங்க ஏற்பாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பின் மீது இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் மேல்முறையீடு



முருகேசன்

செய்யப்பட்டது. நீதிபதிகள் திரு. கே.டி. தாமஸ், டி.பி. மோஹபத்ரா ஆகியோர் அடங்கிய தலைமை நீதிமன்ற பெஞ்ச் 8.2.2000 அன்று, உயர் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்தது முறையல்ல என்றது. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி 75 வழக்கறிஞர்கள் கொடுத்த மனுவை தன்னிச்சையாக செய்யும் அதிகாரத்தின்கீழ் நீதிமன்ற விசாரணைக்குப் பட்டியலில் சேர்த்தது சரிதான் என்று தீர்ப்பளித்தது. அத்துடன் மீண்டும் அந்த மனுவை விசாரித்து ஜாமீனை ரத்து செய்யலாமா? அல்லது கூடாதா? எனத் தகுதி அடிப்படையில் முடிவு செய்யவும் மனுவைத் திருப்பி உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது.

10.12.99 : பேருந்தில் பயணம் செய்து வெட்டுக்காயம் பட்ட கிருஷ்ணன் என்ற தலித், வழக்கில் முதல் தகவல் அறிக்கைக்கான புகார் செய்திருந்தார். அவரை சென்னைக்கு அழைத்து வந்து அவர் பெயரில் உயர் நீதிமன்றத்தில் சி.பி.அய். விசாரணை கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. காவல் துறையினர் அவரிடம் எதுவும் எழுதாத 7 வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அப்பாவிகளின் பெயர்களைக் குற்றம் செய்ததாக எழுதிக் கொண்டனர் என்று ரிட் மனுவில் சொல்லியுள்ளார். எனவே, சி.பி.அய். விசாரித்தால் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிய முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த ரிட் மனுவில் காஞ்சிவனம் என்ற சாட்சியின் மனு பாதிக்கப்பட்டோர் சார்பாக தாக்கல் செய்யப்பட்டது. கிருஷ்ணனுக்கு எதிர்த் தரப்பினர் சிலவற்றை செய்து கொடுத்து லாபம் பெற்றுள்ளதாலும், பயத்தாலும் அப்படி தவறான ரிட் மனுவைப் போட உடன்பட்டுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டது. அந்த ரிட் மனுவை தகுதியற்றது என்று உயர் நீதிமன்றம் டிசம்பர் 1999 இல் தள்ளுபடி செய்தது.

14.12.2000 : வழக்கை மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றி சாட்சிகளை விசாரித்தால்தான் பயமின்றியும் பாதுகாப்பாகவும் சாட்சியம் அளிக்க வாய்ப்பாக அமையும் என முருகேசனின் அண்ணன் கருப்பையா, உயர் நீதிமன்றத்தில் மனு செய்தார். அத்தோடு ஈரோடு வழக்கறிஞர் திரு. திருமலை ராஜனை அரசு சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கக் கொடுத்த மனுவை அரசு முடிவு செய்யாமல் இருந்ததால், அவரை நியமிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிடவும் மனுத் தாக்கல் செய்திருந்தார். இரு நீதிபதிகளடங்கிய பிரிவு, வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து மாற்றி, சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடத்த உத்தரவிட்டது. அத்துடன் ஈரோடு வழக்கறிஞர் திரு. திருமலை ராஜனை அரசு சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கக் கோரும் மனுவில் நியாயம் இருப்பதாகச் சுட்டிக் காட்டியது. இதனை ஏற்று அரசு அவரை சிறப்பு வழக்கறிஞராக மேலவளவு வழக்கை விசாரணை நீதிமன்றத்தில் நடத்த அரசாணை வெளியிட்டது.

5.2.2001 : சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் (பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 இன் கீழ் அறிவிக்கப்பட்ட நீதிமன்றம்) வழக்கு ஆவணங்கள் பெறப்பட்டு வழக்கு எண்.



படிப்பகம்

www.padippakam.com

எஸ்.சி.10/2001 கொடுக்கப்பட்டது. 19.3.1001 : சாட்சிகள் மேல வளவில் இருந்தால் ஆபத்து எனக் கருதி, நாமக்கல் பகுதிக்கு வந்து தங்கி இருந்தனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதி களை - அக்கறையாளர்களும், வழக்கறிஞர்களும் செய்து கொடுத் தனர். அவர்கள் உணர்வு ரீதியாகத் தங்களை தயார் செய்து கொண் டனர். பயம் நீங்கி பாதுகாப்பான சூழலில் தெளிவாகி இருந்தனர்.

19.3.2001இல் சேலம் நீதிமன்றத்தில் விசாரணை என நாள் குறிக்கப்பட்டது. ஆனால், அன்று சாட்சிகள் நீதிமன்றம் செல்ல முடியவில்லை. நீதிமன்றம் 2.4.2001-க்கு விசாரணையைத் தள்ளி வைத்தது. 2.4.2001 : இடைப்பட்ட நாளில் சாட்சிகள் மேலவளவு சென்றிருந்தனர். அவர்களில் ஒருவரது மனநிலையை மாற்றி இருந்தார்கள். விசாரணையில் சாட்சி சொல்ல அழைத்து வருவதில் சிரமம் ஏற்பட்டது. ஒரு வழியாக சமாளிக்க முடிந்தது. முதல் 3 சாட்சிகள் நன்றாக சாட்சியம் அளித்தனர். 3.4.2001 : 4ஆவது சாட்சி சம்பவத்தை மாற்றிச் சொன்னார். அவர் பிறழ் சாட்சியாகக் கருதப்பட்டார். சாட்சிகள் 5 முதல் 10 வரை சம்பவம் குறித்து நல்ல முறையில் சாட்சியம் அளித்தனர். 11ஆவது சாட்சி மாற்றிச் சொல்லி பிறழ் சாட்சியானார். சம்பவத்தைப் பார்த்த கண்ணுற்ற சாட்சிகளாக 11 பேர் சாட்சியம் அளித்தனர். அரசுத் தரப்பு சாட்சிகளாக மொத் தம் 50 பேர் (அதிகாரிகள் உட்பட) சாட்சியம் அளித்தனர். எதிர்த் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 13.6.2001 அன்று புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் முடிந்தது. இத்தோடு அரசுத் தரப்பு விசாரணை முடிந்தது. அரசுத் தரப்பு சிறப்பு வழக்கறிஞரான திரு. பி. திருமலை ராஜன், வழக்கறிஞர் திரு. ப.பா. மோகன் ஆகியோரது பங்களிப்பு, விசாரணை நீதிமன்றத்தில் சிறப்பாக இருந்தது. பல பகுதிகளிலிருந்தும் வழக்குரைஞர்கள் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் ஒத்துழைத்தனர்.



க. ராஜா

26.6.2001 : அன்று அரசு சாட்சி 1 - கிருஷ்ணன் எதிர்த் தரப் பினரது கோரிக்கையின்படி, நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு மீண்டும் விசாரிக்கப்பட்டார். அதே போல் சாட்சி 3 - சின்னையாவும் வரவழைக்கப்பட்டார். இருவரும் 2.4.2001இல் மிரட்டப்பட்டதால் மாற்றிச் சொன்னதாக குறிப்பிட்டதால், பிறழ் சாட்சியாகக் கருதப்பட்டனர். விசாரணை நீதிமன்றம் இவர்களது சாட்சியத்தை முழுமையாக நம்பத் தகுதியற்றவை என ஒதுக்கி விட்டது. இதனால் பாதிக்கப்பட்டோர் வழக்கின் வலு ஓரளவு பாதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில் சாட்சிகள் புலன் விசா ரணையில் சொல்லியுள்ளவற்றை ஏற்றுக் கொள்ளலாம் என்றும், நாட் கள் கடந்த பின் வரவழைக்கப்பட்டு, சாட்சிகள் மாற்றிச் சொல்வதை ஏற்கத் தேவையில்லை, முன்னர் அளித்த சாட்சியத்தை நம்பலாம் எனவும் தலைமை நீதிமன்றத் தீர்ப்புகள் சில உள்ளன.

26.7.2001 : விசாரணை நீதிமன்றம் நீதிபதி திரு. ஏ.ஆர் ராம லிங்கம் (தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றுகிறார்) 17 பேருக்கு ஆயுள் தண்டனை கொடுத்தார். மற்ற 23 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் சதித் திட்டத்தை செயல்படுத்திய குற்றம் நிரூபிக்கப்படவில்லை எனத் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது. அதே போல், பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடு மைத் தடுப்பு) சட்டம் 1989 இன் பிரிவின் கீழான குற்றம் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடு குறித்து எதுவும் தீர்ப்பில் சொல்லப்படவில்லை.



பூபதி

ஆகஸ்ட், செப்., 2001 : ஆயுள் தண் டனை கொடுக்கப்பட்ட 17 பேரும் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள் ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் விடு தலையாகியுள்ள 23 பேர் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு அரசு இந்த வழக்கில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. விடுதலையாகியுள்ளவர்கள் சம்பந்தமாக அரசு மேல் முறையீடு செய்ய சட்ட ரீதியான அடிப்படை ஏதும் இல்லை எனத் தெரிவித் துள்ளது. 27.8.2001 : ஆயுள் தண்டனை பெற்ற 17 பேரின் ஜாமீன் மனுவில் முதல் மனுவை நீதிபதிகள் திரு. ஜெகதீசன் மற்றும் திரு. மலை சுப்ரமணி ஆகியோரடங்கிய பிரிவு விசாரித்தது. காவல் ஆய் வாளர் புகாரைப் பதிவு செய்த முறையில் முரண்பட்ட போக்கு உள்ளதாக விரிவாக உத்தரவில் விவாதித்து ஜாமீன் கொடுத்தது. பின்னர் மற்றவர்களுக்கு நீதிபதிகள் திரு. என். தினகரன் மற்றும் திரு. பக்தவச்சலு அடங்கிய பெஞ்சு ஜாமீன் கொடுத்தது. தண்டிக் கப்பட்ட 17 பேரும் ஜாமீனில் வந்தனர்.

இந்த ஜாமீன் உத்தரவுகள் மீதான மேல் முறையீட்டை மனுதார ராக உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் 12 பேர், இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இவர்களில் இருவருக்கு மிரட் டல் கடிதங்கள், தனித்தனியாக மேலவளவு அஞ்சல் நிலைய முத்திரையுடன் வந்தன. அந்தக் கடிதங்களில் தலைமை நீதிமன்றத் தில் தாக்கல் செய்த மனுக்களை திரும்பப் பெறாவிட்டால், சென்னைக்கு வந்து கொலை செய்வது தங்களுக்கு சுலபமான வேலைதான் எனத் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்ணும் கொடுக்கப்பட்டிருந்தது. இவற்றை காவல் துறை உயர் அதிகாரி களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டும், எவ்வித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. 11.2.2005 அன்று இந்தியத் தலைமை நீதிமன்றப் பிரிவொன்றின் நீதிபதிகள் திரு. பி.என். அகர் வால் மற்றும் திரு. பி.கே. பாலசுப்ரமணியன் ஆகியோர் தண்டனை அளிக்கப்பட்ட 17 குற்றவாளிகளுக்கு மேல்முறையீடு காலத்தில் ஜாமீன் வழங்கப்பட்டதை ரத்து செய்து உத்தரவிட்டனர். அதனடிப் படையில், ஜாமீனில் இருந்த 17 பேரும் சரணடைந்து தற்போது சிறையில் உள்ளனர்.

7.10.2004 : முருகேசனின் அண்ணன் கருப்பையா, தமிழ் நாடு அரசுக்கு 10.8.2001 தேதியிட்ட மனு மூலம் திரு. கே.ஜி. கண்ணபிரானை (ஆந்திர மாநில உயர் நீதிமன்றத்தில் மூத்த வழக் கறிஞராக உள்ளவர்) மேலவளவு வழக்கில் சென்னை உயர் நீதி மன்றத்தில் போடப்பட்டுள்ள மேல்முறையீடு மனுக்கள், மற்ற மனுக்கள் ஆகியவற்றில் அரசு சிறப்பு வழக்கறிஞராக செயல்பட நியமிக்க கேட்டுக் கொண்டார். அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததால், கருப்பையா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அரசுக்கு தக்க உத்தரவிட கேட்டுக் கொண் டார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி திரு. அசோக்குமார், இந்த வழக்கில் சட்டப் பிரச்சனை இருப்பதாகவும் அர சுக்கு நிறைய செலவாகும் எனவும் குறிப் பிட்டு, தலைமை நீதிபதிக்கு (நீதிபதி திரு. பி. சுபாஷன் ரெட்டி) வழக்கை மாற்றி



மூக்கன்



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பி வைத்தார். தலைமை நீதிபதி, நீதிபதிகள் திரு. பி. சதாசிவம் மற்றும் திரு. எஸ்.ஆர். சிங்காரவேலு ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றப் பிரிவு விசாரிக்கும்படி உத்தரவிட்டார். தமிழ் நாடு அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் திரு. அய். சுப்பிரமணியம், இந்த வழக்கைத் திறமையாக நடத்தும் தகுதி பெற்றவர்; அரசுத் தரப்பு வழக்கறிஞர் மற்றும் அவரது அலுவலகமும் முழுத் தகுதியையும் போதுமான வசதிகளையும் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு, மனுவின் மீதான விசாரணை முடிக்கப்பட்டது.

9.8.2005 : உயர் நீதிமன்றத்தில் மேலவளவு வழக்கில் தண்டிக்கப்பட்டோரது மேல்முறையீடு மனுக்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் சார்பான மனுக்கள் ஆகியவை - இரு நீதிபதிகளடங்கிய பெஞ்சின் (நீதிபதிகள் திரு. எம். கற்பக விநாயகம் மற்றும் திரு. எஸ்.ஆர். சிங்காரவேலு) வழக்குப் பட்டியலில் காட்டப்பட்டிருந்தது. நீதிபதி திரு. கற்பக விநாயகத்தின் சகோதரர் வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்பிரமணியம் மேல்முறையீட்டு மனுவில் ஒருவருக்கு வழக்கறிஞராக ஆஜர் ஆவதற்கான ஆவணத்தை 9.8.2005இல் தாக்கல் செய்துள்ளார். எனவே, அந்த நீதிபதிகள் இந்த வழக்கைத் தாங்கள் விசாரிக்க முடியாத நிலை ஏற்பட்டதால், வழக்குப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

16.11.2005 : அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞராக இருந்த மூத்த வழக்கறிஞர் திரு. அய். சுப்பிரமணியம் விலகிக் கொண்டார். மூத்த வழக்கறிஞர் திரு. கே. துரைசாமி, அரசுக் குற்றவியல் வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். காஞ்சிபுரம் சங்கராமன் கொலை வழக்கில் ஜாமீன் மனு மீதான அரசுத் தரப்பு விவாதத்தை நடத்த தலைமை நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராக உள்ள திரு. கே.டி.எஸ். துள்சி, டில்லியிலிருந்து அழைத்து வரப்பட்டார். கோவையில் நடைபெற்ற கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட திரு. ஜான் பாண்டியன் உட்பட 11 பேரின் மேல்முறையீடு மனுவில் அரசு சார்பில் வாதிட, டில்லியிலிருந்து மூத்த வழக்கறிஞர் திரு. நாகேஸ்வரராவ் அழைத்து வரப்பட்டார். இவற்றைச் சுட்டிக்காட்டி, வழக்கறிஞர் குழு 16.11.2005 அன்று தமிழ் நாடு அரசு உள்துறை செயலாளரிடம் - திரு. கே.ஜி. கண்ணபிரானை அரசு சிறப்பு வழக்கறிஞராக மேலவளவு வழக்கில் நியமிக்க மனுவைக் கொடுத்தனர். மூத்த வழக்கறிஞர் திரு. கே. துரைசாமியும் அரசு வழக்கறிஞர் பதவியி லிருந்து விலகிக் கொண்டதையும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

23.11.2005 : நீதிபதிகள் திரு. ஆர். பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. எம். தணிகாச்சலம் ஆகியோரடங்கிய பெஞ்ச் வழக்கு, பட்டியலில் மேலவளவு வழக்கின் மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் தரப்பு மனுக்கள் காட்டப்பட்டிருந்தன. இத்தோடு பாதிக்கப்பட்ட தலித் மக்கள் சார்பில் போடப்பட்ட இரு ரிட் மனுக்களும் இடம் பெற்றிருந்தன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பிரிவு 401(3)


சேவுக மூர்த்தி


செல்லத்துரை

> **“ ஒரு வழக்கின் ஆவணங்களை வைத்து அரசு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் நிலையில், விடுதலையானவர்களுக்குத் தண்டனை கொடுக்க சட்டப் பிரிவு வழி செய்கிறது. ஆனால், பாதிக்கப்பட்டோர் அதே ஆவணங்களை வைத்து மனுப்போடும் நிலையில், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு எதிர்மறையாக்கப்பட்டுள்ளது. ”**

(Criminal Procedure Code 1973) உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டவர்களை, சாட்சியங்கள் இருந்தாலும் தண்டனை கொடுக்க முடியாது என்கிறது. எனவே, உயர் நீதிமன்றம் வழக்கை கீழ் நீதிமன்றத்திற்கு மீண்டும் விசாரித்து முடிவெடுக்க திருப்பி அனுப்பி வைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. அரசு மேல் முறையீடு செய்தால், விடுதலையானவர்கள் பற்றிய சாட்சியங்கள் இருக்கும் பட்சத்தில் - உயர் நீதிமன்றம் தண்டனை கொடுக்கலாம் என்கிறது சட்டப் பிரிவு. ஒரு வழக்கின் ஆவணங்களை வைத்து அரசு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் பட்சத்தில் விடுதலையானவர்களுக்குத் தண்டனை கொடுக்க சட்டப் பிரிவு வழி செய்கிறது. ஆனால், பாதிக்கப்பட்டோர் அதே ஆவணங்களை வைத்து மனுப்போடும் பட்சத்தில், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு எதிர்மறையாக்கப்பட்டுள்ளது. மேலவளவு வழக்கில் அரசுத் தரப்பில் விடுதலையானவர்களுக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்டோர் தரப்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 401 (3) கு.ந.ச. அரசியல் சட்டப் பிரிவுகளுக்கு எதிரானது என அறிவிக்கக் கோரி, இரு ரிட் மனுக்கள் போடப்பட்டுள்ளன. இந்த இரு மனுக்களையும் நீதிபதிகள் வழக்குப் பட்டியலில் இருந்து நீக்கி விட்டனர்.

6.12.2005 : 16.11.2005 நாளிட்ட மனுவின் அடிப்படையில் பொதுநல வழக்காக உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. தலைமை நீதிபதி திரு. ஏ.பி. ஷா மற்றும் நீதிபதி திரு. இப்ராகிம் கலிபுல்லா ஆகியோரடங்கிய முதல் பெஞ்சு இந்த மனுவை விசாரித்தது. அரசுத் தரப்பில் குற்றவியல் மூத்த வழக்கறிஞரை நியமிக்க வேண்டிய பின்னணி இந்த வழக்கிற்கு இருப்பதாகச் சுட்டிக்காட்டி, ஒரு வார காலம் விசாரணையை முதல் பெஞ்ச் தள்ளி வைத்தது. 6.12.2005 அன்று தமிழ் நாடு அரசின் அட்வகேட் ஜெனரல் திரு. என்.ஆர். சந்திரன், மேலவளவு வழக்கு மனுக்களில் உயர் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் ஆஜர் ஆவார் என முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைப் பதிவு செய்து ரிட் மனுவை முதல் பெஞ்ச் தள்ளுபடி செய்தது.

**மேலவளவு வழக்கில் தலித் மக்களுக்கு உரிய நீதி கிடைப்பதற்காக தளர்வின்றிப் பணிகளைத் தொடர வேண்டி உள்ளது. இந்தப் பணியில் அக்கறையுள்ள வழக்கறிஞர்கள் மட்டுமல்லாமல் தலித் அமைப்புகள், சமூக அக்கறையாளர்கள், சமூக நீதிக்கான குழுக்கள் போன்றவை பங்கேற்கிறார்கள். சட்டவரையறைகள் சமூக நீதிக்கு எதிராக இருக்கும் பட்சத்தில், அதனை மாற்றி அமைக்க கவனம் காட்டப்படுகிறது. சமூக நீதிக்கான நீதிமுறையை வளர்த்தெடுக்கும் பார்வையோடு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை வெறும் வழக்காக மட்டும் பார்க்காமல், தலித் மக்களது விடுதலைக்கானப் பணிகளில் முக்கியமான அம்சமாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ●**



படிப்பகம்

www.padippakam.com

# மடல்:




■ மாண்புமிகு கே.ஆர். நாராயணனை ஓவியமாக வெளியிட்டு, அவருடைய பொருட்செறிவு மிக்க இறுதி உரையை முழுமையாக வெளியிட்டு, 'தலித் முரசு' பெருமையை தக்கவைத்துக் கொண்டுள்ளது. 'இந்தியா நாறுகிறது' மிகச் சரியானப் பதிவு. சாதி அமைப்புதான் மலமள்ளும் தொழிலை உருவாக்கி இருக்கிறது என்பதை பெசவாடா வில்சன் நெற்றியில் அடித்தாற்போல் சொல்லியிருக்கிறார்.

**எம். உத்தமன்**
*வெள்ளேரித்தாங்கல்*

■ கையால் மலம் அள்ளும் மக்கள் குறிப்பாகப் பெண்கள் படும் துயரம், என் நெஞ்சை விட்டு அகலவில்லை. எதற்கெல்லாமோ அறிக்கைவிடும் அரசியல் கட்சிகள், தேவையில்லாத அற்பக் காரணங்களுக்குப் போராட்டம் நடத்தும் அரசியல் கட்சிகள், அமைப்புகள் - கையால் மலமள்ளும் வழக்கத்தை முற்றாக ஒழிக்கப் போராட மறுப்பது ஏன்?

**எஸ்.வி. பஞ்சாட்சரம்**
*ராமேஸ்வரம்*

■ டிசம்பர் 2005 'தலித் முரசு' இதழ் என்னை மிகவும் பாதித்தது. கண்ணீர் சிந்த வைத்தது. கைகளால் மலமள்ளும் அவலமும், வாழத் துடித்த இளந்தளிரராம் சட்டக் கல்லூரி மாணவியை கொடிய கூட்டம் கொலை செய்ததையும் படித்து தூக்கமின்மையால், இதயம் கனத்து விம்முவதால் இதை எழுதுகிறேன். தலித் முரசின் ஒவ்வொரு இதழிலும் யாழன் ஆதியின் கவிதை வரிகள் குத்தீட்டிகளாகப் பாய்கின்றன. மற்றெவ்விதழ்களில் வரும் புதுக் கவிதை வரிகளைவிட, கனத்த தொனியுடன், மனித அவலங்களை வெளிச்சமிடுகிறது. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு அஞ்சலியும், அட்டைப் படத்துடன் தலையங்கமும் தீட்டிப் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளதுடன் - அவரது இறுதி உரையையும் வெளியிட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

**சாகோவி,** *விளாத்திகுளம்*

■ கடந்த அய்ந்தாறு ஆண்டுகளாக 'தலித் முரசு' படித்து வருகிறேன். மிகச் சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது. 'தலித் முரசு' குழுவின் உழைப்பும், அர்ப்பணிப்பும் உண்மையில் பிரமிக்க வைக்கிறது. விளம்பர உலகில், கொள்கைக்காக உறுதியுடன் தொடரும் உங்கள் பயணத்திற்கு எங்களது வாழ்த்துகள்.

**பிரிட்டோ,** *திருநெல்வேலி*

■ எம் மகன் பேரறிவாளன் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பொய்யானக் குற்றச்சாட்டின் பேரில், கமுக்கமாக விசாரிக்கப்பட்டுத் தூக்குத் தண்டனை சிறைவாசியாக, கடந்த 15 ஆண்டுகளாக வேலூர் மத்திய சிறையில்வதைப்பட்டுக்கொண்டுள்ளார். 19 வயதில் அழைத்து அடைக்கப்பட்ட மகனுக்கு இப்பொழுது 34 வயது! 'மல்லிகை' என்னும் எஸ்.அய்.டி. சித்ரவதைக் கொட்டடியில் ''ஒத்துக் கொள், ஒத்துக்கொள்'' என்று எழுதவும் கூசும் வார்த்தைகளால், திட்டியும் கற்பனைக் கெட்டாத முறையில் சித்ரவதைகள் செய்தும் அவர் மிரட்டப்பட்டார்.

1999 ஆம் ஆண்டு சோனியா காந்தி, ''என் கணவர் மரணத்தினால் இந்த நால்வரில் ஒருவரின் உயிரும் பலியாவதை நானோ, என் மகனோ, என் மகளோ விரும்பவில்லை'' என்று மனிதநேயத்துடன் குறிப்பிட்டுள்ளார். இன்றைக்கு நம் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களும், ''மரண தண்டனைக் கைதிகளை வாழ விடுங்கள், அவர்களை சுமையாகக் கருதாமல் தங்களின் எஞ்சிய வாழ்நாளை குடும்பத்துடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

ஒரு மனிதனுக்கு எத்தனை தண்டனை! மரண தண்டனையை எண்ணி, எண்ணி நொடிதோறும் துடிக்கச் செய்து, 15 ஆண்டுகளாக வேடிக்கைப் பார்ப்பது எத்தனைக் கொடுமை. அன்றைக்குப் பலரும் தமிழீழ மக்களுக்கு உதவி செய்தது போல் நாங்களும் செய்தோம் என்பது உண்மை. இதை வைத்துக் கொண்டும், நாங்கள் பெரியார் வழி நடப்பவர்கள் என்பதைக் கொண்டும் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்ட நால்வரில், எம் மகன் பேரறிவாளனையும் இணைத்து விட்டார்கள்.

ஆய்ந்தறிந்து தண்டனை கொடுக்கவில்லை என்பதற்கு தீர்ப்பளித்த தலைமை நீதிபதி, ''அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ள வழக்கு என்பதால் சிலருக்காவது தூக்குத் தண்டனை தரவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது'' என்று கருத்து கூறியதே சான்றாகும். மரண தண்டனை குறித்து 'தலித் முரசு' நவம்பர் இதழில் அட்டைப் படக் கட்டுரை வெளியிட்டது. எனவே, தங்களின் வாசகர்களுக்கு எங்கள் துயரை வெளிப்படுத்தவே இக்கடிதம்.

**அற்புதம் குயில்தாசன்**
*ஜோலார்பேட்டை*

மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி

நாள் : 9.1.2006 திங்கள்

நேரம் : மாலை 6.00 மணி

இடம் : ராஜா அண்ணாமலை மன்றம்
பாரிமுனை - சென்னை

பங்கேற்போர் :

டாக்டர் சர்தார் பூட்டாசிங், பீகார் ஆளுநர்
மற்றும் பல்வேறு முன்னணித் தலைவர்கள்
உரை நிகழ்த்துகின்றனர்

அனைவரும் வருக!

தொடர்புக்கு : நா. கருணாநிதி
98840 - 73907

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர்களின் முன்னேற்றத்திற்கு இந்து கோயில்களைத் தரைமட்டமாக்குக

பெரியார் பேசுகிறார்

நம் திராவிட மக்கள் புத்தி இல்லாதவர்களாக, மடையர்களாக, காட்டுமிராண்டிகளாகவே இருக்கின்றனர். இன்னும் நாம், மதத்தின் பேரால், கடவுளின் பேரால் மட்ட சாதி ஆக்கப்பட்டு இழி நிலையில் இருப்பது பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இப்படி எதனால் காட்டுமிராண்டியோ, இழிமக்களோ ஆனோமோ – அந்த மதத்தையும், கடவுளையும் பற்றிச் சிந்திப்பதே இல்லை. என்ன காரணம்? நம் மக்களுக்குப் புத்தியும் இல்லை – மானமும் இல்லை. இதன் காரணமாகவே ஏமாறுகின்றோம். பரம்பரை பரம்பரையாக நாம் ஏன் கீழ்ச் சாதி? பரம்பரை பரம்பரையாக அவன் ஏன் மேல் சாதி? என்று இந்த அதிசய அற்புதக் காலத்திலும் எவன் சிந்திக்கின்றான்? இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று எங்களைத் தவிர எந்தப் பொதுத் தொண்டுக்காரன் பாடுபட்டான்? எவன் சிந்தித்தான்?

பொதுத் தொண்டன் பொதுத்தொண்டு செய்கின்றேன் என்று கூறுகின்றானே, அவனும் சட்டப்படி – சாத்திரப்படி இழிமகன்தானே! அவனும் பார்ப்பானுக்கு சூத்திரன் என்கிற வைப்பாட்டி மகன் தானே என்று நினைத்து, எவன் பொதுத்தொண்டு செய்கின்றான்? மக்களிடம் சென்று ''நீங்கள் பக்திமான், மேலானவர், தர்ம புருஷன்'' என்று கூறினால் காசு கொடுப்பான். அதை விட்டுவிட்டு, ''நீங்கள் மடையர்கள், கல்லைக் கும்பிடுகின்றீர்கள், சாணியைப் பிள்ளையார் என்கிறீர்கள்'' என்று கூறிக் கொண்டு ''பசிக்குது கொஞ்சம் சோறு கொடுங்கள்'' என்றால் என்ன கூறுவான்? ''உன்னுடைய லட்சணத்துக்குச் சோறு வேறா? போடா போடா'' என்றுதானே கூறுவான்?

இதுவரையில் இந்த நாட்டில் எவரும் செய்யாத தொண்டை நாங்கள்தான் செய்கின்றோம். இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய தொண்டு ஒன்று இருந்தால், இதுதான் என்று நினைத்தபோது வருகின்றோம். இந்த நாட்டு மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்ல, மடமையைத் திருத்த எந்தப் படித்தவன், புலவன் முன் வருகின்றான்? அவனவன் வயிற்றுப் பிழைப்புக்கே தாம் படித்ததைப் பயன்படுத்துகின்றான். மற்றபடி பணக்கார – வட்சாதிபதிகள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லாரும் இதுபற்றிப் பாடுபடுகின்றனரா? இப்படி மக்கள் மூடர்களாய் இருந்தால்தான் நாம் கொள்ளை அடிக்க வசதியாக இருக்கும் என்று கருதிக் கொண்டு இருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் தட்டிப் பேச இங்கு ஆளே கிடையாது. மேல் நாட்டுக்காரன் அவற்றை எல்லாம் விரட்டி விட்டு அறிவுக்குப் பொருத்தமான முறையில் கடவுளையும் மதத்தையும் அமைத்துக் கொண்டான். அதன் காரணமாக, அறிவியலில் அதிசய அற்புதங்களை நாளுக்கு நாள் உண்டாக்கிய வண்ணம் இருக்கின்றான். அந்த நாட்டில் இப்படி எல்லாம் ஆக அங்குக் கடவுள் துறையில் – மதத் துறையில் – அறிவுத் துறையில், மாறுதல் உண்டாக்க அறிஞர்கள் கிளம்பிச் சீர்திருத்தினார்கள். நாம் இத்தனைக் கோயில் – குட்டிச் சுவரினை வைத்துக் கொண்டு சாதித்தது என்ன? நம்மை சைனாக்காரனும் பாகிஸ்தானும் விரட்டுகின்றான். ஆண்டுக்கு 250 கோடி செலவில் பட்டாளத்தை வைத்துக்கொண்டு இருந்தாலும், நேரு (இந்தியாவின் தலைமை அமைச்சர்) நடுங்கிக் கொண்டு இருக்கின்றாரே?

தோழர்களே! ரயில் வந்து 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. பஸ் வந்து 50 வருஷம் ஆகின்றன. இன்னும் தந்தி, ரேடியோ போன்ற வசதிகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன. இன்னும் இதைவிட அறிவியல் அதிசயம் நம் நாட்டிற்கும் வரப்போகின்றது. லண்டனில் நடக்கும் டான்சையோ – சினிமாவையோ இங்கு இருந்து கொண்டே பார்த்துக் களிக்கும்படி 'டெலிவிஷன்' வெகு சல்லிசாக வரப்போகின்றது. இந்த டெலிவிஷனால் லண்டனில் சினிமா, நாடகக்காரர்களுக்குப் பிழைப்புக் குறைந்து கொண்டே வருகின்றதாம். காரணம், பலர் டெலிவிஷன் வாங்கி வைத்துக்கொண்டு வீட்டில் இருந்தே பார்த்துக் கொள்கின்றனர்.

ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் போட்டிப் போட்டுக் கொண்டு, சந்திரமண்டலத்திலும் குடியேற முயற்சி செய்கின்றான். நமக்கு மட்டும் அப்படிப்பட்ட அறிவு இல்லை என்றால், நாம்தான் கல்லைக் கடவுளாகக் கும்பிடுகின்றோமே! மாட்டுச் சாணியையும் மூத்திரத்தையும் பஞ்சகவ்வியம் என்று கலக்கிக் குடிக்கின்றோமே! சாம்பலும் சுண்ணாம்புப் பட்டையும், செம்மண் பட்டையும் அடித்துக் கொள்ளுகின்றோமே! நாம் என்றைக்கு ஈடேறுவது?

முன்னோர்கள் சொன்னார்கள் – மதம் சொல்லுகிறது – ரிஷிகள், மகான்கள் சொல்லுகின்றனர் என்ற கருதாமல், தாராளமாக அறிவுக்கு ஆராய்ச்சிக்கு வேலை கொடுத்து உன் புத்தி சொல்லுகின்றபடி நட என்றுதான் கூறுகின்றோம். ஆனால், புத்தர் ஒருவர்தான் ''உன் புத்திக்கு ஏற்றபடி, அது சொல்லுகின்றபடி நட. முன்னோர்கள் – பெரியவர்கள் – சாஸ்திரம் சொல்லுகிறது என்று கேட்காதே! உன் புத்தி சொல்லுகின்றபடி நட'' என்றார். அதன் காரணமாகவே பார்ப்பனர்கள் புத்த நெறியினை ஒழித்துவிட்டார்கள். அந்தக் கொள்கை இன்று சீனா, ஜப்பான், சிலோன், திபெத் ஆகிய நாடுகளில் இருக்கின்றது. இன்று புத்தன் யார் என்று இங்கு பல பேர்களுக்குத் தெரியாது. இப்படிப் புத்தனுக்குப் பிறகு எவனுமே தோன்றவே இல்லையே! இந்த 2500 ஆண்டில் நாங்கள்தான் தோன்றி பாடுபட்டு வருகின்றோம்.

*10.10.1960 அன்று, தூத்துக்குடியில் ஆற்றிய சொற்பொழிவு*



**❝ நாம் (திராவிடர் – தமிழர்) முன்னேற, மனிதத் தன்மை அடைய – இந்துக் கோயில்களை எல்லாம் இடித்துத் தரை மட்டமாக்கி, குழவிக்கல்லை எல்லாம் உடைத்து ரோட்டுக்குச் சல்லி போட வேண்டும். பார்ப்பான் – சோம்பேறிப் பயல்கள் இந்த நாட்டில் சரித்திரத்தில்கூட இல்லாமல் செய்ய வேண்டும். இந்தக் காட்டுமிராண்டி சாஸ்திரங்களையும் புராணங்களையும் நெருப்பு வைத்துக் கொளுத்த வேண்டும். அப்போதுதான் நம் புத்தியும் விசாலம் அடையும். ❞**



படிப்பகம்

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04 - 06 Posted at Pattika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

www.padippakam.com



# தலித் முரசு

# 2006

**ஜனவரி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 29 | 30 | 31 | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

**பிப்ரவரி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

**மார்ச்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**ஏப்ரல்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**மே**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**ஜூன்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

**ஜூலை**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**ஆகஸ்ட்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**செப்டம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**அக்டோபர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 29 | 30 | 31 | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

**நவம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

**டிசம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

தீண்டத்தகாத மக்களுடைய போராட்டங்களையும் துன்பங்களையும் நான் அறிவேன். விடுதலைக்கான அவர்களுடைய போராட்டத்தில் நான் துன்புற்றதைவிட, அவர்கள் அதிகம் துன்புற்றிருக்கிறார்கள் என்பதையும் அறிவேன். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, நான் வேறு எந்த அறிவுரையையும் அளிக்க இயலாது: போராட்டம், அதிகமான போராட்டம்; தியாகம், மேலும் அதிகமான தியாகமே தேவை. தங்களின் தியாகத்தையும், துன்பங்களையும் கணக்கில் கொள்ளாமல் போராடுவது, மென்மேலும் போராடுவது மட்டுமே - நம்மை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும். வேறெதுவும் பயனளிக்காது.

- டாக்டர் அம்பேத்கர்

படிப்பகம்